ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 13. சமவ சரணச் சருக்கம்

1048. யோசனை பன்னிரண்டின், உம்பர் கோன் தம்பம் காணாப்
பேசொணா வகையில் நின்ற பெருமிதம் அழிந்தது, யார்க்கும்
ஈசனை இறைஞ்சினார்கள், எய்தினார் இறைவன் கோயில்
வீசுவெண் சாமராதி பரிச்சந்தம் முழுதும் விட்டார்

பன்னிரண்டு யோசனை அளவு பரம்தமைந்த சமவ சரணத்தின் முதல் பூமியில், வீதியின் மையத்தில் அமைந்த, தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய அருக பரமனின், மானத் தம்பத்தைக் கண்டபொழுதே, சொல்லற்கரிய வகையில் அனைவரிடத்தும், நிறைந்திருந்த மித்யாத்துவ கர்மமானது அழிந்தது. உடனே அரச குமாரர்கள் இருவரும் தங்களைச் சூழ வந்த அனைத்துப் பரிவாரங்களையும் - சாமரை, வெண்குடை முதலான அரச சின்னங்களையும் விலகச் செய்து இறைவனது ஆலயத்தை அடைந்து மூவுலக நாதனைத் தொழுதனர்.

1049. யானையின் இழிந்து, மானாங் கணத்து, இரு காத வீதி
மானபீடத்தை மார்பின் அளவுள மதிலை எய்திக்
கானுறை கமலப் போதில் கைதொழுது இறைஞ்சி, வாழ்த்தி
ஊனம் தீர் தூயத் தானாம் கணம்புக்கார், கோசம் போயே.

யானை மேலிருந்து இறங்கி குறைந்த உயரமுள்ள தூளிசாலம் என்னும் மதிலைக் கடந்து, அதன் உட்புறமாகிய பிராசாத சைத்ய பூமியை அடைந்து, நான்கு திசைகளிலிருந்தும் உள்நோக்கிச் செல்லுகின்ற, இரண்டு காத அகலமுள்ள வீதிகளின் முகப்பிலே இருக்கும் - மார்பளவு உயரமுள்ள முதல் பலி பீடத்தை அடைந்து, மலர்க்கரங்களால் தொழுது வாழ்த்தி, அங்கிருந்து ஒரு குரோச தூரம் சென்று தூய அழகிய அந்த உட்புற பூமியாகிய பிராசாத நிலத்தின் மையப்பகுதியை அடைந்தனர்.

1050. ஆங்கு அதன் அகத்து வீதி நடுவண், நாற்காதம் ஓங்கி
பாங்கின் மாதிசையில் பன்னீர் ஓசனை காண நின்ற
வாங்குகாந்தம் போல், மானம் வாங்கு நன் மானத்தம்பம்
பாங்கினால், தோரணம், வேதி மங்கலம், பலவும் சூழ்ந்த

அங்கே, வீதிகள் நடுவில், நான்குகாத உயரமுடையதாகி முறைப்படி நான்கு திக்குகளிலும் பன்னிரண்டு யோசனை தூரத்திற்கு தெரியுமாறு உயர்ந்து நின்று தன்னைக் காண்பவர்களது மானகர்வத்தை இரும்பைக் கவரும் காந்தம்போல், தன் பால் வாங்கிக்கொள்ளும் மானத்தம்பங்கள், தோரணங்கள் முறைப்படி அமைய மதில்கள் சூழ்ந்திருக்க அட்ட மங்கலங்கள் அமைந்திருக்க விளங்கின.

1051. வயிரம், நற்படிகம், வயிடூரியம் அடி, நடுவண், உச்சி
உயரத்தின் பாகமோக்கம், படிகம் மேல் கீழ வோக்கம்
வெயில்விடு தாரைக்கீழ்மேல் ஆயிரம் நடுவிரட்டித்
துயரினைக் கெடுக்கும் சித்தப்படிமை நாற்றிசையும் ஆமே.

அந்த மானத்தம்பங்களின் அடிப்பகுதியில் ஒருகாத உயரம் வயிரத்தினாலும், மையத்தில் இரண்டு காத உயரம் படிகத்தினாலும், மேலே ஒருகாத உயரம் வைடூரியத்தினாலும் அமைந்து கீழும் மேலும் ஆயிரம் ஆயிரம் பட்டைகளாகவும் அமைந்திருந்தது. மேலும் அடிப்பகுதியிலும் உச்சியிலும் நாற்புறமும் துன்பத்தைப் போக்கும் சித்த பரமேட்டிகளின் பிரதிமைகள் விளங்கின.

1052. நான்முகப்பூதத்து உச்சி பாலிகைக் கமலப் போதின்
மேல்வைத்த செம்பொன் கும்பத்து உச்சிமேல் பலகைதன்னில்
பால்நிறப்பகடு பாலைப் பதுமைமேல் பொழியத் தேவி
மேல்முடிப் பதுமராகம் இருபதுயோசனை விளக்கும்.

மானத்தம்பத்தின் உச்சியில் அமைந்திருந்த நான்கு முகங்களையுடைய பூதபிம்பத்தின் தலைமேல் பொருந்திய பலகையின் மீது தாமரை மலரைத் தாங்கிய பொன்னாலாகிய பூரண கும்பத்தின் மேல் உள்ள பலகையில் இருந்த இலக்குமி பிரதிமையின் மீது பாலைப் பொழிவதுபோல் வெண்ணிற யானைகள் இருக்கவும், தேவியின் முடிமீது, இருபது யோசனை தூரம் ஒளிவீசக்கூடிய பதுமராக ரத்தினமானது பொருந்தி ஒளிர்ந்தது.

1053. மணிமயமாய சுக்கம் நான்று, மங்கலங்கள் ஏந்தி
அணிபெற நின்ற நான்காம் அந்த மானத்தம்பத்தை
இணையிலார் வலம்கொண்டு ஏத்தி இறைஞ்சிப் போய்க் கோசம்நீல
மணிநிலத்து அகழி மார்பின் அளவுள மதிலைக் கண்டார்.

இலக்குமி அமர்ந்திருந்த பலகையில் இரத்தின மயமான உறிகளில் அட்டமங்கலங்கள் அழகாக அமைந்திருந்தன. சமவ சரணத்தின் முதல் நிலத்தின் மையத்தில், மாபெரும் வீதிகள் நான்கிலும் ஓங்கி நின்ற மானத்தம்பங்களை, இணையற்ற மேருமந்தரர் இருவரும் வலம் வந்து தொழுது அந்நிலத்தின் எஞ்சிய பாதிதூரத்தைக் கடந்து சென்று மார்பளவு உயரமுடைய மதிலையும் நீலமணி போன்று நீர்நிறைந்த அகழியையும் கண்டனர்.

1054. ஆழமும் நிறையும் உண்டேயாகிலும் அலையென்பானில்
ஊழிபேர்ந்தாலும் பேரா இதனையான் ஒழிப்பன் என்று இங்கு
ஆழிவந்து இறைவன் பாதம் அடைந்து பூம்பட்டைப் போர்த்துச்
சூழுந்தான் கிடந்தது ஒத்துத் தோன்றும் இப்பரிகை என்றார்.

அந்த அகழியானது, ஆழமான நீர்நிறைந்திருந்தாலும் அதன் தோற்றம், பெருங்கடலானது ஊழிக்காலத்திலும் நீங்காத அலைகளை நீக்கி அமைதியாக இந்த அகழியில் நிறைந்திருந்து, பூக்களைப் போர்வையாகப் போர்த்துக்கொண்டு, இறைவனது திருவடிகளை அடைந்ததுபோல் தோன்றும் என்றார்.

1055. மணி தெளித்தனைய வாரி வாசவான் சுவையது ஆர்ந்துஅங்கு
அணுகுவார்க்கு ஆழ்ந்து தோன்றி அடைந்தவர் தாள்மாட்டாகிப்
பணி உயிர்விலாது போதில் பயின்று பைம் பொன் செய் வீதி
மணியொளி பரந்து வான விற்களாய் மயங்கு நின்றே.

நீல மணியை நீராக்கியதுபோல் தோன்றும் அகழியின் தண்ணீரானது, அழகும் சுவையும் சேர்ந்தாய், அதில் இறங்கியவர்களின் முழந்தாள் அளவாகி அடிமட்டம் மேடுபள்ளமின்றி, மலர்நிறைந்து தோன்றியது. இரத்தினங்களின் ஒளியினால் நான்கு வீதிகளும் வானவில் போன்று பல வண்ணங்களை உடையதாய் மயங்கச் செய்தன.

1056. காதத்தின் அரை அகன்ற, காதிகைக் கமலம் ஆதிப்
போதைக் கொய்து, அங்கை ஏந்திப் பொன்செய் தோணரம் கடந்து
மேதக்க மணியின் ஆய, பாதத்த வீதி நின்ற
ஆதிகோபுரத்தின் ஆதிநிலை அளவாகி அம்பொன்.

அரைக்காத அளவு அகன்றிருந்த அகழியில் தாமரை முதலிய மலர்களைக் கொய்து கைகளில் ஏந்தி - பொன்னால் அமைந்த வீதிகளில் தோரணங்களைக் கடந்து, அடுத்து வரும் உதயதர கோபுரத்தின் முதல்நிலை அளவு உயரமுடையதும் பொன்னாலும் மணிகளாலும் இயன்றதுமான கோபுரத்தைச் சேர்ந்தனர்.

1057. பாலிகை முதலவாய பரிச்சந்தமுடைய வற்றை
மாலையும் சாந்தும் ஏந்தி வணங்கினராகிப் போகி
சீலம் போல் செம்பொன் இஞ்சிச் சிலைகள் ஈரொன்பது ஓங்கி
மாலைபோல் சூடிக் காதம் அகல்வல்லி வனத்தைச் சேர்ந்தார்

கோபுரங்களுக்கு இருக்கவேண்டிய அனைத்து இலக்கணங்களும் பொருந்திய அந்த கோபுரங்களையும், பொன்னால் அமைந்து, பதினெட்டுவில் உயரம் உடையதும், உயர்ந்தோர் ஒழுக்கம் போல் ஒழுங்காக இருந்ததும் ஆகிய மதிலையும், மாலை, சந்தனம் முதலியவற்றைத்தரித்த அரசிளங்குமாரர்கள் வணங்கி மதிலின் உட்புறத்தில் ஒருகாத அகலமுடைய வல்லி வனத்தை அடைந்தனர்.

1058. வல்லிமண்டபங்கள் பந்தர் வயிரவாலுகத் தலங்கள்
வில் உமிழ்ந்து இலங்கும் பூமி விழுந்த பூவணையின் வீயைப்
புல்லும் வண்டின் ஓசை பூமி தேவனைப் பாடல்போலும்
எல்லையில் இடங்கள் இவ்வாறு இயம்புதற்கு அரியதொன்றே.

அந்த வல்லி பூமியில் மண்டபங்களும், மலர்ப் பந்தர்களும், வயிரங்களே மணலாக அமைந்த ஒளி உமிழ்ந்து விளங்கும் பூமியில் படிந்திருக்கும் மலர்களின் மகரந்தத்தை உண்ணும் வண்டுகளின் ரீங்கார ஒலியானது பூமியே வாய் திறந்து இறைவனைத் துதிப்பதுபோல் இருந்தது. இந்த இடத்தின் பெருமையைச் சொல்லற்கியலாது.

1059. மல்லிகை முல்லை மௌவல் மாலதி மாதவி நல்
பல்லிதழ் பத்தி பித்தி சண்பகம் குறிஞ்சி வெட்சி
சொல்லிய பிறவும் செல்விச் சூட்டெனச் செறியப் பூத்த
வல்லிநன் மலர்க்கை ஏந்தி வந்து கோபுரம் அடைந்தார்

அந்த வல்லி பூமியில் மல்லிகை, முல்லை, வனமல்லி, சிறு சண்பகம், மாதவி, கருமுகை, சண்பகம், குறிஞ்சி வெட்சி முதலிய மலர்க்கொடிகளும் இலக்குமியின் தலைச்சூட்டு போல் நெருக்கமாக மலர்ந்திருந்தன. சிறந்த மலர்களை கைகளில் கொண்டு இருவரும் உதயதரம் என்னும் கோபுர வாயிலை அடைந்தனர்.

1060. காதம்மூன்று இரண்டு உயர்ந்து நீண்டு அகன்று வாய்தல்
காதமாய்ச் சிறப்பு மும்மைப் படிமை முன்னிலைய தாகிச்
சோதியுள் குளித்து வாய்தல் சோதிடத்தேவர் காப்பப்
போதரும் பதாகை சூழ்ந்தது உதய கோபுரம் அதாமே.

அந்தக் கோபுரம் மூன்றுகாத உயரமும், இரண்டு காத அகலமும் வாயிற்புறம் ஒருகாத அகலமும் உடையதாய் அட்டமங்கலங்களைப் பெற்ற நிலைக்கு ஒன்றாக மூன்று ஜினபிம்பங்கள் உடைய மூன்று நிலைகள் உடையதாய் இருந்தது. அதன் வாயிலின் இரு பக்கங்களிலும் அங்குள்ள ஒளியில் தங்கள் ஒளிமங்கி நிற்க, சோதிர் தேவர்கள் காவல் புரியவும், அழகிய கொடிகள் சூழ்ந்ததாய் விளங்கியது.

1061. வில் ஐஞ்ஞூறு அகன்று உயர்ந்து வெள்ளியால் இயன்று சென்னிச்
சொல்லிய வகையினாலே சுருங்கிப் பொன் சூட்டதாகி
வல்லி முந்நிலை அட்டாலைக் கொடியுடை மதிலின் நின்ற
சொல்லிய கோபுரத்தைத் தொழுது பூச்சிதறிப் புக்கார்.

ஐந்நூறு வில்லளவு அடி அகன்று, இரண்டாயிரம் வில் உயரமுடையதாய், வெள்ளியினால் செய்யப்பட்டு, அடியில் மூன்று குரோசமும், மத்தியில் ஒன்றரைக் குரோசமும், தலைப்பில் முக்கால் குரோசமும் அகலமுடையதாகி, பொன்னால் ஆன தலைக்கட்டினைப் பெற்று, அந்தந்த அளவிற்கேற்ப அமைந்த திண்ணைகள் உடைய மூன்று நிலைகளையுடையதாகி, கொடிகளை உடைய உதயதரம் என்னும் மதியில் சேர்ந்து, வீதிகளின் நேரில் நின்ற உதயதர கோபுரத்தை வணங்கி, பூக்களைத் தூவி அதனுள் அமைந்திருந்த வனபூமியை அடைந்தார்கள்.

1062. பலநிறம் பயின்ற பூமி, பரமனது அறிவு போல
உலகெலாம் அடங்கு மேனும், உள்ளிரு காதமாகி
நிலவிய மதிலின்மூலை நின்ற குட்டியங்கள் நான்கில்
பலவனமாகிப் பைம்பொன், மதிலினைச் சூழ்ந்ததுண்டே

பலவண்ணங்களைப் பெற்ற அந்தவன பூமியானது இறைவனது வாலறிவினைப் போல இவ்வுலகத்தவர்களையெல்லாம் தன்னுள் அடக்கக் கூடியதாய் இரண்டு காத அகலமுடையதாய் உதயதரம் பிரீதிதரம் என்னும் மதில்களுக்குட்பட்டதாய் ஒளிமிக்க அதன் நான்கு வீதிகளில் இடைப்பட்ட இடங்களில் நான்கு மேடைகளைப் பெற்று பொன் மதிலாகிய பிரீதிதரத்தைச் சூழ்ந்து பல்வேறு தருக்களையுடைய தாய், வனபூமி என்னும் பெயரினைப் பெற்றது.

1063. குட்டியத்து இருமருங்கும், கோபுரத்து உயரமாகி
எட்டுள தூபை, நின்ற இஞ்சிக்குள் எட்டே ஆகும்
வட்டவெண்குடைய சேதி மரங்கள்எட்டு, இவற்றைச் சார்ந்த
எட்டுள அதனுக்கு ஆதிபாதவம் இவற்றின் இப்பால்

அந்த வன பூமியிலுள்ள மேடைகளில் மேடைக்கு இரண்டு வீதம் முன்கோபுரத்தின் உயரமுடைய எட்டு கம்பங்கள் அமைந்திருந்தன. இந்தத் தூபிகள் எட்டினைச் சார்ந்து வெண்ணிற முக்குடைகள் அமைந்த ஜினபிம்பங்களையுடைய சைத்ய விருட்சங்கள் எட்டாகும். மேலும் அத்தருக்களுக்கு அருகில் கற்பக விருட்சங்கள் எட்டுள்ளன.

1064. வீதியைச் சார்ந்து, முக்கோண் வட்ட நாற் சதுரமாகி
நீதியால் நின்ற வாவி, எட்டுமூன்று இவற்றை எய்தி
ஓதிய வகையின் ஒன்றில்குளித்து, வாய் பூசி ஒன்றில்
போது கொண்டு ஒன்றின், மண்ணோர் பணிவர் போய்த் தூபை எய்த

வீதிகளில் இருந்து மூலை கோணங்களுக்குப் போகும் வழியில் முதலில் முக்கோண வடிவத்திலும், வட்டமாகவும், சதுரமாகவும் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்த தடாகங்கள் மொத்தம் இருபத்து நான்காகும். இந்தக் குளங்களை முறைப்படி அடைந்து, ஒன்றில் உடல் தூய்மை செய்து, அடுத்ததில் வாய் கழுவி, மூன்றாவதில் மலர்களைக் கொய்து கொண்டு மண்ணுலக மாந்தர், தூபைகளை அடைந்து வணங்குவர்.

1065. திரள் அரைக்கோசம் ஓங்கிச் சினைகள் எண்திசையும் ஓடிப்
பருதியோர் கோசமாகிப் பயின்ற கற்பகத்த சோலைக்கு
இருமடி உயர்ந்து அசோகம் ஏழிலம் பாலை, செண்பகம்
திருமலி மாவும் கீழைத் திசை முதன் மாமரங்கள்.

அங்கே அடியினின்றும் திரண்டதும், அரைக்கோச உயரமுடையதும், அதன் மேல் பரந்த கிளைகளைப் பெற்று எண் திசைகளிலும் ஒரு குரோச பரப்பளவு உடையதாய் உண்டாகிய கற்பகத்தரு சோலையைக் காட்டிலும் இரண்டுபங்கு உயரமுடையதாய் அசோகம், ஏழிலம் பாலை, செண்பகம், தேமா முதலிய மரங்கள் கிழக்கிலிருந்து வலமாக வரிசையாக மிகப்பெரியவைகளாய் அமைந்திருந்தன.

1066. ஆடகத்து இயன்று இரண்டு கோபுரத்து அளவும் சென்ற
நாடகசாலை மூன்று நிலையினால் எட்டுப் பந்தி
ஊடு சென்று ஆடு நல்லார் சோதிடர் தேவிமார்கள்
வீடில பலவு நின்ற வீதியின் இரு மருங்கும்

உதயதர கோபுரத்தின் உள்பாகத்திலிருந்து ப்ரீதர கோபுரம் வரையில், வனபூமியின் மகாவீதிகளின் இரண்டு பக்கங்களிலும், பொன்னால் செய்யப்பட்ட நடனமாளிகைகள் உள்ளன. அவை மூன்று நிலைகளை உடையதாய், ஒவ்வொரு நிலையிலும் எட்டெட்டு ரங்கங்களை உடையதாய் விளங்கும். அதனுள் ஜோதிர் தேவியர் நடனங்களைப் புரிவர்.

1067. பைம்பொனும் மணியினாலும், குயின்றவே பாதவாதிச்
செம்பொந் மங்கலங்கள், வேதிதோரணம் செறிந்த யாவும்
உம்பர்தம் உலகும், போக பூமியும் ஒன்றினாற் போல்
வம்பணி முலையினாரும், மைந்தரும் மலிந்த எங்கும்

பசும்பொன்னாலும், மணிகளாலும் அமைந்த கற்பக விருட்சம், சைத்ய விருட்சம், தூபிகள் ஆகியவற்றுடன் செம்பொன்னாலாகிய அட்டமங்கலங்களும் மதில்களும் தோரணங்களும் சேர்ந்திருந்தன. அவ்வன பூமியின் எல்லாப் பகுதிகளிலும் தேவ உலகமும் போக பூமியும் ஒன்றாக வந்து சேர்ந்தது போல் கச்சணிந்த அமரமாதர்களும், மண்ணுலக மகளிரும், மைந்தரும் நிறைந்திருந்தனர்.

1068. குயிலிசை முழவமாகக் கொம்பின்மேல் தும்பிபாட
மயில்நடம் பயிலும் எங்கும், வானவர் மடந்தை நல்லார்
புயலியல் மின்னுப்போலச் சோலைவாய்ப் பொலிந்து தோன்றிக்
கயல்விழி பிறழக் காமம் கனியநின்று ஆடினாரே.

அவ்வன பூமியில் குயில்கள் கூவும் ஓசை மத்தளமாக அமைய மலர்க்கொத்துக்களில் பல்வேறு தும்பிக் கூட்டங்கள் இசைப் பாடல்களைப் பாட, மயில்கள் நாட்டியமாடும். தேவ மகளிர் மேகத்தின் மின்னல்களைப் போல் சோலைகளில் எழில்பெறத் தோன்றி கெண்டை மீன்கள் போன்ற கண்களை சுழற்றி கண்டோர் மனம் களிகொள்ளுமாறு நடனமாடினர்.

1069. கற்பக மடநல்லார்கள், காமனைச் செறிவதே போல்
கற்பகமரத்தைக் காமவல்லிகள் செறிந்த காமர்
வில்பயில் ஒளியைக் கண்டு, வேதிகை என்று மீள்வார்
தப்புவர் நடையில் தாழ்வை, ஒளியினால் உயரம் என்னா.

கற்புடைய மகளிர் தங்கள் கணவரைச் சேர்ந்திருப்பது போல, காமவல்லிக் கொடிகள் கற்பக மரங்களைப் படர்ந்திருந்தன. மேலும் அங்கே ஒளிக்கற்றைகள் திரண்டிருந்த தோற்றத்தைக்கண்டு அதை மதில் எனக்கருதி அங்கே சென்றவர்கள் ஏமாந்து திரும்புவர். அதே ஒளி மயக்கினால் பள்ளங்களை மேடென்றும் மேட்டினைப் பள்ளமென்றும் தடுமாறி நடைமாறி மயங்குவர்.

1070. மதுகரம், தும்பி, வண்டு, வண்சிறைப் பறவை மற்றும்
பொதியவிழ் போதின்மீது, போர்த்தன புகழல் ஆற்றா
மதியொளி பரந்த பூமி, விதியுளி கிடந்த வல்லிப்
பொதுளிய போதின்மீது, போர்த்தகண் வாங்கல் ஆற்றா

மதி ஒளிபோல் விளங்கிப் பரந்திருந்த அந்த வனபூமியில் அடுக்கடுக்காக மலர்ந்திருந்த மலர்களின் மீது தேனினம், தும்பி, வண்டு முதலியவைகளும் வளமான இறகுகளையுடைய பறவைகளும் நிறைந்திருந்தன. அவ்வனத்தின் பெருமையைப் புனைந்துரைத்தல் இயலாததாகும், காமவல்லி முதலிய கொடிகளில் நெருங்கிப் படிந்திருந்த, மலர்களின் அழகைக்கண்ட கண்களின் பார்வையை மீண்டும் மாற்றுதல் அருமையாகும்.

1071. வனமிது விதியின் எய்தி, வாவியைச் சார்ந்த மைந்தர்
இனமலர்ஏந்திச் சொன்ன எட்டெட்டு மரத்தில் நான்கு
சினைதொறும் செறிந்த சீய அணைமிசைத் தேவர்கோமான்
அனையபொற் படிமைத்தூபை, அருச்சித்துப் பிரிதிசேர்ந்தார்.

முறையான இந்த வனபூமியை மேருமந்தரர்கள் இருவரும் அடைந்து தடாகங்களைச் சேர்ந்து இனமலர்களை ஏந்தி, அங்கு சொல்லப்பட்ட கற்பகம் எட்டு, சைத்ய விருட்சம் எட்டு இவற்றில் சைத்ய விருட்சங்களினுடைய நான்கு கிளைகளில், சேர்ந்திருக்கும் அரியணை மேல் அமர்ந்திருக்கும் ஜினபகவானுக்கு ஒப்பான படிமைகளையும் தூபிகளில் உள்ள ஜினபிம்பங்களையும் அர்ச்சித்து, அவ்வன பூமியின் எல்லையில் அமைந்துள்ள பிரீதிதரம் என்னும் மதிலை அடைந்தார்கள்.

1072. இருநிதி இருந்த சென்னி இமையம் வந்து இறைவன் பாதம்
மருவியது என்னச் செம்பொன் மயமதாய், வெள்ளி சூடி
உருமலி உதயத்திற்கும், இருமடி யாகும் பிரிதி
தரம் எனும், இஞ்சி, ஐந்து நிலைய அட்டாலைத் தாகும்.

சங்கநிதி, பதுமநிதிகளின் தலைவர்களாகிய தேவர்கள் தங்கியிருக்கும் இமவான் என்னும் மலையானது இங்கே வந்து இறைவன் பாதத்தைச் சேர்ந்தது போல், வெள்ளியாலாகிய தலைச்சூட்டினை பெற்று பொன்மயமாய் உருவத்தால் சிறந்து உதயதரமதிலைக் காட்டிலும் இரண்டுபங்கு உயரமும், அகலமும் உடையதாக விளங்கும் பிரீதிதரம் என்னும் மதிலானது, ஐந்து நிலைகளை கொண்ட அட்டாலைகளை உடையதாகும்.

1073. கொடிமிடைக் கோபுரங்கள் ஓங்கின, நான்கு காதம்
இடிமுரசியம்ப, வானோர் இயற்றும் ஐஞ்சிறப்பை எய்தும்
படிமைகள் இருந்த, பஞ்ச நிலைகளை உடைய பைம்பொன்
குடமுகம், பதுமம், தேமாங் கொத்தன கோணம் தானே.

பக்கமெங்கும் கொடிகள் நிறைந்து நான்கு காத உயரமுள்ள பிரீதிதர கோபுரங்கள் ஐந்து நிலைகளை உடையதாகும். இடி போல் முரசுகள் முழங்க தேவர்கள் சிறப்பயரும் ஜினபிம்பங்கள் அங்கே அமைந்திருந்தன, கோபுர உச்சியில் பசும் பொன்னாலாகிய கும்பமும், அதன் முகமும் பொற்றாமரை மலரும், அம்மலரடிகள் பொன் மாவிலைகளும் பெற்று விளங்கின.

1074. கோபுரத்திரு மருங்கும், குடவரை அனைய தோளார்
பாகரப் பிரபை போலப் படரொளிப் பவண வேந்தர்
நாகருக்கு இறைவர் கோமான், நலம்புகழ்ந்து அலங்கல் ஆர்ந்த
வேதிரம் பிடித்துக் காக்கும் புரத்துளார் கொடியின் வீதி.

அக்கோபுர வாயிலின் இருபக்கங்களிலும், அத்தமனகிரி போன்ற தோள்களையுடைய – கதிரவன் மண்டலம் போல் ஒளிமிக்க பவணர்களின் தலைவர்களாகிய சமர, வைரோசனர் என்கிற பவண இந்திரர்கள், இறைவனது அரிய குணங்களைப் புகழ்ந்து துதித்து, கட்டியம் கூறி அலங்கரித்த புரம்புகளைக் கையிலே கொண்டு காவல்புரிவர், அக்கோபுரத்தின் உட்புறம் கொடிகள் நிறைந்த துவஜபூமியின் பிரதம வீதிகளாகும்.

1075. ஐந்துவில் சதுரமாகி ஆயிரத்து எண் பதாய்
பந்தியின் வருக்கமாய மண்டலம் பத்தின் பாகம்
இங்கிவை திரட்டி, ஏக திக்கினுக்கு ஆம் இவற்றை
மங்கலந்தன்னில் மாற வந்த அப்பந்தின் மீது.

அந்தத் துவஜபூமியில் நான்கு பெருவீதிகளுக்கு இடையே உள்ள நான்கு பகுதிகளிலும், ஐந்து வில் உயரமும் ஐந்து வில் சதுரமும் உடையதாய், வரிசைக்கு ஆயிரத்து எண்பது வீதம் பல வரிசைகளில் ஒவ்வொரு பகுதியிலும் பதினொரு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நானூறு மேடைகள் இருந்தன. நான்கு பகுதிகளிலும் அமைந்திருந்த மேடைகளின் மொத்த எண்ணிக்கை நாற்பத்தாறு லட்சத்து அறுபத்தையாயிரத்து அறுநூறு ஆகும்.

1076. மூன்று வில்சதுரமாகி, முழுமணிப் பீடத்து உச்சி
ஊன்றி வில் இரண்டு சுற்றாய் உயர்ந்து இருகாதம் பைம்பொன்,
ஈன்றவே போன்று, கண்ணின் எழின்மணி இருந்த தண்டின்
ஆன்ற பாலிகையின் உச்சிப் பலகைமேல் பதாகையாமே.

அந்த மேடைகளின் மீது மூன்று வில் சதுரமுடைய ரத்தின பீடத்தில் நடப்பட்டிருந்த பொன் கம்பங்கள் இரண்டு வில் சுற்றளவும், இரண்டு காத உயரமும் உடையவை. காண்போர் கண்களைக் கவரும் அக்கம்பங்களின் உச்சியில் பெரிய பலகைகளில் கொடிகள் பொருத்தப்பட்டிருந்தன.

1077. சிங்கம், மால்யானை, மாலை, சிகி, அன்னம், கருடன் ஏறு
பங்கயம், மகரம், ஆழிப்பதிகளாம் பதாகை பத்தும்
பொங்கி ஆகாயம் என்னும் புணரி வெண்திரைகள் போலும்
மங்கலக் கிழவன் கோவில் மதிலைச் சூழ்ந்து ஆடும் நின்றே.

சிங்கம், யானை, பூமாலை, மயில், அன்னம், கருடன், எருது, தாமரை, மகரமீன், சக்கரம் இந்தப் பத்து சின்னங்களையுடைய மிகப் பெரிய கொடிகள் – ஆகாயமென்னும் கடலில் வெண்ணிற அலைகளைப் போல், மங்கலத் தலைவனாகிய இறைவனது சமவ சரணத்தில் உள்ள கல்யாணதரம் என்னும் மதிலைச் சூழ்ந்து அசைந்திருந்தன.

1078. முடிமணி முத்தமாலை நான்று கிண்கிணிகள் மொய்த்த
கொடிநிரை கோடி நான்கோடு அறுபத்தாறு இலக்கம் கோமான்
உடையன ஐம்பத்தாறாயிரம் முன்றில் உலாவுகின்ற
படிஇது காதம் மூன்றாய்ப் பயோதிபோல் சூழ்ந்ததாமே.

அந்தக் கொடிக் கம்பங்களின் உச்சியிலிருந்து, முத்து மாலைகளும், சிறுசிறு சலங்கைகளும் அணிந்த கொடிகளின் எண்ணிக்கை, நான்கு கோடியே அறுபத்தாறு லட்சத்து ஐம்பத்தாறாயிரமாகும். இவை இறைவனது சமவ சரணத்தின் ஐந்தாம் நிலத்தகத்தே அசைந்தன. இந்தக் கொடி நிலமானது மூன்று காத அகலமுடையதாய், கடல் போல் சூழ்ந்திருந்தது.

1079. பலமணி பயின்ற பத்தி, பித்தி, நற்படிகம், பைம்பொன்
நிலைகள் ஐந்தாகி நின்ற நாடகசாலை தோறும்
முலையும் மேகலையும் முத்தமாலையும் குலாவமின்போல்
பலநடம் பயிலும் மாதர் பவணர்தம் பவழவாயர்.

பல்வேறு மணிகளால் எழுப்பப்பட்ட சுவர்கள், படிகத்தாலும் பசும் பொன்னாலும் அமைக்கப்பட்ட ஐந்து நிலைகளையுடைய நடனசாலைகள், துவஜ பூமியின் வீதிகளில் இரண்டு பக்கங்களிலும் இருந்தன. அவற்றில் மேகலையும் முத்து மாலைகளும் மின்னல் போல் ஒளிவீச பல்வேறு நடனங்களை பவளம் போல் சிவந்த வாயினையுடைய பவண தேவியர் இயற்றினர்.

1080. புழைக்கை மாஊட்டம் ஒளி ஆளானம் புணர்ந்து அவற்றின்
தழைச்செவிபோல ஆடும் பதாகையாம் தரணிதன்னை
மழைக்கை மாவேந்தர் வந்து மங்கல மரபின் எய்திக்
குழைத்து எழும் பொழிலைச் சூழ் கல்யாண கோபுரத்தைச் சார்ந்தார்.

துளையுடைய துதிக்கைகளைப் பெற்ற யானைக் கூட்டங்கள் கட்டுத் தறிகளில் வரிசையாகக் கட்டியிருக்கும் போது, அவற்றின் அகன்ற காதுகள் ஒழுங்காக அசைவதுபோல், நுடங்கும் கொடிகளையுடைய, அந்தத் துவஜ பூமியை மழைமேகம் போல் வாரி வழங்கும் கைகளையுடைய மேருமந்தரர்கள் மங்கல முறைப்படி எய்தி, பிறகு தளிர்த்துயர்ந்த கற்பக விருட்ச பூமியைச் சூழ்ந்த கல்யாண தரம் என்னும் கோபுரத்தையும் மதிலையும் அடைந்தார்கள்.

1081. முதல், நடு, இறுதி கோசம் மூன்றரை, அரை அகன்றிட்டு
உதயத்தின் முத்தி ஓங்கித் தமனியத்து, இயன்று நானா
விதமணி அணிந்து, சென்னி மிடைந்த, வெண்குடையதாகி
மதிலினது அகத்து, அட்டாலை மலிந்த, ஏழ் நிலத்ததாமே.

அக்கல்யாணதர மதில் அடியில் மூன்று குரோசமும், இடைப்பகுதி ஒன்றரைக் குரோசமும், உச்சி முக்கால் குரோசமும் அகலமுடையதாய், உதயதர கோபுரத்தைப் போல் மூன்று மடங்கு உயரமுடையதாய், பொன்னால் அமைந்து, பல்வேறு மணிகள் இழைக்கப்பட்ட தலைச் சூட்டினையுடையதாய் நெருக்கமான வெண்ணிற கொடிகள் நுடங்க, உட்புறத்தில் அட்டாலையங்கள் நிறைந்த ஏழு நிலவட்டாலையங்களுடையதாகும்.

1082. பத்தரைக் காதம் ஓங்கிப் பைம்பொன் கோபுரங்கள் நான்கும்
உத்தமத் துறக்கம் ஏழை ஒத்தஏழ் நிலத்து வாகிப்
பத்து நாமத்தவாம், ஏழ்பவத் தொடர்பதனைக் காட்ட
வைத்த கண்ணாடி வாய்தல் மருங்கு இரண்டு உடையதாமே.

பசும் பொன்னாலாகிய அந்தக் கல்யாண தர கோபுரங்கள் நான்கும், மேலான தேவருலகம் ஏழினைக் காட்டுவதுபோல் ஏழுநிலைகளையுடைய தாய், ஐந்து காதம் உயர்ந்து அதன் வாயிற்புரத்தின் இரு பக்கங்களிலும், காண்பவரது அகப்பற்று பத்தினால் பெற்ற முன்பவங்கள் ஏழினைக் காட்டும் கண்ணாடிகள் பொருத்தப் பெற்றிருந்தன.

1083. உரைத்த நாமத்தவாய புறக்கத்து உதயம் போலப்
பெருத்த கோபுரங்கள் நான்கு, பெருவிலை மணியமாலை
தரத்தினால் பருத்துத் தாழ்ந்து, சணசண வென்னும் கண்டை
பரித்து நால் திசையும் வீதி பருதிபோல் ஒளிரும் நின்றே

இப்போது சொல்லப்பட்ட, கல்யாணதரம் என்னும் பெயருடைய மிகப்பெரிய நான்கு கோபுரங்களின் உட்பக்கத்தே உதய சூரியன் போல் ஒளிமிக்கதும், விலை மதிப்பற்றதுமான தரம் மிக்க, பருத்துத் திரண்ட இரத்தின மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. சணச் சண வென ஒலியை நான்கு மகா வீதிகளிலும் பரப்பி நிற்கும் சேமங்கலங்களும் சூரியனைப் போன்று நிலையாக அமைந்து பிரகாசித்தன.

1084. உரைத்த கோபுரத்து வாய்தல் காப்பவர், உலக பாலர்
நிரைத்த ஏழ் நிலத்ததாய, நாடகசாலையின் கண்
தரத்தினால் நிரைத்த, மின்னின் தான் நடம்புரியும் மாதர்
விரித்து நாம் உரைத்த தேவர் மேவும் மா தேவிமாரே.

இந்தக் கோபுரங்களின் வாயிற் புறங்களின் இரு பக்கங்களிலும் லோகபால தேவர்களாகிய கல்பவாசி தேவர்கள் காவல் புரிவார்கள். உட்புறத்தின் மிகப்பெரிய வீதிகளின் இரு மருங்கிலும் ஏழு நிலைகளையுடைய ஆடலரங்கங்களில் பெருமை மிக்க லோக பாலக தேவமாதர்கள், மின்னலைப் போல் நடம்புரிவார்கள்.

1085. வடிவுடைப் பீடத்து இப்பால் மணித்திரள் மலர்ந்த நான்கு
விடவங்கண் மிக்க திக்கை அளப்பன போன்று சித்தப்
படிமைகள் இருந்த சித்த பாதவம் பயின்ற போதும்
குடையின்மீது அணிந்து வீதி நான்கினும் குலாவும் இப்பால்

அக் கோபுரத்தினுள் கற்பக விருட்ச பூமியின் நான்கு பெருவீதிகளின் முகப்பில் அமைந்திருக்கும் பலி பீடங்களை அடுத்து அழகுடன் பருத்து, திசைகளை அளப்பதுபோல் பரந்து நின்று நான்கு கிளைகளிலும் சித்தப் படிமங்களைத் தாங்கி நிற்கும், சித்தாயனம் என்னும் தருக்களானவை நிலை பெற்றிருந்தன. அதனுடைய மலர்கள் அப்படிமங்களின் மேல் குடைகளைப் போல் ஒளிபெற அமைந்து மிகவும் பிரகாசிக்கும்.

1086. அஞ்சுடர் உமிழும்தூபை அறிவன் ஆலயத்தைச் சூழ்ந்த
மஞ்சுற நிமிர்ந்து மாழைத் தலங்கள் பன்னிரண்டவாகி
அஞ்சன மலையைச் சூழ்ந்த ததிமுகம் அனைய நான்காய்
இஞ்சி கோபுரங்கள் நாற்பால் உடையவாம் தடங்கள் நான்காம்.

வாலறிவனாகிய இறைவனது ஆலயத்தை மையமாகக் கொண்டு, கல்யாண தரம் என்னும் பெயருடைய மதில், கோபுரங்களுக்கு உட்புறத்தே அமைந்த கற்பக விருட்ச பூமியின் பெரும் வீதிகளில், மேகமண்டலம் அளவு உயர்ந்து பொன்னால், சமைக்கப்பட்ட தூபிகள் பன்னிரண்டு நிலைகளையுடையன, அவை நந்தீஸ்வர தீபத்தில், அஞ்சன மலையைச் சூழ்ந்திருக்கும் ததிமுகப் பர்வதங்களைப் போல் நான்காகும், மேலும் வீதிக்கு ஒன்றாக நான்கு தடாகங்களும் உள்ளன.

1087. நந்தை பத்திரை, சயந்தை, பூர நாமத்த வாவி
அந்த மாதிக்கின் நான்கில் வாரியைத் தெளித்த போழ்தின்
முந்தைய பிறப்பை ஓர்வார் முன் பின் ஏழ் பவத்தைக் காண்பார்
சிந்தை செய்து அவற்றைப்பார்க்கத் தெளிக்க நோய் யாவும் தீரும்.

அந்த நான்கு வீதிகளில் கிழக்குவீதியில் உள்ள தடாகம் நந்தை எனப்படும். அதன் நீரை மேலே தெளித்துக் கொண்டவர்கள் தமது முந்தைய பிறப்பை அறிவார்கள். தெற்கேயுள்ள குளம் பத்தரை எனப்படும். அதன் நீரைத் தெளித்துக்கொண்டவர்கள் முன்பின் ஏழுபிறவிகளை உணர்வார்கள். மேற்கு திக்கில் உள்ள 'சயந்தை' என்னும் தடாக நீரைப் பார்த்தவுடனே நினைத்ததை எல்லாம் நேரில் காண்பர். வடக்குப் புறத்தில் உள்ள குளம் பூரம் எனப்படும். அதன் நீர் அனைத்து நோய்களையும் தீர்த்துவிடும்.

1088. வாசநின்று அறாதசோலை மதிலினது அகத்து மாண்ட
ஓசனை அகன்றதேனும், உலகெலாம் அடங்கினாலும்
ஆசைபோல் அகன்று தோன்றும் அருமணி நிலத்ததாகி
மாசிலா மணியின் ஆய மரங்களால் செறிந்தது எங்கும்.

கல்யாண தர மதிலின் உட்புறத்தே நறுமணம் கமழும் நிலைபெற்ற, பெருமை மிக்க கற்பகச் சோலையாகிய ஆறாம் நிலம் நான்கு காத அகலமுடையதாகும். இம் மூவுலகத்திலுமுள்ள பான்மைமிக்க தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் அனைவரும் திரண்டு வந்தாலும் மக்களது ஆசையைப் போல் அகன்று தோன்றும் அந்த நிலம், இரத்தின மயமான கற்பக மரங்கள் நிறைந்திருந்தது.

1089. பலநிறம் பயின்றபோதும் பலங்களும் செறிந்த சாகை
நிலைதளர்ந்து ஓசியக்காணா நிறைய அஞ்சிறை களீண்டி
மலர்நிறைந்து இருந்த மட்டை வாங்கினால் தாங்கப் பாராம்
இலையெனாம் இலாதவர்க்கு இருந்து எழுந்து உண்டதேனை.

பல்வேறு வண்ண மலர்களும், கனிகளும் நிறைந்து தாங்காமல் தளர்ந்து, தாழ்ந்து நிற்கும், கற்பகமரத்தின் கிளைகளைக் கண்ட அழகிய வண்டுகள், நாம் தேனை உண்டு வருத்தம் தரும் இதன் சுமையைக் குறைப்போம் என்று, மலர்களில் அமர்ந்து தேனை உண்டு பறந்தன. பளு குறைந்த கிளைகள் நிமிர்ந்து நின்ற தோற்றம், தன்னிடம் வந்து யாசிப்பவர்க்குத் தருவதற்கு ஒன்றுமில்லை எனக் கையைத் தூக்கிக் காட்டுவதுபோல் தோன்றியது.

1090. சிறப்பொடு இங்கு அடைந்த தேவர் செறிபொழில் அதனைச் சேர்ந்தால்
துறக்கத்தை மறப்பர் என்றால், சொல்லுவது இனிஎன் அன்றிப்
பிறப்பு எறிந்து இருந்த வீரன், பெருமையைச் சிறிது காட்ட
இறப்பவும் உயர்ந்ததேவ ராசனால், இயன்றது அன்றோ.

பூஜைக்குரிய பொருள்களுடன் இங்கு வந்து சேர்ந்த அமரர்கள் இச்சோலையின் அழகில் மயங்கி தமது உலகத்தை மறந்து விடுவர் என்றால் அந்த நிலத்தில் எழிலை எவ்வாறு வருணிப்பது? மேலும் பிறப்பு இறப்பினை ஒழித்த கடையிலா வீரம் பொருந்திய ஜினபகவானது பெருமையை ஓரளவு மற்றவர்க்கு உணர்த்துவதற்காக, இந்தச் சமவ சரணம் தேவர்களின் தலைவனாகிய தேவேந்திரனால் சமைக்கப்பட்ட தல்லவா!

1091. பளிக்கு நற்றலம் இது என்று, வாவியுள் பாதம் வைத்துக்
குளிக்க வீழ்ந்தவரைக் காணாக் கைகொட்டிச் சிரிப்பர் நோக்கா
பளிக்கற்றைத் தலத்தை, வெள்ளைப் பார்ப்பு என்று, பார்த்து மீள்வார்
ஒளிப்பிழம்பு இவற்றைப் பித்தி என்று போக்காற்று நிற்பார்.

மேலும் அங்கே தெளிந்த நீர் நிறைந்த தடாகத்தினை நோக்கி இது பளிங்கினால் அமைந்த தரை என எண்ணி, கால்களை வைத்தவுடன் தண்ணீரில் விழுந்து, நனைந்து நின்றவர்களைப் பார்த்து மற்றவர்கள் கைகொட்டிச் சிரிப்பர். வேறு சிலர் படிகத்தினாலாகிய பூமியை நீர்நிலை என மயங்கித் திரும்பி விடுவர். பல்வேறு ஒளித்திரளினைக் கண்டு இது கண்ணாடிச் சுவர் போலும் என்று அங்கே செல்லாது செயலற்று நிற்பர்.

1092. கதிர்மணி மாடம்தம்மைக் கண்ணுறுவார் தம்சாயை
எதிர் வருவாரை ஒப்ப இடைந்திடைந்து எங்கும் நிற்பர்
மதுரமாம் தம்சொல் தாமே தமக்கு எதிர்மாற்ற மாக
எதிர்எதிர் மொழிகின்றார் ஒத்து இயம்புவர் எங்கும் எங்கும்

ஒளிமிக்க படிக மணிகளால் இயன்ற மாடத்தைப் பார்த்து அதில் தோன்றும் தங்கள் பிம்பங்களை யாரோ நம்மை நோக்கி வருகின்றனர் என ஒதுங்கி நிற்பார்கள். தங்களுடைய இனிமையான பேச்சுக்குத் தாமே எதிர்மாற்றமாக, எதிர் எதிராக உரைப்பவர் போன்று பேச்சு இருந்தது. அதாவது ஒருவருடைய பேச்சொலி எல்லா இடங்களிலும் மிகவும் துல்லியமாக எதிரொலித்தது என்பதாம்.

1093. வரைபுரையும் மாளிகையின் நிறைகளவை, ஒருபால்,
பருதிஒளி தெறுவ, பல மண்டபங்கள் ஒருபால்,
மருவினரும், அறிவரிய மாடநிறை ஒருபால்,
பருமணிய தூண் நிறைய பாடலிடம் ஒருபால்.

அந்த கற்பக விருட்ச பூமியில், மலைபோன்ற மாளிகைகளின் வரிசை ஒருபக்கத்திலும், சூரிய ஒளிபோல் ஒளிமிக்க மண்டபங்கள் ஒரு பக்கத்திலும், இன்னொரு பக்கத்தில் உள்ளே சென்றவர்களாலும் உணர்தற்கரிய எண்ணற்ற மாடங்களின் வரிசையும் மணிகளால் சமைந்த கம்பங்களையுடைய இசை மண்டபங்கள் ஒரு பக்கத்திலும் அமைந்திருந்தன.

1094. நாடக மடந்தையர்கள் ஆடும் இடம் ஒருபால்
ஆடவர்கள் கூடி, விளையாடும் இடம் ஒருபால்
கோடுயர் செய்குன்றமவை, நின்ற இடம் ஒருபால்
ஆடக நல் வேதிகைய கூடமிடம் ஒருபால்.

நாடக மகளிர் ஆடும் இடங்களும், இளைஞர்கள் கூடி விளையாடும் இடங்களும், தனித்தனியாக விளங்கின. பல உச்சிகளையுடைய செய் குன்றுகளும், பொன்னால் சுவர்கள் அமைக்கப்பட்ட கூடங்களும் ஒவ்வொரு பக்கத்தில் இருந்தன.

1095. வான்கரும்பின் தீஞ்சுவைய வாரி நதி ஒருபால்
தேன் செறிந்த பூந்தடங்கள் சிறை பயின்றது ஒருபால்
வாய்ந்த மணித்தலங்கள் வல்லிமண்டபங்கள் ஒருபால்
சூழ்ந்த செம்பொன் வேதிகைய ஆகும்சில ஒருபால்

மேலும் அப்பூமியின் ஒருபுறம் அழகிய கரும்பின் சாறு போன்று இனிமையுடைய ஆறுகளும், மற்றொரு பக்கம் தேன் சொரியும் மலர்களையுடைய தடாகங்களும், அடுத்த பக்கம் மணிகளால் இழைக்கப்பட்ட தளங்களையுடைய கொடி மண்டபங்களும், வேறு சில இடங்கள் பொன்னாலாகிய மதில்களையும் பெற்று விளங்கின.

1096. மஞ்சமலி பஞ்சமளி உடைய இடம் ஒருபால்
உஞ்சல்மிசை அஞ்சொலவர், ஆடும் இடம் ஒருபால்
வஞ்சி அனையார்களொடு மைந்தர்இடம் ஒருபால்
இஞ்சி அதன் அகத்தினை இயம்பிட ஒணாதே.

மென்மையான பஞ்சு மெத்தைகளையுடைய கட்டில்கள் நிறைந்த இடம் ஒருபக்கத்திலும் அழகிய பெண்கள் அமர்ந்து ஆடும் ஊஞ்சல்கள் தொங்கும் இடங்கள் ஒரு புறத்திலும் ஒருபுறம் இளம் பெண்களுடன் இளைஞர்கள் தங்குமிடங்களும் இத்தகு சிறப்புக்கள் பொருந்திய கல்யாணதர மதிலின் உட்புறத்தில் அமைந்துள்ள கற்பக விருட்ச பூமியின் சிறப்பினை இயம்பிடற்கிறயலாது.

1097. மலை அனைய நிலையுடைய மாதவர்கள், ஒருபால்
விலையம் அற எறிதரும் அவிர், ஓசனர்கள் ஒருபால்
மலைவின் மொழி நிலையுள், நல மௌனதரர் ஒருபால்
நிலைபனியின் வெயின் மழையின் நீங்கிலிலர் ஒருபால்

மலைபோல் சலனமின்றி ஒரே சிந்தையாய் நிலைத்திருக்கின்ற மாதவர்கள் ஒரு பக்கத்திலும், பிறவிச் சுழற்சிக்குக் காரணமான குற்றங்களை ஒழிக்கும் ஒளிமிக்க உபாத்தியர்கள் ஒருபக்கத்திலும், மாறுபாடற்ற நன்மொழிகளைத்தவிர மற்றபடி மௌனத்தை மேற்கொண்ட மேலோர்கள் ஒருபுறத்திலும், நின்றார்கள். ஒரு பக்கத்தில் பனிக் காலத்திலும், கோடைக் காலத்திலும் மழைக் காலத்திலும் நிலை தளராது தவம் இயற்றும் முனிவர்கள் இருந்தார்கள்.

1098. உக்கதவர், தித்ததவர், தத்ததவர் ஒருபால்
மிக்கதவர் கோரதவர், மேவும் இடம் ஒருபால்
தொக்கநல காய மனம் வசிவலிகள், ஒருபால்
பக்கம் முதல் நோன்புடைய பரமதவர், ஒருபால்

அங்கே உக்கிர தவசியரும், தீப்த தவசியரும் தப்த தபசியரும், ஒருபுறம் இருப்பர்; வேறுபுறத்தில் மகாதவாத்தவர், கோர தவத்தவர் இருப்பர். பிறிதோரிடத்தில் காயபலம், மனோபலம், வசனபலம் பெற்ற முனிவரர் இருப்பர்; இன்னொரு இடத்தில் பட்ச உபவாசம், மாத உபவாசம் முதலானவற்றை ஏற்கும் மேன்மைக்குரிய தபோதனர் இருப்பார்கள்.

1099. மாசு மலம் வாயத்திவலை மூக்குடைய மருந்தாம்
பேசரிய பெருந்தவர்கள் இருந்த இடம் ஒருபால்
வாசநறு நெய்யமுது பாலமுதுவின்மேல்
ஆசையற உரைசெய் மொழி அருந்தவர்கள் ஒருபால்.

ஒரு பக்கத்திலே, உடலின் மேல் அமைந்த மாசுப் பொருளும், வாயிலிருந்து தெறிக்கும் நீர்த்துளிகளும், மூக்கின் சளியும் ஆகிய இவையெல்லாம் பிறருடைய நோய்களைப் போக்கும் அருமருந்தாக அமையும் ரித்திபெற்ற முனிவர்கள் இருப்பர். நெய்யமுது. பாலமுது இவற்றின் மேல் கொள்ளும் ஆசை நீங்கும் வண்ணம், இனிமையாக தர்மத்தை எடுத்துரைக்கும் அரிய தவத்தவர் ஒருபுறம் இருப்பார்கள்.

1100. முதல் இறுதி நடுவண், ஒரு பதமது கொண்டு அந்நூல்
விதிமுழுதும் அறிஞர்சிலர் மூபதம் மேவி
முதல் நடுவு முடிய உணர்வார், சம்பின்னமதிகள்
மதியின் புகை பன்னிரண்டின் வருமொழிகள் அறிவர்.

ஒரு நூலின் முதல் இறுதி, நடு ஆகிய இடங்களில் உள்ள ஒரு பதத்தைத் தெரிந்துகொண்டு அந்நூல் முழுமையும் உணரக்கூடிய கோஷ்ட புத்தியரும், முதலில் உள்ள ஒரு சொல்லைக்கொண்டு மூவிடங்களிலுமுள்ள அனைத்தையும் அறியும் பீஜ புத்தியரும் அடுத்து தங்கள் அதிசயமான மதியால் பன்னிரண்டு யோசனை தூரத்திலிருந்து வரும் மொழிகளை தனித்தனியே அறிந்துகொள்ளும் ஆற்றல்மிக்க சம்பின்ன மதிகளும் அங்கே இருப்பார்கள்.

1101. மதி அவதி சுதம் இருது விபுல மதி ஞானத்து
அதிசயர்கள் அனகார கேவலிகள் ஒருபால்
விதியில் அணுமாதி விகுவணை வலவர் ஒருபால்
மதியின் வரு சாரண நன்மாமுனிவர் ஒருபால்

மதி, அவதி, சுருதி ஞானங்களையுடைய முனிவர்களும் ருஜுமதி, விபுலமதி ஆகிய மனப்பரிய ஞானமுடையவர்களும், அனகார கேவலிகளும் ஒருபுறமிருப்பர். முறைப்படி அணுமா முதலிய ரித்திகளை எய்திய மாமுனிவர்கள் ஒருபுறமிருப்பர். முழு மதிபோல் விண்ணில் சஞ்சரிக்கும் ஆகாய சாரண ரித்தியைப் பெற்ற பெருமைமிக்க சிறந்த முனிவர்கள் ஒருபுறமிருப்பர்.

1102. வேத மொருநான்கை, வினையத்தை, மிகமேவி
ஓதுபவர், கேட்பவர், உரைப்பவர், நிருக்தர்
வாதியர்கள் கற்றமறவாத மதியோர்கள்
மேதகைய சிந்தனைகள் மேவுநர்கள் ஒருபால்

அங்கே அனுயோகங்கள் நான்கினையும் மிகவும் ஈடுபாட்டுடனும் வணக்கத்துடனும் படிப்பவர்களும் எடுத்துரைப்பவர்களும், அவற்றைக் கேட்பவர்களும், ஒவ்வொரு பதமாக பொருள்கூறி விளக்கம் அளிப்பவர்களும் தர்க்க நூல்களைப் படித்து உணர்ந்து தத்துவத்தை உறுதி செய்பவர்களும், தாஙகள் கற்ற ஆகமப்பொருள்களை மறக்காமல் மனதில் நிறுத்திவைக்கும் ஆற்றல் மிக்கவர்களும், மிக உன்னதமான தரும சுக்கிலத் தியானங்களைப் பொருந்தி நிற்கும் தவமுனிவர்களும் ஒருபுறத்தே இருந்தனர்.

1103. புக்கஇடம் சக்கரன்தன் படையொதுங்கப் போதும்
மிக்கதவர் பாணிமிசை, மேயமிகை அடிசில்
புக்கு உலகம் உண்டிடினும், போதும் பகல் எல்லைத்
தக்க தவர்முதல் முனிவர் சாற்றமுடியார்

தாங்கள் இருக்கும் இடம் மிகச்சிறியதாயினும் உலக மன்னனுடைய மாபெரும் படைகளே ஒருங்கு வந்தாலும், அவர்கள் தங்குவதற்கு இடம் அளிக்கும் ஆற்றலைப்பெற்ற முனிபுங்கவர்களும், உத்தம தானகர்த்தாக்கள் தங்களை கைகளில் அளித்த அன்னத்தில் அவர்கள் ஏற்றது போக எஞ்சி நிற்கும் ஒருசிறு அளவானது, இந்த உலக மக்கள் ஒன்று சேர்ந்து உண்டாலும், ஒருபகல் முழுதும் குறையாமல் வழங்கும் ஆற்றல்மிக்க மா முனிவர்களும், ரத்தின த்ரயங்களுடன், கூறுவதற்குரியவராய் இருப்பர்.

1104. இனைய, முனிவனம் இதனின் வீதிஇரு மருங்கில்
கனகமணி வேதிகை, வில்லுடைய கொடி அதனின்
இனைய மலிநிலங்களை அவ்வேந்தர் பணிந்து ஏத்தி
அனகமனராய் இறைஞ்சி, ஆசிர மடைந்தார்.

ஆறாம் நிலமாகிய இந்த கற்பக விருட்ச பூமியின், நான்கு வீதிகளின் இரு பக்கங்களிலும் இத்தகைய ஆற்றல்மிக்க மாமுனிவர்கள் தங்கியிருந்தார்கள். மேலும் அதன் உட்புறத்தில் ஒருவில் உயரமுடைய பொன், மணிகளால் அமைந்த மதில் உண்டு. இந்நிலத்தில் நிறைந்திருந்த கொடிகளையும், இதுகாறும் கூறப்பட்ட பல் அமைப்புகளையும் அந்த ராஜ குமாரர்கள் வணங்கி ஏத்தி ஏழாவது நிலமாகிய கிரஹாங்கன பூமியில் அமைந்திருந்த 'ஜெயசிரயம்' என்னும் மண்டபத்தை எய்தினர்.

1105. கடிதடத்தள வுள்ள வரண்டகைக்
கொடிநிரைத்த சயாசிரம் கோசத்தின்
உடன்அகன்றதோர் ஓசனை ஒக்கமும்
கடனதாயது காவதம் ஆகுமே.

கொடிகளின் அளவில் பாதி அளவுடைய வரண்டகக் கொடிகள் வரிசையாக நிறைந்திருந்த அந்த மண்டபமானது, ஒருகுரோச அகலமும், ஒரு யோசனை உயரமும், ஒரு காத நீளமும் உடையதாகும்.

1106. மாதிரத்து எழும், மாமதி வான்கடல்
ஓதம்ஏற உடன்புகும் ஆறுபோல்
நாதன் மாநகர் முன்றிலின் வாய்தல்வாய்ப்
போதுவார் புகுவார்கள் மிடைந்து அறார்.

முழுமதி உதயமாகும் போது பொங்கி எழும் கடல் அலைகள் போதும்போது அதன் உள்ளே புகும் ஆற்று நீரைப் போல், இறைவனது சமவ சரணத்தின் முகப்பில் இருந்த இந்த ஜயாசிர மண்டபத்தின் வாயிலில் உள்ளே இருந்து வருகின்றவர்களும் வெளியேயிருந்து உள்ளே செல்பவர்களும் நெருங்கி நகர்வார்கள்.

1107. சுந்தரத்தரளம், பவழத்திரள்
பந்தி பந்தி பரந்தன, பார்மிசை
இந்துவின் கதிரோடு, இரவிக்கதிர்
வந்து வாலுகம, ஆயின போலுமே

அழகிய முத்துக்களும், பவழங்களும் தனித்தனியாக பூமியின்மீது வரிசை வரிசையாக அமைந்திருந்தன. அக்காட்சி, சந்திரனின் ஒளிக்கதிர்களும், கதிரவன் கதிர்களும் இங்கே வந்து மணல் பாதைகளாக சமைந்திருந்ததைப் போல் தோன்றின.

1108. மரைத்தலத்தரை சோதிட மண்டிலம்
வரைத்த குங்கும சந்தன மண்டிலம்
நிரைத்த செங்கமலங்கள் நிலமிசைத்
தரைத்தலத்து எழும் தாமரை போலுமே.

அந்த ஜெயாசிரய மண்டபத்தின் மேல்கூறையின் உட்புறத்தில் சந்தனக் குழம்பாலும், குங்குமக் குழம்பாலும் வட்டமாக வரையப்பட்ட சூரிய சந்திர வட்டங்கள், புஷ்கரவரதீபத்தில் சூரிய சந்திர மண்டலங்கள் இயக்கமின்றி நிலைத்து நிற்பது போல் தோன்றியது. மேலும் அம்மண்டபத்தின் தரைமீது வரையப்பட்ட தாமரை ஓவியங்கள், புஷ்கரவரத்தீவில் பூத்திருக்கும் தாமரை மலர்களைப் போலவே விளங்கின.

1109. மாளிகை நிரை மண்டபம் அல்லவும்
ஆளி, மானவர், தேவர் அடைந்துழி
நாளு நாளும் நல்லின்பம் பயப்பன
சூளி யானையைச் சூழ்பிடி போல்வன.

அந்த மண்டபமும் அதைச் சூழ்ந்த மற்ற மாளிகைகளும் ஆண் யானையைச் சூழ்ந்து நின்ற பெண் யானைகளைப் போல் விளங்கின. மேலும் அந்த மாளிகைகள் சிம்மம் போன்ற பான்மை விலங்குகளும், மனிதர்களும் தேவர்களும் அங்கு அடைந்தால் அவர்கட்கு நலம் பல நல்குவனவாம்.

1110. சிப்பி செய்கை முடிந்தன செய்வினை
துப்புருவை உரைப்பன, நன்னெறி
தப்பினார் தடுமாற்றை, விரிப்பன
இப்படிய இவற்றின் ஏனைப்பல.

இந்த மண்டபத்திலும் மற்ற மாளிகைகளிலும் பிறவி எடுத்தோரின் புண்ணிய பாப அனுபவங்களை எடுத்துக்காட்டுவனவும், நன்னெறியினின்றும் தவறி தீ நெறியில் சென்றவர்களுடைய வாழ்வின் துன்பங்களையும் விரிவாகத் தெரிவித்து வேறுபல விவரங்களையும் தருகின்ற தேவ சிற்பிகளின் கைத்திறனால் அமைந்தவை பலவாகும்.

1111. மந்திரத்தை அணிந்து பொற் பீடிகை
இந்திரத்துவசம், இடைநின்றன
சந்திரத்திரளின் புளகத்திடை
வந்து நித்தில மாலைகள், நான்றவே.

அந்த ஜெயசிரய மண்டபத்தின் உட்புறத்தில் உள்ள மாளிகையின் உள்ள அமைந்த பொன்னாலாகிய பீடத்தின் மையத்தில், கண்ணாடித் தம்பத்தில் இந்திரத்துவசக் கொடிகள் நிலைத்திருந்தன. அக்கம்பத்தின் உச்சியிலிருந்து முத்து மாலைகள் தாழ்ந்து அசைந்தன.

1112. சுந்தரத்திரள் மாமணி சூடின
மின்பரப்பின் மிளிர்ந்து வில்வீசுவ
பைந்துகில் கொடி கால்பொரப் பார்ப்பினம்
அந்தரத்திடை ஆடுவ போலுமே.

அழகிய அக்கண்ணாடிக் கம்பத்தில் இழைக்கப்பட்டிருந்த இரத்தினங்களின் ஒளி மின்னலைப் போன்று கதிர்களை வீசும். உச்சியில் உள்ள எழில்மிக்க கொடிகள் காற்றில் அசையும் தோற்றம் விண்ணிலே, அன்னப் பறவைகள் பறந்து உலவுவதைப் போல் தோன்றும்.

1113. காரின் மூதுலவும் கதலிக்கொடி
தார்மணிகள் சலிப்ப ஒலிப்பன
வாரிமீது வரும்பரித் தேரிடைத்
தார்மணிகள் சலித்தொலிபோலுமே.

மேகமண்டலத்துக்குமேலே இந்திரத்துவசமானது காற்றிலே அசையும்போது கம்பத்திலே தொங்கும் முத்து மாலைகளும், மணிகளும் ஒலிக்கும் ஒலியானது கடலின் மேல்வரும் கதிரவன் ரதத்தின் மணிகளும், மாலைகளும் குதிரைகளின் வேகத்தில் ஒலிக்கும் ஒலி போன்றதாகும்.

1114. இந்த வான்கொடியைக் கொடியைக் கடந்து ஏகலும்
வந்து தோன்றும் மகோதய மண்டபம்
சுந்தரம் மணித்தூண் நிரை ஆயிரத்து
எந்தை கோயில், முகப்பில், இருந்ததே.

இப்போது கூறப்பட்ட இந்திரத்துவசக் கொடியைக் கடந்து சென்றால் மகோதய மண்டபம் தோன்றும். அது மணிகள் இழைக்கப்பட்ட ஆயிரம் தூண்கள் அமையப் பெற்றதாய், இறைவனது ஆலயத்தின் முன்புறத்தில் விளங்கியது.

1115. மற்று இம்மண்டபத்துள் மணிப் பீடிகை
சொற்கிழத்தி, இருக்கைச் சுதக்கடல்
முற்றும் வந்தொரு மூர்த்திக் கொண்டால் அன்ன
பெற்றியால் இருந்தாளை, வலத்திரீஇ.

இந்த மகோதய மண்டபத்தில் மணிமணமாக அமைந்த பீடம், சொல்லின் தலைவியாகிய சரஸ்வதி தேவியின் இருக்கையாகும். ஆகமக்கடல் முழுதும் இவ்விடம் வந்து ஒரு உருப் பெற்றாற் போல் அமைந்திருந்த, அந்த சரஸ்வதி தேவியை வலப்புறத்திலே இருக்கச் செய்து,

1116. சோர்வில் மாதவர் சூழ்சுத கேவலி
தாரகை நடுச்சந்திரன் போல்பவன்
கார் பயிர்க்கு உதவும்படியால், உயிர்க்கு
ஆர்வமின்றி, அறத்தை அளிக்குமே.

குறை யேதுமில்லாத மாதவ முனிவர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க, நடுவிலே விளங்கிய சுருத கேவலியானவர், விண் மீன்கள் சூழ்ந்திருக்கும் சந்திரனுக்கு நிகராய், மழைமேகம் பயிர்களுக்கு உதவுவது போல் தனக்கு எவ்வித ஆர்வமும் இல்லாது, பவ்யர்களுக்கு அறத்தை உபதேசிப்பவரானார்.

1117. மேருவின் திசை எட்டையும் மேவிய
வாரணம், மலை போல்வன, மண்டபம்
ஏரணிந்துள எண்திசையும், இதன்
நேர்முன் நின்றதோர் பீடிகை நன்றரோ.

இந்த மகோதய மண்டபத்திற்கு எட்டு திக்குகளிலும், மேரு மலையைச் சூழ்ந்துள்ள திக்கஜ பர்வதங்களுக்கு நிகரான அழகுமிக்க மண்டபங்கள் அமைந்திருந்தன. இவற்றை எல்லாம் கடந்து மிகச்சிறந்த பலபீடம் ஒன்று நிலைபெற்றிருந்தது.

1118. வல்லி நன்மணி பொன் மயமாகிய
எல்லியும் பகலும் பலி ஏந்தும் இது
எல்லைசெய்து இறைவன் நகர் வாயிலுள்
செல்ல வல்லிகள் மண்டபம் ஈண்டுமே.

அது பொருத்தமான நீள அகலமுடையதாய், பொன்னால் ஆக்கப்பட்டு மணிகளால் இழைக்கப்பட்டது. இந்தப் பலிபீடமானது இரவும், பகலும் பூஜை செய்வோரால் பலி பிண்டங்களை ஏற்றிருக்கும். இதனுடைய தன்மைகளை அறிந்து, இறைவனது ஆலய வாயிலுக்குள் செல்வதற்கு பூங்கொடிகள் படர்ந்திருக்கும் லதா மண்டபங்கள் தொடரும்.

1119. போதறா மணிப்பீடத்தின் அப்புறம்
வாய்தல் வீதியை நோக்கிய மண்டபம்
நீதியால் நிதிக்கோக்கள், நிரந்தரம்
ஈதல் மேவி இருப்ப இரண்டுள.

எப்போதும் அர்ச்சனை செய்யப்படுவதால், அர்ச்சனை மலர்கள் நீங்காது இருக்கும் அந்தப் பலிபீடத்திற்கு அப்பால் - உட்செல்லும் வழியின் இரு பக்கங்களிலும், நவநிதிகளுக்கு அதிபதிகளான குபேர தேவர்கள் இடைவிடாது வாரிவழங்கிக் கொண்டிருக்கும் இரு மண்டபங்கள் இருந்தன. (அவை கொடைக்கரமண்டபம் எனப்படும்)

1120. பாடலோடு பயின்று இலயம் பல
கூடிநீடு நிலா ஒல்லை மின்னெனத்
தோடும் ஆடுவ அச்சுரத்தேவியர்
ஆடும் நாடக சாலை, அப்பாலவே.

அவற்றை தாண்டிச் சென்றால்; பாடலுடன் இலக்கண லயத்துடன், நிலவொளி வீசும் பெரிய காதணிகள் அசையுமாறு மின்னெச்சுழன்று ஆடும், அந்த குபேரர்களின் தேவமாதர்களின் நாட்டியங்கள் நிகழும் சாலைகள் அந்தக் கொடைக்கர மண்டபத்திற்கப்பால் விளங்கின.

1121. வெற்றி முற்ற விதிக்கின் ஐத் தூபைகள்
உற்று நின்றன ஓங்கி ஓர் யோசனை
கற்றும் வேறுள வேதிகை தோரணம்
வெற்றி வெண்கொடி மாலைய மேலெலாம்.

அந்த ஏழாம் நிலமாகிய கிரகாங்கண் பூமியின் மூலை திசைகளில் நிற்கும் அழகார்ந்த தூபைகள் ஒரு யோசனை உயரமுடைய தாய், அவற்றை நோக்குவார்க்கு வெற்றியைத் தருவனவாய் விளங்கின. தூபிகளைச் சூழ்ந்து வெவ்வேறான மதில்களும், நுழைவாயில் தோரணங்களும் வெற்றியை அளிக்கும் வெண்ணிறக் கொடிகளும், மலர், முத்து மாலைகளும் பொருந்தியிருந்தன.

1122. அடியினில் பிரப்பின் மணையொத்து இடை
துடியை வென்ற விரிமுழவின் நலம்
வடிவை ஒப்பன வையகத் தூபையிப்
இப்படியின் ஆகும் மற்றுள்ளதும் சொல்லுவாம்

மேலும், அடிப்புறம் பிரம்பில் ஆனது போல் அமைந்து இடைப்பகுதி சிறுத்து உச்சி விரிந்து மத்தள உருவில் அமைக்கப்பட்ட உலகத்தூபையும், இந்த ஏழாம் நிலத்தில் உள்ளன. மேலும் அங்குள்ளவற்றைக் கூறுவோம்.

1123. மத்திம லோகமும் மந்தரத்தையும்
ஒத்தவும் துறக்கம் நற்கேவை ஒப்பவும்
சித்தி சவ் வட்டமும், சித்தரூபியும்
பற்றியல்களைத் தெறும் பவிய கூடமும்

மேலும், மத்திய உலகம் போன்ற தூபையும், மேருமலை போல் அமைந்த தூபையும், சுவர்க்க உலகம் போன்ற தூபையும், நலம்மிக்க நவக்ரைவேயகத் தூபையும், சர்வார்த்த சித்தி தூபையும், சித்தத் தூபையும் ஆசையாகிய மயக்கைப் போக்கும் பவ்வியத் தூபையும்

1124. வீதசோகமும் மெய்ம்மை விளக்கும் என்று
ஓதும் நாமத்த ஒன்றின் ஒன்றுள்ளவாம்
காதபாதமகன்று வில்லோங்கி மேல்
ஏதமில் வலம்கொள் வட்டம் இங்கிதே.

உண்மை நிலையை ஒளிரச் செய்யும், சோகமற்ற போதித் தூபையும் மேலும் இதுபோன்ற பெயர்களையுடைய பலதூபைகள் அந்த ஏழாம் நிலத்தின் உட்புறத்தில் வரிசைகளாக அமைந்திருந்தன. இந்தத் தூபைகளை வலம் வருவதற்காக கால்காத அகலமும், ஒருவில் உயரமும் உடைய இடங்கள் குறைவின்றி அமைந்திருந்தன.

1125. வானவர் கோன் மனத்து எண்ணிச் செய்தவன்
தான்மிக வியப்புறுந் தரணி தன்மையை
யான் இவண் உரைப்பதற்கு எழுந்த மற்றிது
ஊனமே யாயினும் மொழிய வல்லனோ

சௌதர்மேந்திரன் தனது மனத்தகத்தே சிந்தித்து இயற்றியதைக்கண்டு, அவனே வியப்புறும் வண்ணம், அமைந்த இந்தச் சமவ சரண பூமியிந் தன்மைகளை நான் எடுத்துரைப்பதற்கு முற்பட்டது இயலாதாயினும் என்னால் இயன்றவரைச் சொல்ல முயற்சிப்பேன்.

1126. கோசமும் கோசமும் இரண்டு கோசமும்
கோசம் நான்கு எட்டும் நான்கு ஈரெட்டுமாய்
கோசம் ஓர் பத்தொடு ஏழ் ஒன்று மும்மதில்
கோசம் ஓர்ஆறு போயக் கோயில் எய்தினார்

இரண்டு குரோச அகலமுடைய பிரசாத சைத்ய பூமி, அதே அகலம் கொண்ட காதிகாபூமி, ஒரு காத அகலமுடைய வல்லி பூமி, இரண்டு காத அகலமான வனபூமி, பன்னிரு குரோசம் அகன்ற கொடி பூமி, அகலம் பதினாறு குரோசமுடைய கல்பக விருட்ச பூமி, பதினெட்டு குரோசம் அகன்ற கிரகாங்கண பூமி, ஆறு குரோச அகலமுடைய மூன்று மதில்கள், ஆக அறுபத்தெட்டு குரோச அகலமான ஏழு பூமிகளையும், மும்மதில்களையும் கடந்து 'ஸ்ரீ நிலையம்' என்னும் ஆலயத்தை மேரு மந்தரர்கள் இருவரும் எய்தினர்.

1127. கார்முகம் ஒன்றுமேல் ஒன்று பத்தோடு ஏழ்
கார்முகம் குறைந்தமும் மதிலின் ஓக்கமும்
கார்முகம் ஈராயிரம் ஒன்றும் ஆயபின்
நீர்மையால் உயர்ந்தன நிலங்கள் என்பவே.

ஒன்றுக்குமேல் ஒன்றாக உள்ள இந்த ஏழு நிலங்களின் அமைப்பும் உயரமும் அமைந்த விதமாவது, முதல் நிலம் பத்து வில் உயரம், அடுத்து ஒவ்வொரு நிலமும் ஒன்றுக்குஒன்று பத்து பத்து வில் அளவு உயர்ந்து சென்றன. அதேப்போல் மதில்களும் அதாவது முதல் மதில் உதய தரம் இரண்டாயிரம் வில் உயரம், பரீதிதரம் நான்காயிரமும் கல்யாணதரம் ஆறாயிரம் வில் உயரமும் ஆகும்.

1128. வார்மலிம் முலை மாதர் நடங்களும்
கார்மலிக் கதலிக் கொடி ஈட்டமும்
சேர்வின் மற்றும் உரைத்தனன் சுந்தரம்
ஓரின் நன்மதியத்தினை ஓதுமே.

வார் அணிந்த முலைகளையுடைய தேவமாதர்களின் நடனங்களைப் பற்றியும், மேக மண்டலத்தை அளாவிய கொடிகளின் ஈட்டம் பற்றியும், நிலைபெற்ற அந்த ஏழு நிலங்களில் அமைந்த மற்றவை குறித்தும் இதுகாறும் கூறினேன். இனி அழகிய சமவ சரணத்தின் மையத்தில் விளங்கும் இலட்சுமி வரமண்டபத்தின் இயல்பைக் கூறுகின்றேன்.

1129. மகரவண் கொடியவன் தன்னை வென்றவன்
நகரமும் தனது இடமாக நாட்டி ஒண்
புகரறு பொன் எயிலாம் பொற்றாமரை
சிகரமாம் திருநிலை அமைதி செப்புவாம்.

வளமார்ந்த மகரக் கொடிக்குரிய மன்மதனை, வெற்றிகொண்ட ஜினபகவானுக்கு, தேவர்களால் சமைக்கப்பட்ட சமவ சரண நகரத்தில் பொன்னாலாகிய எயில்கள் தாமரையாக, அதன் சிகரமாக விளங்கும் ஸ்ரீ நிலயத்தின் அமைப்பையும் கூறுகின்றேன்.

1130. தேவர்கோன் திசைதிசை கண்டுசெப்பிய
மூவுலகரசர்கன் ஆதி மூதுறை
மேவிய இதனை யான் விளம்பலுற்றது
நாவலர் நகுவதோர் வாயிலாகுமே.

தேவேந்திரனே திசைசொறும் நேரில் சென்று கூர்ந்து கவனித்துக் கூறிய வண்ணம் மூன்று உலக அரசர்களாலும், மூவுலக நாதனுக்காக அமைக்கப்பட்ட உன்னத இடத்தே பொருந்தி நிற்கும் இந்த ஸ்ரீ நிலயத்தின் சிறப்பினை நான்கூற முற்பட்ட செயல் மேலோர்களால் நகைத்தற்குரிய ஒன்றாகும்.

1131. இவ்விடம் இவ்வண்ணம் ஆகில் நன்றெனில்
அவ்விடம் அவ்வணம் ஆகித் தோன்றிடும்
இவ்விடத்து இவ்விடம் அழகு இது என்றிடின்
அவ்விடத்து அவ்விடம் அழகிதாகுமே.

இந்த இடம் இவ்வாறு இருப்பின் நல்லது என எண்ணினால் அந்த இடம் அவ்வாறே மாறித் தோன்றும், இதைக் காட்டிலும் அது அழகானது என்று நினைத்தால் அது அப்படியே அழகு பெறும்.

1132. உச்சமே நீசமாய் நீசம் உச்சமாய்
இச்சையால் ஒருவனுக்கு இயலுமாறு போல்
உச்சமே நீசமாய் நீசம் உச்சமாய்

இச்சையின் படியினால் எங்கும் தோன்றுமே.

மனிதனுடைய மன ஆசைக்கு ஏற்றாற்போல் உயர்ந்த பொருள் தாழ்ந்ததாகவும், தாழ்ந்தவை உயர்வாகவும் தோன்றுவதுபோல், இந்த இடத்திலும் அவரவர் மனநிலைக்கு ஏற்ப, உயர்ந்தவை தாழ்ந்தும், தாழ்ந்தவை உயர்ந்தும் எங்கும் விளங்கும் வியப்பிற்கு உரியதாகும். அதாவது இந்த இடம், காண்போரை பிரமிக்கச்செய்யும் என்பதாம்.

1133. ஓசனை மூன்றரை அகன்றது ஓங்கியது
ஓசனை நான்கு மேல் கோசம் ஐந்துகீழ்
மாசிலாப் பொன்மணி பத்து ஈரெட்டினால்
ஆசைபோல் பரந்த விலை அவயவத்ததாம்

இந்த ஸ்ரீநிலயமானது பதினான்கு காத அகலம் உடையதாகும், அடி முதல் முடிவரை நான்கு யோசனை ஐந்து குரோசம் உயரமாகும். மாசற்ற பொன்னாலும், பதினாறு குற்றங்கள் நீங்கிய மணிகளாலும், மக்களின் ஆசையைப் போல் பரந்த ஒளிக்கதிர்களையுடையதாகும்.

1134. தலம்தன்மேல் சகதிகள் மூன்று தம்மிசை
இலங்கும் பட்டிகையும், ஐஞ்ஞூறு விற்களை
விலங்ககன்று உயர்ந்தன, வேறு வேறொளி
மலர்ந்து வில் பயின்று, வச்சிர மயங்களாம்

பதினான்கு காதம் அகலமுடைய அந்த நிலத்தின் மீது மேகலைபோல் ஒன்றின் மீது ஒன்றாகச் சூழ்ந்திருக்கும் ஜகதீதலங்கள் (திரிமேகலா பீடங்கள்) ஒவ்வொன்றும் ஐநூறுவில் அகலமுடையதாக், அதற்கேற்ற உயரம் பெற்று வச்சிர மணியால் அமைந்து மாறாத ஒளி பெற்றிலங்குவன.

1135. மார்பளவு உயர்ந்த, வரண்டகத்தின் மேல்
கார்முகம் சகதியின் கதலிகட்கு இடை
பாரவில் பத்திடை கூடம் கோட்டகம்
நீர்மையால்தனுமுப்பது இரட்டி நீண்டவே

அந்த ஜகதீ தலங்களின்மேல் மார்பளவு உயர்ந்த மண்டப விளிம்புகளில், ஒருவில் இடைவெளியில் அழகுற வரண்டகக் கொடிகள் பொருந்தியுள்ளன. அங்கே பத்துவில் இடைவெளியில் அமைந்த மிகப் பெரிய கூடங்களும், கோட்டகங்களும் ஒவ்வொன்றும் அதாவது கூடங்கள் முப்பது வில்நீளமும் கோட்டங்கள் அறுபது வில் நீளமும் உடையதாகும்.

1136. தலம்இரண்டு இவற்றின் வாய்தல் காவலா
நிலையம் அந்தராளத்து நின்ற எங்கணும்
தலை எழுநூறு முன்சகதியில் முறை
நிலை இரண்டெழுபது நாற்பத்தெட்டுமாம்

இந்த ஜகதீ தலத்தின்மேல் அமைந்த கூடங்களும், கோட்டங்களும், பல நிலைகளும் அந்தராளங்களும் உடையதாய், வாயில் காவலர்களைப் போல் நின்றன. முதல் பீடத்தின் மேல் அமைந்த கூடங்களின் எண்ணிக்கை எழுநூற்றெழுபத்திரண்டு, இரண்டாவது பீடத்தில் எழுநூற்றி நாற்பது மூன்றாவதில் எழு நூற்றெட்டுமாகும்.

1137. கூடத்தின் எண்ணவே கோட்டகம் கொடி
பீடத்தின் எழுபத்து ஏழாயிரங்களின்
ஊடுற்ற மூன்று நூற்றெண்பத் தொன்றுமாய்
நீடுற்ற முதலாம்சகதி நின்றவே.

அங்கே எத்தனை கூடங்கள் உள்ளனவோ அதே அளவில் கோட்டகங்களும் இருந்தன. மேலும், முதல் பீடத்தின் மண்டப விளிம்புகளில் பொருத்தப்பட்ட வரண்டகக் கொடிகளின் எண்ணிக்கை, எழுபத்தேழாயிரத்து முன்னூற்று எண்பத்தொன்றாகும்.

1138. எழுபத்து நான்கு ஐயாயிரத்து மாறிய
குழுவுற்ற இரண்டு நூற்றெழு பத்தொன்பது
எழுபத்தோராயிரத்து ஐம்பத்தாறுமாம்
பழுதற்ற சகதிமேல் மேற்பதாகையே.

இரண்டாம் பீடத்தின் மீது அமைந்த கொடிகளின் எண்ணிக்கை, எழுபத்துநாலாயிரத்து இருநூற்றெழுபத்து ஒன்பதும், மூன்றாம் பீடத்து மண்டபத்தின்மேல், எழுபத்தோராயிரத்து ஐம்பத்தாறு கொடிகளும் அமைந்திருந்தன.

1139. இரண்டு நூற்றெழுபத்து ஏழாயிரத்தொடு
திரண்ட தொள்ளாயிரத்து இருபதாம் முதற்கு
இரண்டு நூற்று அறுபத்தாறாயிரத்தொடு
நிரந்த நானூறுகள் நடுவு நின்றவே.

மேலும் முதல் பீடத்தின் மீதுள்ள கூடங்களில் அமைந்த கொடிகளின் எண்ணிக்கை, இரண்டு லட்சத்து எழுபத்தேழாயிரத்து தொளாயிரத்து இருபதாகும். இரண்டாம் பீடத்து மண்டபத்தின் கூடங்கள்மேல் இரண்டு லட்சத்து அறுபத்தாறாயிரத்து நானூறு கொடிகள் அமைந்திருந்தன.

1140. கன்னை எட்டுஎட்டு நான்கு ஐந்து இரண்டிடைச்
சொன்ன தானத்தின் மூன்றாவதின் தொகை
இன்ன கூடத்த கோட்டகந் தன்மிசைச்
சொன்ன சொன்னவை அங்கங்கு இரட்டியே.

மூன்றாவது பீடத்து மண்டபத்தின் கூடங்களில் பொருந்திய, கொடிகளின் எண்ணிக்கை இரண்டு லட்சத்து ஐம்பத்து நாலாயிரத்து எண்ணூற்று எண்பதாகும். கூடங்களில் அமைந்த கொடிகளின் எண்ணிக்கை இவ்வாறாகும். இனி கோட்டங்களின் மேல் பொருந்திய கொடிகளின் அளவு எவ்வளவு எனில், ஒவ்வொரு பீடத்து கூடங்களில் உள்ள கொடிகளின் இரட்டித்த எண்ணிக்கையாகும்.

1141. பட்டிகைத் தலத்தின்மேல் பைம்பொற் கோயிலின்
எட்டலாம் திசைமுகத்து இருந்த மண்டபத்
துட்டொளி, திரண்டு காவதம் ஒன்று ஒக்கமும்
விட்டொளி துளும்ப வெஞ் சுடரின் நின்றவே.

பைம்பொன்னால் இயன்ற ஸ்ரீநிலய ஆலயத்தின் அனைத்துப் பக்கங்களிலும் மூன்று மேகலைகளின் மீதும், விளக்கிநின்ற கூட, கோட்டங்களின் மண்டபங்களின் சோதியானது திரண்டு இளஞ்சூரியனது, கதிர்போல் வீசிநின்ற அவற்றின் உயரம் ஒரு காதமாகும்.

1142. மகரவாய் மண்டபத்து அரைய வாயநால்
சிகரவாய்ச் சினகரம் சிவம் செய்மூர்த்திகள்
பகரொணாதன பரிவாரம் தன்னொடு
புகரிலா வான் அத்தம்போன்று தோன்றுமே.

முன்கூறப்பட்ட திரிமேகலா பீடத்தின் மண்டபங்களின் நான்கு திசைகளிலும், வாயில்களையும், கோபுரங்களையுடைய ஜின ஆலயங்களின் மையத்தில், பகர முடியா பேரழகுடையதும், தரிசிப்போர்க்குப் புண்ணியப் பேற்றினை அளிக்கின்ற ஜினபிம்பங்கள் முக்குடை, வெண்கவரி ஆகியவைகளுடன் குற்றமற்ற கண்ணாடியைப் போல் விளங்கின.

1143. வில்லுமிழ்ந்திடும் மணிமிடைந்த மேனிய
நல்ல நாமங்கள் நாலாறு மேவின
செல்வமும் திண்மையும் அறிவும் வென்றியும்
நல்குவ நாற்றிற்கும் முகமும் நான்கவே.

அந்த ஜிநபிம்பங்கள் ஒளிக்கதிர்களை உமிழ்ந்திடும் அழகார்ந்த மேனியையுடைய நலம் பயக்கும் இருபத்து நான்கு தீர்த்தங்கர பிம்பங்களாகும். வந்து வணங்குகின்றவர்களுக்கு அவை செல்வமும், ஞானமும், திண்மையும், வெற்றியும் தருபவையாகும். அவை நான்கு முகங்களையுடைய சதுர்முக பிம்பங்களாகும் (மூன்று பீடங்களிலும், எழுத்திரண்டு முக்கால தீர்த்தங்கரர்கள்)

1144. நாதன் உள்ளுறு நான்முகம் போலும் நல்
வாய்தல் நான்குடை மண்டபம் நான்கினுள்
சாதகும்பம் மஞ்சங்கள் நாலைந்து வில்
ஓதும் ஐம்பதும் ஓங்கி அகன்றவே.

உள்ளே எழுந்தருளியுள்ள ஜினபகவானின் நான்கு முகங்களைப்போல் நலம் தரும் நான்கு மகா திக்குகளிலும் நான்கு பெருவீதிகளையுடைய இந்த ஜகதீதல மண்டபங்கள் மூன்றிலும், திசை வழிகளில் நடுவே பொன்னாலாகிய கும்பங்களை ஏற்றுநின்ற மேடைகள் ஐம்பது வில் அகன்று, இருபது வில் உயர்ந்தும் இருக்கும். (ஒவ்வொரு பீடத்திலும், திசைக்கு ஒன்றாக மூன்று பீடத்திலும் பன்னிரண்டு கும்பங்கள் நிறுவப்பட்டிந்தன.)

1145. மாரிபோல முழங்குவ மஞ்சின்மேல்
பேரி நான்முகச் சங்கம் இரண்டுள
காரினுள் மலி சூரியன் நேர் பொனின்
வாரின் வந்திழி கண்டையும் ஆகுமே.

அதே மேடைகளின் மீது, மழை காலத்து மேகம் போல் முடங்கக் கூடிய முரசங்களும், நான்கு முகங்களையுடைய சங்குகளும், உள்ளன. அழகார்ந்த மண்டபத்தினுள் பொற் சங்கலிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் சேமங்கலங்கள் சூரிய பிம்பம் போல் விளங்கின.

1146. கடிகையும் சாமமும் கலந்த சந்தியும்
முடிவினில் கண்டை சங்கங்கள் பேரிகை
இடியெனத் தம்மிலே முழங்கி இன்னொலிப்
படுவதாம் முப்பதுயோசனை பரக்குமே.

ஒரு நாழிகை சென்றதும் சேமங்கலமும் ஒரு ஜாமம் சென்றதும் சங்கும், பதினைந்து நாழிகை கழிந்ததும் முரசும் தனக்குத்தானே முழங்கும். பதினைந்து நாழிகைக்கு ஒருதரம் மூன்றும் சேர்ந்து மேகமுழக்கம் போல் முழங்கும். இனிமையான அந்த முழக்கமானது முப்பது யோசனை தூரத்துக்குப் பரந்து கேட்கும்.

1147. பெருமலர் மாரிய பேரியாதியின்
திருநிலை வாய்தல்கள் இருமருங்கு இசை
மருவிய கருவிகள் ஏந்திக் கந்தப்ப
அரசர்கள் தேவிமார் பாடலாகுமே.

மேலே கூறிய பேரிகை முதலாகிய ஒலிக்கருவிகள் மிக்கிருப்பதும், வானவர் மலர் மழை பொழியக்கூடியதுமான, ஸ்ரீநிலய வாயில்களில் இருபக்கங்களிலும், வீணை முதலிய இன்னிசைக் கருவிகளை, ஏந்திய கந்தர்வ இந்திரர்களின் தேவிமார்கள், இனிமையாகப் பாடும் மண்டபங்களாகும்.

1148. மங்கல நிரையவே வாய்தல் தோரணப்
பந்தியின் நிரையவே படிமுடிவெலாம்
இங்கெலா வாய்தலும் காவல் ஓம்பலில்
தங்கினார் சோதம் ஈசான ராசரே.

இந்த ஜகதீதல பூமிகள் எங்கும், அட்டமங்கலங்களும், வாயிற் படிகளில் மகர தோரணங்களும், வரிசை வரிசையாக நிறைந்திருந்தன. இங்குள்ள வாயில்கள் எல்லாவற்றிலும், காவல் புரிவதற்காக சௌதர்ம கல்பத்து தேவர்களும் ஈசன கல்பத்து தேவர்களும் தங்கியிருந்தனர்.

1149. இரவி எண்ணரியவாம் பரிதியின் இடை
மருவிய தென மணிஒளிசெய் மண்டலத்து
உருவொரு பிழம்பதாய் ஒளியில் தோன்றிடும்
திருநிலையம் எலாம் திருநிலையமே.

எண்ணற்ற சூரியர்களின் மண்டலத்து மையத்தே ஒளிரும் ஒளிப் பிழம்பே போல், இரத்தினங்களின் ஒளிக்கற்றைகளின் மத்தியில் விளங்கித் தோன்றும் இந்த ஸ்ரீநிலயம் பிரகாசத்தோடு ஒளிப்பிழம்பாகக் காணப்படும். இப்படிப்பட்ட ஆலயங்கள் அனைத்தும் ஸ்ரீநிலையமேயாகும். அதாவது இந்த ஸ்ரீநிலையத்திற்கு ஒப்பானது வேறொன்றில்லை என்பதாம்.

1150. பலநெறி ஒளிமணி பயின்ற பந்தியும்
இலதையும் வல்லியும் இருந்த கூடமும்
விலையல்குல் மடநல்லார் மேகலைகளும்
முலைகளும் போல் மயக்குறுக்கும் முற்றுமே.

பல்வேறு வழிகளில் ஒளிக்கதிர்களைச் சொரிந்து ஒளிரும் இரத்தினங்களால் உருவாக்கப்பட்ட வரிசைகளும் இலைக்கொடிகளாகச் செதுக்கப்பட்ட சிற்ப வேலைப்பாடும், அவற்றையுடைய கொடிகளின் அமைப்பும், அமைந்த கூட கோட்டங்களின் தோற்றம், விலை மகளிரின் மேகலைகளும் ஒப்பனைமிக்க மார்பகங்களும் போன்று வியக்கச் செய்யும்.

1151. துவர்ப்பசை நான்கிலார்க்கு இறைவன் தொன்னகர்ச்
சுவர்த்தலம் நான்கிரு காதம் ஓங்கிமா
தவர்க்கு இறை நகர்ச்சுவர் அகலம் பாதமேல்
உவப்ப மூன்று ஓசனை விரிந்து அகன்றவே.

நான்கு வகைத் துவர்ப்புக்களை ஒழித்தவர்களின் இறைவனாகிய ஜினபகவானது சமவ சரணத்தேயுள்ள லட்சுமீ வர மண்டபத்தின் சுற்றுச் சுவர்களின் உயரம் நான்கு காதமாகும். கணதரர் முதலிய மாமுனிவர்களின் தலைவனாகிய, பகவானது ஸ்ரீ நிலைய ஆலயத்தின் சுவர் அகலம் கால் காதமாகும். உட்புற அகலம் மூன்று யோசனை அளவுடையதாய் விரிந்திருந்தது.

1152. தலங்களின் உயரமாய் அறுபத்து நான்கு வில்
விலக்குடன் அறுபத்து நான்கு வீழ்ந்தவன்
நிலங்கள் மூன்னூற்று எழுபத்தோரைந்து கீழ்த்
தலந்தன் மண்டலங்கள் மூவாயிரங்களாம்.

இனி, ஸ்ரீ நிலயத்தின் கோபுரமானது, முன்னூற்று எழுபத்தைந்து நிலைகளையுடையது. அடிநிலை மூன்று யோசனை அகல சதுரமாகும். உயரம் அறுபத்து நான்கு வில்லாகும். அடுத்தது அறுபத்து நான்கு வில் குறைந்த சதுரத்தில் அதே அளவு உயரமுடையது. இது போலவே முன்னூற்று எழுபத்தைந்து நிலைகளும், சுற்றளவில் குறைந்து உயரத்தில் குறையாது நின்றன. மேலும், முதல்நிலையில் அமைந்திருந்த மேடைகளின் எண்ணிக்கை மூவாயிரமாகும்.

1153. ஆய இத்தலந்தொறும், மண்டலம் எட்டினை
மாயச் சென்று ஒழிந்திருந்த எட்டின்மேல்
தூய மண்டலத்தொகை இலக்கம் ஐந்தினோடு
ஆயிரம் அறுபத்து நான்கும் ஆகுமே.

இந்த முதல் நிலையின் மேடைகளின் எண்ணிக்கையானது, ஒவ்வொரு நிலைக்கும் ஒன்றுக்கொன்று எட்டு எட்டு மேடைகள் குறைந்ததாய், முன்னூற்றி எழுபத்தைந்தாவது நிலையில் இருந்த மேடைகளின் எண்ணிக்கை, எட்டே ஆகும். இவ்வாறு இந்தக் கோபுரத்தில் அமைந்திருந்த மேடைகளின் மொத்த எண்ணிக்கை ஐந்து லட்சத்து அறுபத்து நான்காயிரமாகும்.

1154. கடிதடத்தளவுள்ள, வரண்டகம்
படியினால் தடிநான்கில் பரந்தன
கொடிநிரைத்தன கோயில் நிலங்களை
மடநல்லார் கலை போல வளைந்தவே.

ஸ்ரீ நிலையமாகிய ஆலயத்தின் ஒவ்வொரு நிலைகளிலும், அறுபத்து நான்கு வில் அளவு உயர்ந்த விளிம்புகளில், துவஜங்களில் பாதி அளவுடைய வரண்டகக் கொடிகள் நான்கு வில்லுக்கு ஒன்றாக அமைந்து சூழ்ந்திருந்த காட்சி, மகளிர்தம் மேகலை போல் தோன்றியது.

1155. தேசுலாம் திருநிலையத்தின் மேனிலம்
கோசம் நீண்டு அகன்று அச்சிரத்தடக்கமாய்
மாசிலா மணிகளான் மலிந்தது அதன்மிசைக்
கோசம் நான்குயர்ந்து பொற்கும்பமாகுமே.

ஒளியால் சூழ்ந்துள்ள ஸ்ரீ நிலைய கோபுரத்தின் உச்சி நிலையின்மேல் ஒரு குரோசம் அகல நீளம் உடையதாய் வஜ்ஜிர மணியாலாகிய மேல்தளத்தின் மிசை, ரத்தினங்கள் நிறைந்திருக்க, நான்கு குரோசம் உயரமுடைய கலசம் அமைந்திருந்தது.

1156. இரவிவந்து உதயமேறி இருந்தது போலும் இந்தத்
திருநிலையத்தின் உச்சி செம்பொற் கும்பத்த சென்னி
மருவிய கமலத்துள் செம்மாமணி பாதம் ஓங்கி
விரகினால் கோசம் பாதம் விரிந்து கீழ் சுருங்கிற்றாம்மேல்

உதயகிரியில் கதிரவன் உதித்து விளங்கியது போல், ஸ்ரீ நிலையத்துச்சியில் பிரகாசித்த பொன் கலசத்தில் இருந்த தாமரை மலரில் ஒரு பத்மராக ரத்தினம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதன் உயரம் ஒருகுரோசம் அடிப்புறம் கால்குரோசம் அகலமுடையதாய் உச்சி கூர்மையாக விளங்கியது.

1157. இத்தலத்தின் அகத்தின் உள்ளால் இனமணிக் குமுதவீற்றின்
வைத்த பொற்கமலம் சூழ்ந்து காவதமாய் அதன்பால்
முத்தமாலைகள் போய்க் கந்தகுடியினை முழுதும் சூழ்ந்த
தத்துநீர் கங்கைகூடம் தன்மிசைச் சென்ற தன்றே.

இனி, ஸ்ரீ நிலையத்தின் கீழ்நிலையில் பன்னிரண்டு காதம் அகன்றுள்ள மண்டபத்தின் கூறையின் உட்புறத்தில் ஒருகாத அகலத்தில், கந்தகுடிக்கு நேர் மேலே அமைக்கப்பட்ட பொற்றாமரை மலரிலிருந்து தொங்கிய அழகான முத்து மாலைகள் கந்தகுடி மண்டபம் முழுதும் சூழ்ந்திருந்தன. அக்காட்சி, கங்கைதேவியின் மாளிகைமீது சொரிகின்ற நீரைப்போல் தோன்றியது.

1158. பருமணி கூடம்ஒன்றின் பக்கத்தின் இரண்டு அவற்றை
மருவிய இரண்டு தூபை மண்டலம் மற்றிதன் கண்
பெரியது எண்ணான்கும் எட்டும் வில்லுயர்ந்து அகன்றதன்தன்
அரையதன் னரைய நின்ற அந்தரம் நுகமதாமே.

மேலும், ஸ்ரீ நிலைய கோபுர நிலைகளில் அமைந்திருந்த மேடைகள் ஒவ்வொன்றிலும், மணிகளால் இயன்ற ஒருகூடம் இருந்தது. அதன் இருபக்கங்களிலும், பெரியதும், சிறியதுமான இரண்டிரண்டு தூபைகள் இருந்தன. இதில் கூடத்தின் உயரம் முப்பத்திரண்டு வில்லாகும். பெரிய தூபையின் உயரம் பதினாறு வில்; அகலம் நாலுவில்; சிறிய தூபையின் உயரம் எட்டு வில்; அகலம் இரண்டு வில் அளவாகும். இவற்றின் இடைவெளி ஒருவில்லாகும்.

1159. நிலங்கள் நான்கு இரண்டொன்றாகி, நின்றமாகூடமாகி
இலங்கு மண்டலங்கள்தந்த மிடை, நுகம் இரண்டவாகும்
மலிந்து வெண்கொடிகள் நின்ற மண்டலம் ஒன்றின் ஊறும்
விலங்கல்மேல் எழுந்த அன்னக் குழாத்தினால் பத்துநான்காம்

அடுத்து மேடைமேல் இருக்கும் கூடங்கள் ஒவ்வொன்றும் நான்கு நிலைகளையும், பெரிய தூபைகள் இரண்டு நிலைகளையும் சிறிய தூபைகள் ஒருநிலையையும் பெற்று பெரிய சிகரங்களுடையதாய் விளங்கின. மேடைகளின் இடைவெளி இரண்டு வில் அளவாகும். அம்மேடைகளில் நிறைந்திருந்த வெண்ணிறக் கொடிகளின் எண்ணிக்கை நூற்றி நாற்பத்து நான்கு. அவை மலைமேல் பறக்கும் அன்னப் பறவைகள் போல் காணப்பட்டன.

1160. ஈரெட்டாயிரமும் ஈராறு இலக்கமும் கோடியெட்டும்
வாரத்தை அட்டார் கோயின் மண்டலக் கொடியின் ஈட்டம்
தேரட்டார் கோயில் கீழைத் தலத்தின் மேல் வரண்டகத்த
ஓரெட்டின் பாதிஒன்பான் எட்டு அஞ்சுஏழ் தானத்தாலே.

ஆசைகளை அறவே அறுத்த இறைவனது, ஆலயமாக ஸ்ரீ நிலையத்தின் மேடைகள் அனைத்தின் மீதும் அமைந்திருந்த கொடிகளின் மொத்த எண்ணிக்கை, எட்டு கோடியே பன்னிரண்டு லட்சத்து பதினாறாயிரமாகும். தேர்போல் அமைக்கப்பட்டு அழகார்ந்த அந்த ஆலயத்தின் கீழ்நிலையின் விளிம்புகளில் பொருந்தி நின்ற கொடிகள் மொத்தம் எழுபத்தைந்தாயிரத்து எண்ணூற்றி தொண்ணூற்றி நான்காகும்.

1161. இரண்டினோடு இரண்டு நூறு தலந்தொறும் குறைந்து சென்னி
இரண்டினோடு இரண்டு நூறாம், தொகை ஒருகோடி நாற்பத்து
இரண்டு இலக்கங்கள் நாற்பத்தோராயிரம் இவற்றினோடு
வரண்டகப் பதாகை நூற்று நாற்பத்து நான்கு மாமே.

இதுபோலவே ஒவ்வொரு மேல்மேல் நிலைகளின் விளிம்புகளிலும், ஒன்றுக்கொன்று, இருநூற்றிரண்டு கொடிகள் குறைவாக அமைந்திருந்தன (உச்சி நிலையில் உள்ள கொடிகளின் எண்ணிக்கை இருநூற்றிரண்டாம்). அவற்றின் மொத்த எண்ணிக்கை, ஒரு கோடியே நாற்பத்திரண்டு லட்சத்து நாற்பத்தோராயிரத்து நாற்பத்து நான்காகும்.

1162. வரண்டகம் மண்டலத்தின் வந்த அக்கொடியின் குப்பை
இரண்டையும் தொகுப்பக் கோயில் கொடியினது ஈட்டமாகும்
திரண்டுவந்து இழியும் தேவர் சித்திரகூடம் காணா
மருண்டு நின்றுரைப்பர் வையத்து இல்லதோர் வடிவிதென்றே.

ஸ்ரீ நிலையத்தின் நிலை விளிம்புகளிலும் உட்புற மேடைகளிலும், பொருந்தி நின்ற கொடிகளின் மொத்த எண்ணிக்கை அந்த ஸ்ரீநிலயக் கொடிகளின் மொத்த தொகையாகும். பல்வேறு தேவர்களின் கூட்டமானது இந்தச் சமவ சரணத்தில் வந்து பார்க்கும்போது மிகவும் விசித்திரமான சிகரங்களை உடைய ஸ்ரீநிலயத்தின் கோபுரத்தை வியந்து நோக்கி இந்த உலகத்தில் வேறு எங்கும் இல்லாத ஓர் அற்புத அமைப்பாகும் இது எனப் போற்றுவர்.

1163. தேவரை வியப்புறுக்கும், சித்திரகூடம் செம்பொன்
காவதம் இரண்டுயர்ந்த, வாய்தல்கள் அகன்ற காதம்
மூவுலகத்தின், நல்ல மணி முத்தின் வைரத்தாய
காவலர் முடிகள் போலும் குடுமிய கதவமெல்லாம்.

நால்வகை அமரர்களையும் வியப்பில் ஆழ்த்தும் இந்தச் சித்திர மண்டபமானது, தனது நான்கு திசைச் சுவர்களில் பெற்றுள்ள செம்பொன்னாலாகிய வாயிற்படிகள் இரண்டுகாத உயரமாகும். ஒருகாத அகலமாகும். அதன் கதவுகள் மூன்று உலகத்திலும் ஆய்தெடுத்த மணிகளாலும் முத்துக்களாலும் வஜ்ஜிர ரத்தினத்தாலும் ஆக்கப்பட்டு, மன்னர்களின் முடிகளைப் போன்ற குமிள்களையுடையதாகும்.

1164. கதவுகால் கந்தப்பட்டிக் கம்புகள் வயிரம் நானா
விதமணி பயின்ற பத்தி ஆயிரத்து அகத்துப் பைம்பொன்
இலதை வல்லிகளின் உள்ளால் இருந்த பத்திரிகைகள்
கதலிகை கம்பினம்பொற் கமலங்கள் செறிந்தவற்றுள்.

அந்தக் கதவுகளின் நெடுக்குக் குறுக்குச் சட்டங்கள், வஜ்ஜிர ரத்தினத்தால் அமைந்தவை. பல்வேறு மணிகளால் இயற்றப்பட்ட ஆயிரம் வரிசைகளின் இடை இடையே, பைம்பொன்னால் ஆகிய கொடிகளும் பொருந்தியிருந்தன. இலைகளையுடைய முத்துக் கொடிகளும் சேர்ந்துள்ளன. குறுக்கு, நெடுக்குச் சட்டங்கள் கூடும் இடங்களில் பொருத்தப்பட்ட ஆணிகளின் அடியில், பொன்னாலாகிய தாமரை மலர்கள் சேர்ந்திருக்கும் அவற்றில்,

1165. மருவிய மரதகத்தின் கொட்டைகள் வண்டு மட்டைப்
பருகுவ போலும் பைம்பொன் கிம்புரி இருந்த பாங்கில்
திருமுதல் மங்கலங்கள் செறிந்தன சதங்கை மாலை
அரமும் அனங்கன் வில்லும் ஆயிடைப் பரந்த மாதோ.

சேர்ந்திருந்த மரகதமணியினாலாகிய குமிழ்கள், பச்சைநிற வண்டுகள் மலரின் தேனைப் பருகுவது போல் தோற்றமளிக்கும். மேலும் பொன் பூண்களும் பொருந்தியிருந்தன. முன்சொன்ன வரிசைகளில் இலக்குமி முதலாக அட்டமங்கலங்களும் காட்சியளித்தன. மேலும் மணிகள் ஒலிக்கும் சதங்கைகளும், மாலைகளும் மன்மதனின் வில்வடிவமும் பரவலாகப் பொருந்தி நின்றன.

1166. புளகமும் பிறையும் கம்பின் நீலத்தின் சவியும் பொற்றார்
அளகமும் நுதலும் நல்லார் வதனமும் அனைய மொட்டின்
தளையவிழ் தாமம் முத்தின் தாமங்கள் வயிரத்தாமம்
இளவெயில் விரிபொற்றாமம் இன்மணித்தாமம் மின்ன.

அக்கதவுகளின் கூட்டு வாயில்களில் பொருத்தப்பட்டுள்ள சூரிய வட்டமான கண்ணாடிகளும், சந்திரப் பிரபை போன்ற ஆடிகளும் ஆணிகளின் முனையில் பதித்த பச்சை ரத்தினங்களின் காந்தியும் ஆகிய இவைகள் மகளிர்தம் மாலைகளணிந்த கூந்தலையும், நெற்றியையும், முகத்தையும் ஒத்திருந்தன. மேலும் அக்கதவுகளில் மொட்ட வீழ்ந்த மலர்மாலைகளும், முத்து மாலைகளும் வயிரமாலைகளும் வெயில் போல் மின்னும் பொன் மாலைகளும் மணிமாலைகளும் ஒளிர்ந்தன.

1167. வம்புகொண்டு எழுந்து சூழ்ந்த மணியொளி பரந்த வாய்தல்
தம்புடை இருந்துயர்ந்த தமனிய பீடத்துச்சிக்
கும்பங்கள் இருந்து அவற்றில் தூபங்கள் கோட்படாதே
அம்பரத்து எழுந்து திக்கைப் பரிமளமாக்கு நின்றே.

புதுமையான ஒளிக்கதிர்கள் வெளிப்பட்டு சூழ்ந்திருந்த இரத்தினங்களின் சோதி உள்ளே வாயில்களின் அருகில் நிறைந்திட, பொன் பீடத்தின்மேல் தூபக்கலசங்கள் பொருந்தி நின்றன, அவற்றிலிருந்து குறையாது வெளிப்படும் நறுமணப்புகை ஸ்ரீ நிலையத்தின் நாற்புறமும் பரவி பரிமளிக்கும்.

1168. வீதிகள் அகன்று காதம் வேதிகை, இரண்டவாகும்
ஓதிய கும்பத்து இப்பால் ஒன்பது தூபை நிற்கும்
நீதியால் தோரணம் பத்து அவற்றிடை நின்ற அப்பால்
போதொடு பலிகள் ஏந்தும் பொன்செய் பீடங்களாமே.

உள்ளே செல்லும் ஒரு காதம் அகலமான பெருவழிகளின் இருபக்கங்களிலும், இரண்டு மதில்கள் இருந்தன. தூப கலசங்கள் இருக்கும் இடத்திற்கு உட்புறத்திலே ஒன்பது ஸ்தூபைகள் ஒன்றன்முன் ஒன்றாக நிற்கும், அவற்றில் பத்து தோரணங்கள், ஸ்தூபைகளை இணைத்து விளங்கும். மேலும் மலர்களுடன் பலிகளை ஏற்கும் பீடங்கள் வீதிக்கு ஒன்றாக நான்கு அமைந்திருந்தன.

1169. கோசம் மூவைந்தில் கந்தகுடியினைச் சூழ வந்து
மாசிலாப் படிக பித்தி மார்பளவு உயர்ந்து ஈரெட்டால்
ஆசைபோல் நிறைவிலாத நிலங்கள் பன்னிரண்டவாகி
ஈசன் மாகணங்கள் ஈராறு இருக்கைதான் இருக்குமாறே.

பதினைந்து குரோசம் நீளமுடைய சுவர், கந்தகுடியினைச் சூழ வந்து மார்பளவு உயரத்தில் மேலும் பதினாறு சுவர்களால் தடுக்கப்பட்டு, பன்னிரண்டு கோட்டங்களாக அமைந்து, அடங்காத ஆசைபோல், எவ்வளவு பேர் வந்தாலும் நிரம்பாத நிலைபெற்ற அந்த கோட்டங்கள், இறைவனுடைய பெருமைமிக்க பன்னிரு கணங்கள் தங்கும் இருக்கைகளாகும். (வீதி வழிபோக இடையில் நான்குபுரம் இரண்டிரண்டாக எட்டு சுவர்களும், நான்கு வீதிகளின் இருபுறமும் எட்டு சுவர்களும் ஆக பதினாறு).

1170. விக்கிரமங்கள் மூன்றாய் விரியும்; வீரியன் தன் கோயில்
சக்கர பீடம் காதம் இரண்டகன்று உயர்வு கோமான்
தக்கதன் அளவதாய்ப்பொன் மணியமாகி நானாப்
பக்கமும் ஏறலாகும் படி பதினாறதாமே.

அறிந்தும், கண்டும், நிலைத்தும் நிற்பதாகிய மூன்று பலம் மிக்க தன்மைகளைப் பெற்ற கடையிலா வீரியனாகி இறைவனது ஆலயத்தில் பன்னிரு கோட்டங்களுக்கு உட்புறத்தில் அமைந்த தர்ம சக்கர பீடமானது, இரண்டு காத பரப்பினதாய், இறைவன் திருஉருவத்திற்குச் சமமான உயரமுடையதாய் திசைக்கு ஒன்றாக ஒவ்வொன்றும் மணிகளால் அமைந்த படிகளையும் பெற்று விளங்கின. மொத்த படிகள் பதினாறாகும்.

1171. உரைசெய்த பீடத்து உம்பர் வலம்கொள் மண்டலமோர் கோசத்து
அரை நல்ல வரண்டகத்த தனதகத்து அளவதே யாய்
விரைமலர் மாரி மேலாம், முகத்தவாய் விழுந்த போதின்
தரையினது அகத்து நான்கு சதுமுகப் பூதமாமே.

சொல்லப்பட்ட பிரதம பீடமாகிய சக்கரபீடத்தின் மேல், பவ்வியர்கள் வலம் வருவதற்கு அமைந்த வழிகளின் அகலம் ஒரு குரோசமாகும். மேலும் அந்த இடத்திற்கேற்ற அளவினதாய் இருக்கும் கொடிகள் நிரைந்த இடங்களில் விண்ணிலிருந்து அமரர்கள் பொழியும் மலர்கள் நிறைந்திருக்கும் பீடபூமியின் மத்திய இடத்தில் சதுர்முக பூதங்கள் உள்ளன. (இவ்வாறு நான்கு திசைகளிலும் இருந்தவை நான்கு).

1172. சக்கரன் சாபம்போலத் தனுவில்லை உமிழச்சென்னி
மிக்க மாமணி செய் ஆரம் விளங்கும் ஆயிரத்ததாகித்
திக்குலாம் பொழுது காதம் நான்கதாய்ச் செறிந்திருந்தால்
வில்கள் மூன்றாய் அறப்பேராழிதான் விளங்கும் நின்றே.

இந்திர வில்லைப் போன்று, அந்தச் சதுர்முகப் பூதத்தின் மேனி ஒளிக்கதிர்களைச் சொரிய தலைமீது மிகச்சிறப்பார்ந்த மணிகளால் அமைக்கப்பட்ட மாலைகள் ஆயிரம் அணிந்து விளங்குவதும், இறைவன் ஸ்ரீவிகாரத்தின்போது, நான்கு காதமாக விரிந்தும், சமவ சரணத்தில் இருந்தால் மூன்று வில்லளவாகவும் இருக்கும் அற ஆழியானது அப்பூதங்களால் தாங்கப்பட்டு விளங்கும்.

1173. முன்னைப் பீடத்தில் பாதம் குறைந்து அகன்று உயர்ந்தவாறே
அன்னமும் மயிலும் இல்லாக் கொடி பீடம் தன்மேல்
சொன்னவாறு உயர்ந்திட்டு ஐந்து கோசமாம்; தலத்தின்மீது
மன்னிய கந்தகுடியின் மண்டபம் காதமாமே.

முதல் பீடத்தின் அளவில் முக்கால் பங்குடையதாய், ஒன்றறைக் காதம் அகலம் பெற்று அதே அளவு உயர்ந்து, அன்னக்கொடி, மயில்கொடி இவை நீங்கலாக மட்ட எட்டுவகைக் கொடிகளும் உயர்ந்ததாகி நின்ற அக்கொடி மேடையின்மீது ஒன்றேகால் காத அகலமுடைய பீடத்தில் ஒருகாத அகலமுடைய 'கந்தகுடி' மண்டபம் அமைந்து நின்றது.

1174. வான் பளிங்கால் இயன்று நாலைந்து வில் உயர்ந்த
நான்கு தம்பங்கள் ஏந்த நவமணிமாலை வாயில்
சூழ்ந்து அதன் நடுவெண் முத்த மாலைகள் பத்து வில்லுத்
தாழ்ந்து செம் முகிலினின்றும் தாரைவந்திழிவ போன்ற

தூய வெண்ணிறப் பளிங்கினாலாகியதும், இருபது வில் உயரமுடையதுமாகிய நான்கு கம்பங்கள் தாங்கி நிற்கும், அம்மண்டபத்தின் விளிம்புகளில், ஒன்பது விதமான இரத்தின மணி மாலைகள் சூழ்ந்துவிளங்க, அம்மண்டபத்தின் உட்புறத்தின் மேலேயிருந்து முத்து மாலைகள் பத்துவில் அளவிற்குத் தாழ்ந்து, மழைத்தாரைகள் வந்திறங்குவதுபோல் தோற்றமளித்தன.

1175. மூன்றுவில் உயர்ந்தகன்ற முழுமணிப் பீடம்சீயம்
ஏன்றுமேல் எழுவபோல இருந்தன ஏந்தப்பட்டது
ஆன்றபொன் அணையும் அம்பொன் விசியும் நுண் துகிலும் மேவித்
தோன்றும் மண்டபத்தின் உள்ளால் சுடருமிழ்ந்து இரவிபோன்ற

கந்தகுடி மண்டபத்தின் உட்புறத்தே மூன்றுவில் உயரத்திற்கேற்ற அகலமுடையதாகி, உயர்ந்த ரத்தினத்தினாலாகிய பீடத்தைத் தாங்கி மேல் எழுவது போல் காட்சியளிக்கும் சிம்மங்கள் பொருந்திய அரியணையின்மேல், பொன்னாலாகிய அணையும், திண்டும், மெல்லிய பூம் பட்டும் பொருந்திக் கதிரவன் போல் ஒளிவீசித் திகழ்ந்தது.

1176. வில் அரை அகன்று உயர்ந்த விழுமணிப் பீடம் மேய
எல்லை நின்று இருமருங்கும் இயக்கர் சாமரை இயக்க
நல்லெழில் பீடம் மேவி நாகஇந்திரரும் நானா
வில்லுமிழ்ந்து இலங்கும் தோள்மேல் விளங்கு சாமரையரானார்.

இறைவன் எழுந்தருளி இருக்கும், பீடத்தின் நான்கு திசைகளிலும், அரைவில் அகன்று அரைவில் உயர்ந்து நின்ற இரத்தின பீடங்களின் இரு பக்கங்களிலும், இயக்கர்கள் இணையாக நின்று கவரி இரட்டவும், மேலும் அழகிய அப்பீடங்களின்மீது பவண இந்திரர்கள் ஒளிசிந்தும் பல்வேறு அணிகளை அணிந்துள்ள தங்கள் தோள்களில் விளங்கும் வெண் சாமரைகளை உடையவர்களானார்கள்.

1177. தாமரைத் தடத்து எழுந்து பொன்மாலைத் தன்னைச் சூழ்ந்த
காமரு கன்னி அன்னக் குழாத்தினின் நான்கிலாத
சாமரைத் தொகுதி நான்கு பத்துநூறு ஆயிரம்தான்
சோமரை வென்ற மூன்று குடையினன் புடையவாமே.

தாமரைக் குளத்திலிருந்து கிளம்பி மேலெழுந்து, மேருமலையை விரும்பிச் சூழ்ந்து கொண் இளமைமிக்க அன்னப் பறவைகளின் கூட்டம்போல், நான்கு குறைந்த நாற்பது லட்சம் வெண் கவரிகள், முழுமதியை வெல்லும் முக்குடைகளையுடைய ஜினபகவானின் நான்கு பக்கங்களிலும் அசைந்தன.

1178. கருத்தினால் அன்றி வானோர் கரத்தினால் கண்டதன்றி
உரைத்த மண்டபத்தின் உம்பர் உலகொரு மூன்றுபோல
நிரைத்த முந்நிலத்ததாய் எண் ஐந்து வில்ஓங்கி ஒக்கத்து
அரைத்தலம் கீழதாகி அரை அரை மேலவாகி

இந்தக் கந்தகுடி மண்டபமானது, தேவர்கள் மனதினால் எண்ணி ஆக்கப்பட்டதன்றி கைகளினால் இயற்றப்பட்டதல்ல, இறைவன் வீற்றிருக்கும் இந்த மண்டபம் மூவுலகங்களைப்போல் ஒன்றன்மேல் ஒன்றாக மூன்று நிலைகளையுடையதாய், நாற்பது வில் உயரம் ஓங்கிய இதன் கீழ்நிலை இருபது வில் அளவாகும். அடுத்த இரண்டு நிலைகளும் பத்துபத்து வில் உயரமுடையவை.

1179. படிகளின் பந்தி வாய்தல் பரமனது உருவம் அங்கங்கு
உடைய முந்நிலங்கள் மும்மை உலகினுக்கு இறைமை ஓதி
இடையிருந்து இறைவன் கோயிற்கு, இறைமை கொண்டு இருந்தது உள்ளார்
கடையிலா அறிவன் கந்தகுடிய மாளிகை இதாமே.

ஒவ்வொரு நிலையிலும் வரிசையான படிகளைப் பெற்று, மூன்று நிலைகளிலும் இறைவனது படிமங்கள் உடையதாய், மூன்று உலகங்களுக்கும், நாதனாகும் தன்மையைத் தெரிவிக்க சமவ சரணத்தின் மையத்தே அமைந்த ஸ்ரீ நிலையத்திற்கு முதன்மை பெற்று விளங்கியது அந்த கந்தகுடி மண்டபம். முடிவிலா வாலறிவன் இருக்கும் கந்தகுடியின் இயல்பு இந்தகையதாகும்.

1180. குடதிசைக் கொடிநிரை பீடத்தின் மிசை
அடிநிலாய்ப் பிண்டி வில் அறுபது ஓங்கிமேல்
கடியுலா மலர் மிடை கவடுகந்தமா
குடியினைச் சூழ்ந்து போய் குலாவி நின்றதே.

கொடிகள் நிறைந்த இரண்டாவது பீடமாகிய துவஜ பீடத்தின்மீது, மேற்குப்பக்கத்தில் அடி, நிலை பெற்ற அசோக விருட்சமானது அறுபதுவில் உயரமுடையதாய் ஓங்கி அதற்குமேல் மணம் கமழும் மலர்கள் நிறைந்த அதன் கிளைகள், கந்தகுடி மண்டபத்தைச் சூழ்ந்து நின்று விளங்கித் தோன்றியது.

1181. முத்து மாமணி முதல் மாலை தாழ்ந்து பூந்
தொத்து மேல் ததைந்தன சுரும்பு வண்டுதேன்
தத்தியின் பிரசம் உண்டு எழுவ தம்மொலி
மொய்த்தலால் கடல் முகில் முழக்கம் ஒக்குமே.

அந்த சோக விருட்சத்தில் முத்து மாலைகளும் மணிமாலைகளும் அழகாகத் தொங்கின. மலர்க்கொத்துகள் செறிந்து நிறைந்திருந்தன. அவற்றில் வண்டுகள் முதலிய இனங்கள் தேனுண்டு ரீங்காரம் செய்து பறந்து திரியும். அவற்றின் ஒலியானது கடல், மேகம் இவற்றின் முழக்கத்தை ஒத்திருந்தது.

1182. தருவலி தலநல தடத்தின் மீதுஎலா
இருதுவும் மலர்மலர் உடன் அடர்ந்து இலை
மரகத மணிகளாய் முறிகள் வான்தளிர்
அருமணியால் இயன்று அசோகம் நின்றதே.

அழகும் வலிமையும் மிக்க அந்த அசோகமரத்தின் கிளைகளில், ஆறு பருவங்களில் காலத்துக்கேற்ப மலரும் மலர்கள் அனைத்தும் ஒருங்கே மலர்ந்திருந்தன. இலைகள் பச்சை ரத்தினங்களால் அமைந்திருந்தன. பெரிய சிறிய துளிர்கள் பதுமராக மணியால் இயன்று விளங்கின. இவ்வாறு அசோக விருட்சம் பொலிந்தது.

1183. முத்தம் வாய்ச்செறிந்தன நிறைந்த மும்மதி
ஒத்து மூவுலகினுக்கு இறைமை ஓதுவ
பத்தியிற் குயின்றது நிலைவிரித்துமேல்
சித்திமாவேந்தை முக்கவிகை சேர்ந்தவே.

இனி, முக்குடையானது, விளிம்புகளிலே முத்து மாலைகள் செறிந்திருக்க, முழுமதி மூன்று ஒன்றன் மேல் ஒன்று நின்றதுபோல் அமைந்து எங்கும் ஒளிக்கதிர்களைப் பரப்பி, மூவுலகத்திற்கும் தலைமைத் தன்மையைச் சொல்வதுபோல், சித்தியடைந்தற்குரிய இறைவனைச் சேர்ந்து நிலைத்திருந்தது.

1184. புண்டரீகத்தொடு புணர்ந்த சாயை போல்
பிண்டியின் கொழுநிழல் பிரமமூர்த்தியின்
மண்டலம் மலரடி வணங்கிப் பின்தனைக்
கண்டவர்ப் பிறவியேழ் காணநின்றதே.

அசோக விருட்சத்தின் அடர் நிழலிலே, பகவானின் பின்புறமாக செந்தாமரை மலரைச் சேர்ந்த சோதிக்கு இணையாக பிரபா மண்டலமானது, இறைவனது மலரடிகளை வணங்கி பிறகு தன்னைக் கண்டவர்களின் ஏழு பிறவிகளை உணருமாறு ஒளிர்ந்தது.

1185. அந்தமில் உவகையரான வானவர்
துந்துபி முழக்கொலி தொடர்ந்து அறாதுஎழ
வந்துடன் வீழ்ந்த வானவர் பெய் பூமழை
பந்தியும் பரவையும் பிறவும் ஆகவே.

மேலும், அளவு கடந்த மகிழ்ச்சி பொங்கும் அமரர்களின் துந்துபி என்னும் இசைக் கருவிகளின் முழக்கம், இடையறாது எங்கும் பரவி ஒலித்துக் கொண்டிருந்தது, மற்ற தேவர்கள் சொரியும் மலர் மழையானது வரிசையாகவும், பரவலாகவும் இன்னும் பலவிதங்களில் தொடர்ந்து அடுத்தடுத்து பொழிந்த வண்ணம் விளங்கியது.

1186. மாதவர் துறக்கமாதர் மாதவம் புரியும் மாதர்
சோதிடர் வான வந்தரர் பவணர் தம் தோகையன்னார்
மேதகு பவண வான வந்தரர் விளங்கும் தேவர்
சோதமனாதி வானோர் மன்னர் சொல் அறிவிலங்காம்

அடுத்து கணதரர் முதலான மாமுனிவர்களும், கல்பவாசி தேவமாதர்களும், தவம் செய்து நோற்கும் ஆர்யாங்கனைகளும், சோதிர், வியந்தர, பவண தேவ மாதர்களும், மேன்மைமிக்க பவண, வியந்தர, சோதிர் தேவர்களும் சௌதர்மேந்திரன் முதலிய கல்பவாசி அமரர்களும் அரசர்களும் பான்மை எய்திய விலங்கினங்களும் ஆகிய பன்னிரு கணங்களும் வரிசையாகப் பன்னிரண்டு கோட்டங்களில் இருந்தன.

1187. பன்னிரு கணமும் சூழப் பருதியின் நடுவண் உச்சி
மன்னிய அருக்கன் ஒத்தும் மந்தரம் உலகம் மூன்றின்
தன்னடு இருந்த தொத்தும் தாரகை நடுவண் சோமன்
என்னவும் இருந்த கோமான் தன்னிடம் குறுகினாரே.

இவ்வாறு பன்னிரு கணங்களும், முன் சொன்ன முறைப்படி சூழ்ந்திருக்க ஒளிவட்டத்தின் மையத்தே விளங்கும் கதிரவனைப் போன்றும், உலகின் நடுவில் நிற்கும் மேருவைப் போலவும், விண்மீன்களுக்கிடையே விளங்கும் முழுமதியைப் போன்றும், அரியணை மேல் இறைவன் இருக்கும் இடமான ஸ்ரீநிலையத்தை மேருமந்தரர்கள் அடைந்தனர்.

1188. மேருவைச் சூழவோடும் விரிகதிர் இரண்டுபோல
ஊர்கொள் மண்டலத்தை ஒக்கும் வலம்கொள் மண்டலத்தின் உள்ளால்
மாரிபோல் மலர்சொரிந்து வலம்கொண்டு பணிந்து புக்கார்
தோரணம் கடந்த போழ்தில் துறவினுக்கு இறைவன் தோன்ற

அவர்கள், மேருவை வலம் வரும் கதிர் பரப்பும் இரண்டு சூரியர்கள் போல், பகலவனின் பருதி வட்டம் போல் வலம் வருவதற்காக அமைந்த வட்டத்தில், வலம் வந்து மழைபோல் மலர்களைத் தூவி வணங்கி உள்ளே சென்றனர். வழியில் ஒன்பது தூபிகளையும், பத்து தோரணங்களையும் பலி பீடத்தையும் கடந்ததும், தபங்களுக்கெல்லாம் தலைவனாகிய இறைவன் தோன்றினான், தோன்றவும்,.

1189. கரங்கள் முன் குவிந்த உள்ளக் கமலங்கள் விரிந்து கண்ணீர்
சொரிந்தன பரந்தரோமம் புளகங்கள் துடித்த வாய்ச்சொல்
அரிந்தன சுரந்த காதல் அடிமுறை இடுதல் ஒய்ந்த
விரிந்தன வினைகள் எல்லாம் இரவிமுன் இருளை ஒத்தே.

அவர்தம் கரங்கள் குவிந்தன. உள்ளத் தாமரைகள் மலர்ந்தன. ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. மயிர்கள் சிலிர்த்தன. வாய்ச்சொல் குழறியது. ஸ்வாமி பக்தியாகிய காதல் மிகுந்தது. கால்கள் பெயராது ஒய்ந்தன. அவர்தம் வினைகள் இரவிமுன் இருளைப் போல் கெட்டோடின.

1190. தும்பமார் நேமி ஞான காட்சி நல்லொழுக்க மாய
சம்பவன் முன்பு நின்ற தரும சக்கரத்தின் உம்பர்
மைந்தரானவர்கள் ஏறி வலம்கொண்டு அர்ச்சனையின்முற்றித்
தும்பிபோல் பணிந்தெழுந்து வாழ்த்துபு தொடங்கினாரே.

ஒளிமிக்க சமவ சரண மண்டபத்தே நிறைந்த நல்ஞான காட்சி ஒழுக்கங்களான உயிர்குணங்கள் அனைத்தையும் ஒருங்கெய்திய பரமாத்ம சொரூப பகவான்முன் நிலைபெற்று நின்ற, சக்கர பீடத்தின் மேல் இருவரும் ஏறி வலம் வந்து அர்ச்சனைகளை முடித்து யானைகளைப் போல் பணிந்தெழுந்து வார்த்தைகளால் வாழ்த்தத் தொடங்கினர்.

1191. காமாதி கடந்ததுவும் கைவலப்பெண் அடைந்ததுவும் கமலப் போதில்
பூமாரி பொழிய எழுந்தருளியதும் பொன்எயில் மண்டலத்து அசோகம்
தேமாரிமலர் பொழியச் சீயவணை அமர்ந்ததுவும் தேவர்கோமான்
தாமாதி அணிந்து பணிந்து எழுந்ததுவும் தத்துவம் என்தகவோ என்ன.

விருப்பு வெறுப்புக்களை வென்றதும், வாலறிவென்னும் முக்தித் திருமகளை எய்தியதும், அமரர்கள் மலர்மழை செரிய தாமரை மலர்மேல் அறப்பயணம் மேற் கொண்டதும், பொன்மதில்கள் சூழ்ந்த சமவசரண மண்டலத்தே அசோகவிருட்சமானது மணம் மிக்க மலர்களைச் சொரிய அரியணைமேல் அமர்ந்திருந்ததும், தேவேந்திரன் தாமங்களால் தன்னை அணிந்து கொண்டு பணிந்து நின்றதும் ஆகிய இத்தகுதிகள் எத்தன்மையால் இயன்றதோ என்றும்,

1192. ஒருமொழியே பதினெட்டாய் உலகறிய இயம்பியதும் ஒளிகொள் மூன்றில்
திருமருவாய்த் திகழ்கின்ற திருமூர்த்தி அதன் அழகும் தேவநின்பால்
மருவினர்க்கும் அல்லவர்க்கும் ஒத்திருந்தும் அடைந்தவர்க்கு வார்த்தை நல்கும்
பெருமயமோ அதிசயமோ பிரான்நீயே மூவுலகோர் பிரானாகின்றாய்

ஒரு மொழியாகிய திருமொழியே பதினெட்டு மொழியாகி உலகத்துப் பான்மை உயிர்கள் உணருமாறு உரைத்தருளியதும், மனோஜோதி, வாக்ஜோதி காயஜோதி ஆகிய மூன்றுடன், ஸ்ரீதேவி முதலாகிய ஆயிரத்தெட்டு இலக்கணங்கள் விளங்கி நிற்கும் திருமேனியின் எழிலும், இறைவனே உம்மைச் சேர்ந்தோரிடத்தும், சேராதோரிடத்தும் விருப்பு வெறுப்புற்று அடைந்தார்க்கு அறத்தை நல்கும் உனது குணமானது கர்மக்கேட்டினால் அமைந்த அதிசயமே. அனைத்துப் பொருட்கும் இறைவன்நீயே, மூவுலக உயிர்களுக்கும் நீயே கடவுளாகின்றாய்.

1193. விலங்கரசன் வலிவிலக்கி வேர்ப்பொழிந்து விமலமாய் வெளிதாய் உன்மேல்
இலங்குபொறி ஆயிரத்தெட்டு இருந்து அழகார்ந்து இளநாற்றம் இயல்பாய் இன்சொல்
புலந்தனக்கு இன்னமுதாகி வச்சிரப்பூண் செறிந்து ஆணி அறைந்த யாப்பால்
இலங்கு வடிவுடைய திருமூர்த்தி இயல்பதிசயன் எம் இறைவன் நீயே.

வலிமை மிக்க விலங்குகளின் அரசனான அரியேற்றின் ஆற்றலின் மிக்கு, மல மூத்திர வேர்வையின்றி வெண்ணிற குருதிபெற்று மேனியில் ஆயிரத்தெட்டு திருப்பொறிகள் அழகுடன் பொருந்தி நிற்க, இனிய நறுமணத்தை இயல்பாய் பெற்று, இனிமையாக மொழிந்து, கட்புலனுக்கு அமுதம் போல் விளங்கி, வச்சிரப்பூணிட்டு ஆணியறைந்தார் போன்ற பலம் பொருந்திய உடற்கட்டைப் பெற்று, இத்தன்மைகளுடன் விளங்குகின்ற வடிவம் இயற்கையாகவே அமைந்த திருமூர்த்தியே, எங்களுக்கு நீயே, இறைவன்.

1194. சாயை பசி இமைப்பு ஒழிந்து சதுமுகமாய் மயிர் உகிர் தம் அளவிற்கு ஏற்றுக்
காயமிசை உலவி நல கலைக் கெல்லாம் இறைவனுமாய் கருமக் கேட்டின்
ஓசனை நானூறு அகத்தின் உயிர்கழிவு பசிகள் உபசருக்கம் நீங்கத்
தேசினொடு திளைத்திருந்த திருமூர்த்தி அதிசயன் எம் செல்வன்நீயே.

நிழல, பசி, இமைத்தல் ஆகியன இல்லாது நான்கு புறங்களும் ஒரே தன்மைத்தாய், மயிர், நகம் இவை வளர்தலின்றி, விண்ணகத்தே இயங்கி, அனைத்துக் கலைகளையும் பெற்று நீ இருக்குமிடத்தைச் சூழ்ந்து, நானூறு யோசனை அளவிற்கு உயிரினங்கள் பகையும், பசியும் நீங்க வினைக்கேட்டினால் ஒளிமயமாய் விளங்கும் திவ்விய தேகத்தையுடைய அதிசயங்களைப் பெற்ற நீயே எமது செல்வனாவாய்.

1195. திருமொழியின் வியத்தகவும் அனைத்துயிரின் மைந்திரியும் திக்காகாயம்
நிருமலமாய் விளங்குதல் எவ்விருதுவும் வந்து உடன் நிகழ்தல் நிலத்துப்பைங்கூழ்ப்
பெருமையொடு மங்கலங்கள் அறவாழி பூமாரி நறுங்காற்று அம்பொன்
மரைமலரின் நிறைமுதல் வானவரின் வரும் அதிசயன் எம் மன்னன் நீயே.

பல மொழியினரும் புரிந்துகொள்ளும் வண்ணம் வெளிப்படும் திருமொழியின் வியப்பும், அனைத்துயிர்களிடத்தும் ஒரே சீரான கருணைத்தன்மையும், தூய்மையான ஆகாயமும், ஆறு பருவங்களின் பயிர்களின் விளைவு ஒருங்கே பயன்தரும் விந்தையும் எல்லா தானியங்களும் விளைந்து மலிந்திருத்தலும், அட்டமங்கலக் குழுக்களும், அற ஆழியும் பூமழையும் அசையும் தென்றலும் பொற்றா மரை வரிசையும் முதலிய தெய்வீக அதிசயங்கள் அமைந்த நீயே, எமது நாயகன்.

1196. அழுந்து வினைப்பகைப் புறம்கண்டு அனைத்துலகும் அலோகமும்
தன் அகத்தின் நுங்க
எழுந்து அறிவின்முகத்தால் எப்பொருளும் உனது அகத்தடக்கி
இருந்தோய் வந்து
செழுங்குவடு செறிந்திருந்து முழங்கும் எழில் முகில்போல விராகமின்றி
எழுந்தருளி வந்திருந்து எப்பொருளும் அருளிய எங்கள் இறைவன் நீயே.

உயிர்கள் மாட்டு தொன்னெடுங்காலமாய் கட்டி நின்ற காதி வினைகளாகிய பகைவர்களை வெற்றி கண்டு, உலக அலோகங்கள் அனைத்தும் தனக்குள்ளே அடங்குமாறு உண்டாகிய வாலறிவால், உலகிலுள்ள உயிர் முதலாகிய ஆறு திரவியங்களின் குண பரியாங்களை, உனது உள்ளத்தே அறிந்து அடக்கி, அனைத்துமாய் அமைந்த இறைவனே, விண்ணிலே தவழ்ந்து, மலை முகட்டிலே அமர்ந்து முழங்கும் எழில் மேகம் போல் வெறுப்பின்றி ஸ்ரீவிஹாரமாகி வந்து சமவ சரணத்தே அரியணை மேல் அமர்ந்து அனைத்துப் பதார்த்தங்களையும் திருமொழியால் அருளிய நீயே, எமது இறைவனாவாய்.

1197. செங்கமலத்து உலவும் உந்தன் திருந்தடியை நினைந்திடவே சித்திஎன்னும்
அங்கனை வந்து அவரை அடைந்திட அதன்மேல் கொடையின்றாய் அருளுநீங்கி
வெங்கதங்கொண்டு உனை அடையாது ஒழிந்தவர்கள் நெடுந்துயரின் வீக்காணா
அங்க அவர்மேல் அருள்புரிவும் முனிவும் அகன்று இருன்தனை எம்இறை வன்நீயே

செந்தாமரை மலர்கள் மீது ஸ்ரீவிஹாரமாகின்ற உனது செவ்விய அடிகளைச் சிந்தித்து பக்தியுடன் பணிவோர் அதைவிட உயர்ந்திராத முக்தித் திருமகளை அடைவர். அடுத்து உள்ளத்து அருளின்றி மிக்கக் குரோதத்துடன் உம்மைச் சேராது நீங்கியவர்கள் நெடுந்துயரத்தே மூழ்கி தவிப்பதைக் கண்டு, சேர்ந்து துதிப்போர் மாட்டு அருளும், சேராதவரிடம் சினமுமின்றி நீங்கி அது அது அவரவர் தம்மை என வெறுப்பு விருப்பின்றி சம நிலையில் இருக்கும் நீயே எங்கள் தலைவனாவாய்.

1198. பொதுவகையால் பொருள்எல்லாம் ஒன்றே என்று அருள்செய்து அப்பொது வலாத
விதி வகையால் பொருளெல்லாம் வேறே என்று அவ்விரண்டும் ஒன்றே என்றும்
பொது விரிவு பொருள் நிகழ்வால் வெவ்வேறாய் ஒன்றுமாம் என்றால் உன்சொல்
மதிபெரிதும் இலாதார்க்கு மாறாகித் தோன்றாதோ, வானோர் கோவே.

தேவர்களின் தலைவனே, உலகத்திலுள்ள உயிர் முதலாகிய அனைத்துப் பொருள்களும் பொது நோக்கினால் ஒன்றுபோல் தோன்றும் என்றும் அதே பொருள்கள் சிறப்புத் தன்மையினால் நன்கு உணரும் போது, வெவ்வேறு தனித்தன்மைகளை யுடையன என்றும், பொது சிறப்பு நிலைகளினால் ஒன்றும் பலவுமாக விளங்கும் என்றும், சாதாரண சிறப்புத் தன்மைகளால் ஒன்றே என்றும், மேலும் பொதுவாகவும், சிறப்பாகவும் வேறுபடும் தன்மையுடன் நிலைத்திருப்பதால் வெவ்வேறாகவும் ஒன்றாகவும் ஆகும் என்றும் அருளிச் செய்தாய், இவ்வாறு கூறிய உனது விளக்கமானது சாதாரண அறிவுடையோர்க்கு உணர இயலாது மாறுபட்டு தோன்றுமன்றோ.

1199. ஆதியாய் ஆதியிலாய் அந்தமாய் அந்தமிலாய் அடையாது எய்தும்
போதியாய் போதியிலாய் புறத்தாய் எப்பொருளினுக்கும் அகத்தாய் மூன்று
சோதியாய் சோதியிலாய் சருங்காதாய் பெருகாதாய் தோன்றா, மாயா
நீதியாய் நீதியிலாய் நினைப்பரியாய் வினைப்பகை எம்இறைவன் நீயே.

உயிர்த் தன்மைகளைப் பெற்ற முதல்வனே அனாதியாய் மாற்றினிடையிருந்தவனே, அதிலிருந்து நீங்கி முக்தி என்னும் முடிவாய் நின்று இனி ஒரு போதும் அந்நிலையிலிருந்து முடிவற்றவனே பொறிபுல நுகர்ச்சியை அடையாது, ஆன்ம குணத்தன்மைகளால் எய்தும் பொறிகளற்ற ஞானத்தையுடையவனே பொறிகள் தொடர்புடைய மதி, சுருதி, அவதி முதலிய ஞானங்கள் நீங்கி தன் தன்மைகளுடன் நிலைத்தவனே, அனைத்துப் பொருள்களையும் ஞானத்தால் தன்னகத்தேயுடையவனே. உயிர்த் தன்மைகளான ஞான, தரிசன, சாரித்திரமாகிய மூன்று சோதிகளையுடையவனே மற்ற சோதிகள் எதுவும் இல்லாதவனே. சுருக்கம், பெருக்கம், தோற்றம், மறைவு இவை எதுவும் இல்லாதவனே. நிலைத்த நீதி சொருபனே. மாறுபடும் நீதிகளை நீக்கியவனே. சிந்தித்தற்கியலாதவனே. வினைகளின் பகைவனே. நீயே எமது இறைவன்.

1200. காமரும் துந்துபி கறங்கக் கடிமலர் மா மழைபொழியக் கவரி பொங்கத்
தேமரு பூம்பிண்டியின்கீழ் மண்டலம் போய்த் திசைகுலவத் திங்கள் வட்டம்
தாமொரு மூன்றனைய மணி முக்குடைக்கீழ் மிக்கவினை உடையச் செல்லும்
சேமமுடை நெறியருளிச் சீயவணை அமர்ந்தனை எம்செல்வன் நீயே.

விரும்பத்தக்க துந்துபி ஒலிக்க நறுமணமலர் மழை பொழிய வெண் கவரிகள் அசைய மலர் நிறைந்த அசோக விருட்சத்தின் கீழே, பிரபா மண்டல ஒளியானது திசை எங்கும் நிறைய, சந்திர மண்டலங்களை அடுக்கி வைத்தது போன்று, மணித் தண்டினையுடைய முக்குடையின்கீழ் வினைகள் கெட்டு ஓடுமாறு, மும்மணிகளாகிய முக்தி நெறியை அருளிச்செய்து அரியணைமேல் அமர்ந்த செல்வன் நீயேயாவாய்.

1201. இனையன துதியினோடு இறைஞ்சும் எல்லையின்
வினைகளின் வயறுகள் வெந்த மைந்தர்கள்
முனிமையின் வடிவினை முடிய நின்றுதம்
வினைகளை முதலற எறிய எண்ணினார்.

மேரு மந்தரர்கள் இவைபோன்ற இறைவன் பெருமைகளைக் கூறி இறைவனை வழிபடும்போது, அவர்தம் வினைக் கட்டுகள் தளர்ந்து பிரிந்தன. பான்மையில் உயர்ந்து நின்ற அரச குமாரர்கள் இருவரும் முழு நிர்வாண தீட்சையை ஏற்று வினைகள் முழுமையும் கெடுப்பதற்கு முடிவு செய்தனர்.

1202. ஏத்தரும் குணத்தவத்து இறைவ யாமுடைக்
கோத்திரம் குலம்இவை அருளு வாழிநீ
நீத்தரும் பிறவிநீர்க் கடலை நீந்துநல்
தேப்பையாம் திருவுரு என்று இறைஞ்சிடா.

சொற்களால் புகழ்தற்கரிய அனந்த குணங்களையுடைய இறைவனே! நாங்கள் அரச குலத்தவர். உயர் கோத்திரமுடையவர்; எனவே நீத்தற்கரிய பிறவிக் கடலைக் கடத்தற்கு நன்மைமிகு தெப்பமாகிய நிர்வாணத் துறவினை அருளுக. என வணங்கி.

1203. முடிகளும் கடகமும் முத்தின் பூண்களும்
கடிமிசைக் காஞ்சியும் நாணும் ஆடையும்
வடிவுடைத் தடக்கையால் வாங்கி விட்டரை
விடுசுடர் விளக்கின்முன் இமைத்து வீழ்ந்தவே

மேருமந்தரர்கள் தமது மணிமுடிகள் கைக்கங்கணங்கள் முத்தால் அமைந்த அணிகள், இடுப்பணிகள், அரைஞாண் கயிறுகள் ஆடைகள் ஆகியவற்றைத் தமது வலிமைமிக்க கைகளால் நீக்கவும், அவை அனைத்தும் விளக்கின் முன் விழுகின்ற சுடர்போல் ஒளிர்ந்து வீழ்ந்தன.

1204. குறிநெறி பயின்று எழும் குஞ்சி அஞ்சொலார்
நெறிமையை அறநெறி நினைப்ப நீக்கும் என்று
அறிவனது அடிமுதல் ஐம்பதம் சொலா
நெறிமையின் நீக்கினார் நீண்ட தோளினார்.

சகோதரர்கள், தமது நீண்ட கைகளினால் அழகிய பெண்கள் ஒப்பனை புரிந்து வழிபடும் தலைமுடியின் தன்மையை உணர்ந்து, இது உயர் நெறிகளை விலக்கி மித்யா மயக்கத்தை ஆக்குமென்று, இறைவனின் பாத வணக்கத்துடன், பஞ்ச மந்திரங்களை உச்சரித்து துறவு நெறிப்படி மயிரை நீக்கினர்.

1205. மற்புயத்தார் மயிர்வாங்கி நின்றவர்
கற்பகம் இலை மலர் கழன்றது ஒத்தனர்
மற்று வானவர் அந்தமயிரை மாலையால்
சுற்றி வான்கடலிடைத் தொழுது இட்டார்கள்.

துறவு முறைப்படி முகத்திலுள்ள மயிர்களையும் நீக்கி நின்ற மற்போர்புரியும் தோள்களையுடைய மேரு மந்தரர்கள் தோற்றம், கற்பகமானது தனது இலை மற்றும் மலர்களை உதிர்த்து நின்றதற்கு ஒப்பானது. அடுத்து தேவர்கள் அந்த ரோமங்களை மலர்மாலைகளில் சுற்றி வணக்கத்துடன் பாற்கடலிலே கொண்டுபோய் இட்டனர்.

1206. சீலமும் வதங்களும் செறிந்த எல்லையில்
மாலையும் சாந்தமும் ஏந்தி வானவர்
கோல மாதவர் குணம் புகழ்ந்து இறைஞ்சினார்
ஏலவந்து இருத்தி ஏழு அடைந்த என்பவே.

. இவர்கள்பால் மகாவிரதங்களும் சீலாசாரங்களும் சேர்ந்தன. அக்கணமே அமரர்கள் மலர்மாலை சந்தனம் முதலியவற்றை ஏந்தி அர்ச்சித்து அழகிய சிறந்த மகாதபத்தினையுடைய இவர்தம் உயர்குணங்களைப் புகழ்ந்து வணங்கினர். இவர்களுடைய உயர் ஒழுக்கத்திற்கேற்ப ஏழுவகையான ரித்திகளும் இவர்களைச் சேர்ந்தன.

1207. போதி ஆறு ஐந்து மாமருந்து மாதவம்
நீதியால் நாற்சுவை வலிகள் மூன்று இரண்டு
ஓதினார் குறைபடா உறையுள் ஊண் இவை
ஆதியாம் மாதவர் ரித்தி வண்ணமே.

இங்கு கூறப்பட்ட மேருமந்தரர்கள் எய்திய ரித்திகளின் விவரம் யாதெனின், ஆறுவிதமாகிய புத்தி ரித்தியும், ஐந்து விதமாகிய ஔடத ரித்தியும், பெருமை மிகுதப ரித்தியும், முறையாக அமைந்த நான்கு வித சுவை ரித்தியும், பலரித்திகள் மூன்றும், இரண்டு விதமாகிய குறைவுறா இட ரித்தியும் தாழ்வு படா ஊண் ரித்தியும் ஆகும்.

1208. துவர்ப்பசை நான்கொடு தொடர்ந்த பத்து மாசு
உவர்ப்பு நீரால் கழீஇ உள்ளம் தூய மா
தவத்தவர் புறப்பத்து மாசு தன்னையும்
உவத்தல் காய்வு இலாமையால் ஒருவினார்களே.

குரோதமான மாயா லோபமென்னும் நான்கு துவர்ப்புக்களுடன் சேர்ந்து நிற்கும் பத்துவகைப்பட்ட மாசுக்களையும், மன உறுதி என்னும் நீரால் (வைராக்கிய பாவனையால்) கழுவி நீக்கி, மனத் தூய்மையான தவத்தினையுடைய இவ்விருவரும், பத்து புறப்பற்றாகிய குற்றங்களையும் விருப்பு வெறுப்பற்ற தன்மையினாலே ஒழித்திருந்தார்கள்.

1209. ஒழுக்க நீர்குளித்து, உடுத்து அம்பரத்தினை
வழுக்கிலா மாதவச்சாந்து மட்டியா
விழுக்குணமணி, அணிமேனி சேர்த்தினார்
தொழில் தொடை சீலமா மாலை சூடினார்

இவர்கள் நல்லொழுக்கமென்னும் நன்னீரில் குளித்து, ஆகாயத்தையே ஆடையாக உடுத்தி, மகாதபமாகிய சந்தனத்தைப் பூசி மிகச்சிறந்த நற்காட்சி முதலாகிய ஞான குணங்களை அணிகளாக அணிந்து, தங்கள் தொழிலாக மேற்கொண்ட சீலாசாரங்களை மலர் மாலைகளாக அணிந்து கொண்டார்கள்.

1210. விதிமனர் தமை வெலவந்த கேவலத்து
அதிபதி தனக்கு இளவரசராக நல்
கதமலி கேவலி பட்டம் சூட்டினார்
விதியினால் இறைவனை வந்து இறைஞ்சினார்.

வினைகளாகிய வேந்தர்களை எல்லாம் வெல்வதற்கு வந்து சேர்ந்த, வாலறிவினையுடைய ஜினேந்திர பகவான் என்னும் பேரரசனுக்கு, இளவரசர்களாக சுருதகேவலி பட்டத்தை அணிந்தவர்களாகி, முறைப்படி எதிரேவந்து நின்று, இறைவனை வணங்கினார்கள்.

1211. இறைவ நின் அடி அடை உலகு இயற்கையும்
பெறு பொருள் அளவையும் பிழைத்த நீதியும்
மறவினை மனம்மிக வருதற்கு ஏதுவும்
பிறவியின் விகற்பமும் வீட்டின் பெற்றியும்

இறைவனே! உமது பாதத்திலே அடைந்து நிற்கும் உலகத்தின் இயல்பினையும், அவ்வுலகில் பொருந்தி நிற்கும் உயிர் முதலாகிய பொருள்களின் தன்மைகளை உள்ளபடி அறியும் ஞானத்தையும், மாறுபட்ட மித்யா நெறியையும், தீயவினைகள் மனநிலைக்கேற்ப உயிரிடத்து வந்து கட்டுவதற்கான காரணத் தன்மையினையும், இல்லற உயிர்களின் பல்வேறு பிறப்புக்களையும், வீட்டின் தன்மையினையும்,.

1212. அருளென இறைஞ்சலும் அணிக்கட்டு இன்புற
முரசு நின்று அதிர்வதின் எழுந்து கேவலத்
திருவிடு தூதிபோல் செஞ்சொல் வல்லிதான்
மருவினாள் முனிவர் தம் மனத்தகத்தையே.

எனக்கு அருளிச் செய்ய வேண்டுமென மீண்டும் பணிந்து வேண்டவும், வார்க்கட்டினையுடைய முரசானது கேட்போர் இன்புற முழங்குதல்போல், இறைவனது திவ்ய தொனியானது வாலறிவாகிய சரஸ்வதியின், தூது போல் வெளிப்பட்டு, இம்முனிவர்கள் மனத்தகத்தே பொருந்தினாள்.

1213. ஒருதிருமொழியுமே பதினெண் பாடையாய்
மருவியது ஓசனை மிகுதி மண்டலத்து
அருகு இடை முடிவு அதன் அகத்தவர்க்கெலாம்
ஒருவகையால் இனிதாய் ஒலித்ததே.

ஒப்பற்ற அந்தத் திவ்யதொனி ஒன்றே பதினெட்டு மொழிகளாய் மருவி, பன்னிரண்டு யோசனை பரப்பளவுள்ள சமவ சரணத்தில் அருகில், முடிவில் இடையில் இவ்வாறு எங்குள்ளவர்களும் ஒரே தன்மையாய் கேட்குமாறு இனிமையாய் ஒலித்தது.

1214. வினவிய பொருளெலாம் விழுங்கி மெய்த்தவர்
மனம்வலி மொழி வழி வாங்கி அப்பொருள்
தனித்தனி ஆகம் நாற்பத்திரண்ட தாய்
முனிவறச் செய்து மாமுனிவர்க்கு ஓதினார்.

கணதர பதவியைப் பெற்ற,மெய்த்தவத்தோராகிய மேருமந்தரர்கள், தாங்கள் இறைவனிடம் கேட்டறிந்த பொருள்கள் அனைத்தையும் மனோபலமென்னும் ரித்தியினால் சுருத ஞானமாக உட்கொண்டு அதையே மொழி வழியாகப் பெற்று தனித்தனியாய் நாற்பத்திரண்டு ஆகமங்களாக குற்றமறச் செய்து, கோட்டத்திலிருந்த மாமுனிவர்கள் முதலாகக் கேட்டவர்களுக்கு எடுத்தோதினார்.

1215. முடிவு இடை அகலமாய் அதம் ஒன்று ஏழ் முழவு
இடையின் ஐங்கயிறு அகன்று ஏழுநீளமாய்
அடியின் ஏழு அகன்று நீண்டு உயரம் ஈரேழுமாய்
வடிவுடை உலகம் மூவாதம் சூழ்ந்ததே.

இவ்வுலகின் உச்சியும், மத்தியும் ஒருகயிறு அகலமாகும், தெற்கு வடக்கில் நீளம் ஏழு கயிறாகும், மத்தளம் போன்ற இடைப் பகுதியில் ஐந்து கயிறு அகலமாகும். கீழ்ப்பகுதி ஏழு கயிறு நீள அகல முடையதாய் ஏழு கயிறு உயரமாம், உலகின் மொத்த உயரம் பதினான்கு கயிறு அளவாகும். இவ்வுலகம் மூன்று வாதங்களால் சூழப்பட்டுள்ளது.

1216. முழம் சிலை காவதம் ஏழ் முடித்துழி
முழம் சிலை காவதம் மூன்று வீழ்ந்தொர்பால்
எழுந்து இவ்வாறு எழுகயிறு எய்தச் சென்று இடை
விழுந்த வாறு ஒழிந்தது ஒன்றாகும் மேன்முகம்

முழம், வில், காதம் இம்மூன்று அளவுகளில் எதைக் கொண்டாலும் ஏழு முடிந்தவுடன் பக்கத்துக்கு மூன்று மூன்றாகக் குறைந்து சென்று எழுகயிறு உயரத்தேயுள்ள மத்திய உலகில் குறைந்து நின்ற அகலம், மேல் அளவான ஒரு கயிறாகும்.

1217. அரைமுழம் எழும் சென்று அங்கு நான்முழம்
பெருக இவ்வாற்றினால் பெருகிச் சென்று மேல்
அரை எழுகயிற்றின் ஐங்கயிறு அகன்று மேல்
பெருகிய படியினால் பின்சுருங்குமே.

மூன்றரை முழம் சென்ற பிறகு அங்கு நான்கு முழம் விரிவாக, இவ்வளவில் பெருகிச் சென்று மூன்றரை கயிறு உயரத்தில் (அதாவது பிரம்பகல்ப முடிவில்) ஐந்து கயிறு அகலமாகி அதற்குமேல் இதே அளவில் குறைந்து சென்று உச்சியில், ஒரு கயிறு அகலத்தில் அமையும்.

1218. பொதுவினால் ஒன்றுமாம் நாளி பாயிரம்
விதியினால் உலகு இரண்டாக வேண்டினார்
முதல் நடு இறுதியால் மூன்றும் ஆகி நால்
கதியினால் நிலத்தின் நான்காகும் என்பவே.

பொதுவாக உலகம் ஒன்று என்றும், திரசநாளி அதன் வெளிப்புற உலகம் என இரண்டாகவும், முதல் உலகம், நடு உலகம், கீழ் உலகம் என மூன்றாகவும், உயிர்களின் கதியைக் கருதி உலகம் நான்காகவும் ஆகும் என்று சொன்னார்கள்.

1219. அஞ்சுமாம் பஞ்சத்தி காயத்து ஆறுமாம்
எஞ்சிய காலத்தோடு ஏழு நாரகர்
நஞ்சுதாரிகள் நரர் ஒளியர் மேலவர்

அஞ்சொலார் இலாதவர் அகதியார்க்கிடம்

அத்திகாய நோக்கில் உலகம் ஐந்தாகவும், அவற்றுடன் காலத்தைச் சேர்க்க ஆறாகவும், நாரகர், பவணர், மனிதர், சோதிடர், கல்பவாசியர், அகமிந்திரர், சித்தர் இவர்தம் இருப்பிடநோக்கில் ஏழாகவும் ஆகும்.

1220. நிகோதம் மேல் நிரையங்கள் அஞ்சுதன்னிடைப்
பகாதள அகலம் ஓர் கயிற்ற வாகுமே
மிகாது ஒருகயிறுதான் மேரு எய்திடா
பகா நரகு இரண்டு மேல் பவணம் பத்துமாம்

நிகோதம் சேர்த்து அதற்குமேல் ஐந்து நரகங்கள் வரையில் ஒவ்வொன்றும் ஒவ்வொருகயிறு அளவு உயரமாக, மொத்தம் ஐந்து கயிறாகும், மிச்சமுள்ளது ஒருகயிறுதான். மேருமலை அடிவரையுள்ள அந்த ஒரு கயிற்றில் மற்ற இரண்டு நரகங்களும் பவணலோகம் பத்தும் அமைந்திருக்கும்.

1221. ஒன்றரை ஒன்றரை அரையொடு ஆறுமாய்
நின்ற ஒண்துறக்கம் ஓர்கயிறு நின்றவாம்
அன்றி ஏழ் நிலப்புரை நாற்பத் தொன்பதில்
சென்ற இந்திரகத்து எண்திசையும் சேணியே.

நடு உலகத்திற்குமேல் ஒன்றரை கயிறு உயரம்வரை சௌதர்ம ஈசான கல்பங்களும், அடுத்த ஒன்றரை கயிறு அளவில் சனத்குமார, மாகேந்திர கல்பங்களும், அதற்குமேல் ஆறு யுகளங்கள் அரை அரை கயிறு உயரங்கள் உடையதாய், எஞ்சிய ஒருகயிறு உயரத்தில் ஒளிமயமான அகமிந்திர உலகங்களும் சித்த உலகமும் அமைந்துள்ளன. அடுத்து ஏழு நரகங்களில் இருக்கும் நாற்பத்தொன்பது புரைகளில் ஒவ்வொன்றின் நடுவிலும் ஒவ்வொரு இந்திரகங்கள் அமைந்து அதைச் சூழ எண்திசைகளிலும், சேணி பந்தங்கள் வரிசையாக அமைந்துள்ளன.

1222. ஆறு எட்டாம் விதிக்கில் ஒன்று ஒன்று ஆங்கவை திக்கிலா மேல்
ஊறிட்ட சேணிபந்தம் புரைதொறும் ஒன்றொழித்து ஒன்றாம் கீழ்
நூறிட்டு ஆயிரங்கள் ஏச ஐயாறு, ஐயைந்து மூவைந்து
ஏறிட்ட ஈறைந்து மூன்று ஒன்றைந்திலா ஐந்து கீழாம்.

முதல் நரகத்தில் முதல் புரையில் கோண திசைகளின் நாற்பத்தொன்பது சேணி பந்தங்களும், அடுத்து புரைதோறும் திக்குக்கு ஒன்றாகக் குறைந்து சென்று, ஏழாம் நரகத்தில் திசைக்கு ஒன்று மட்டுமே. சேணி பந்தங்கள் ஆகும். முதல் நரகத்தில் முப்பது லட்சம் ஆவாசங்களும், இரண்டாம் நரகத்தில் இருபத்தைந்து லட்சம் ஆவாசங்களும், மூன்றாவதில் பதினைந்து லட்சங்களும், பத்து லட்சம் நான்காவதிலும், ஐந்தாம் நரகத்தில் மூன்று லட்சங்களும், ஐந்து குறைந்த ஒரு லட்சம் ஆவாசங்கள் ஆறாம் நரகத்திலும், ஏழாம் நரகில் ஐந்து மட்டுமே உள்ளன. (ஆவாசம் – வாழிடம்)

1223. அசுரர் நாகர் அம்பொன்னர் தீவர் எண்
திசையர் தீயவர் உதகர் வாயுவர்
விசையின் மின்னவர் மேகர் ஆகும் அத்
தச நிகாயமாம் பவணர் தாங்களே.

மற்றும் பவண லோகத்தில் அசுரர், நாகர், செர்ண குமாரர், தீபகுமாரர்,திக்குமாரர், அக்னி குமாரர், உத்திகுமாரர், வாயுகுமாரர், வித்யுக்குமாரர், மேகுமாரர் ஆக பத்து விதமாகிய பவணர்களின் சமுகங்கள் வாழ்வர்.

1224. அறுபத்து நான்கு நான்கோடு எண்பத்தேழ் பத்திரண்டும்
செறிவுற்ற தொண்ணூற்றாறும் செப்பிய எழுபத்தாறும்
மறுவற்ற அசுரர் நாகர் பொன்னர் வாயுக்கள் மற்றை
அறுவர்க்கும் வேறு நூறாயிரம் பவணங்களாமே.

குற்றமற்ற அசுர குமாரர்களுக்கு அறுபத்து நான்கு லட்சம் விமானங்களும், நாக குமாரர்களுக்கு எண்பத்து நான்கு லட்சங்களும், சொர்ண குமாரர்களுக்கு எழுபத்திரண்டு லட்சம் விமானங்களும், எஞ்சிய ஆறு வகையினருக்கும் முறையாக எழுபத்தாறு, எழுபத்தாறு லட்சம் விமானங்களும் ஊழிடங்களாக அமைந்தன.

1225. பவணர்தம் பவணங்கள் கோடி ஏழொடு
சிவணிய எழுபதோடு இரண்டு லக்கமாம்
அவணுறை அசுரருக்கு ஆயு வான்கடல்
உவமையில் தனுதனு ஐயைந்து ஓங்கினார்.

பவண தேவர்தம் விமானங்களின் எண்ணிக்கை ஏழு கோடியே எழுபத்திரண்டு லட்சமாகும். அங்கே வாழும் அசுரகுமாரர்களின் ஆயுள் உயர்ந்தது ஒரு கடற்காலம், ஒப்பற்ற அவர்கள் இருபத்தைந்து வில் அளவு ஓங்கி உயர்ந்தவர்கள்.

1226. பல்லம் மூன்று இரண்டரை இரண்டு மூவரை
சொல்லிய நாகர் நற்சுவணர் தீவரோடு
அல்லவர் அறுவர்க்கும் ஆயு நாகர்க்கு
வில்லு மூவைந்து மேலவர்க்கு ஈரைந்துமாம்

சொல்லப்பட்ட நாக குமாரர் தம் ஆயுள், மூன்று பல்லம், சொர்ணகுமாரர்களுக்கு இரண்டரை பல்லமாகும், தீப குமாரர் ஆயுள் இரண்டு பல்லம் மற்ற அறுவகையோருக்கும் ஒன்றரை, ஒன்றரை பல்லம் உயர்ந்த பட்ச ஆயுளாகும். நாக குமாரர்கள் உயரம் பதினைந்து வில் அளவாகும். மற்றவர்கள் உயரம் பத்து வில் ஆகும்.

1227. மானவர் உறைவிடம் மந்தரத்தினைத்
தான் நடுவுடையது தீப சாகரம்
ஊனமில் இரண்டரை இரண்டுமாய்ப்புகை
தான் அவற்றிடை ஒன்பதைந்து லக்கமாம்.

மனிதர்கள் வாழிடமானது மேருமலையை மையத்தே கொண்டுள்ள குற்றமற்ற இரண்டரை தீபங்களும், இரண்டு பெருங்கடல்களுமாம். இவைகள் அனைத்தின் அகலம் நாற்பத்தைந்து லட்சம் யோசனைகளாகும்.

1228. ஆரியர் மிலேச்சராவார் மானவர் அறத்தை ஓர்வார்
ஆரியர் தருமகண்டம் நூற்றி எழுத்தின் ஆவார்
வாரியுள்தீவு தொண்ணூற்று ஆறு மற்றைக் கண்டத்தும்
சேருநர் அறத்தைச் சேரார் மிலேச்சராய் செப்பப்பட்டார்.

மனிதர்கள் ஆரியரென்றும், மிலேச்சரென்றும் இருவகைப்படுவர். அறத்தை உணர்ந்து அதைக் கடைப்பிடிக்கும் ஆரியர்கள் தரும கண்டங்கள், நூற்றி எழுபதிலே பிறப்பர். உட்புறத்தீபங்கள் தொண்ணூற்றாறிலும், மற்ற பத்து கண்டங்களிலும் உள்ள மிலேச்சர்கள் தருமத்தை மேற்கொள்ளார் என ஆகமங்கள் கூறுகின்றன.

1229. ஒன்றுதாம் காலர் வாலர் கொம்பர் தாழ்செவியர் சீயம்
பன்றி மான் குரங்கு கீரி ஒட்டகம் கரடி ஆதி
ஒன்றலா முகத்தர் பல்லம் ஆயுகம் காதம் ஒக்கம்
தின்றிடா பழத்தை மண்ணை முழஞ்சிலும் மரத்தும் சேர்வர்

உட்புற தீபங்களில் வசிப்போர் ஒருகால் உடையோராகவும், வால் உள்ளவராயும், கொம்புகளைப் பெற்றிருப்போரும், நீண்ட காதுகள் உடையராகவும்,சிங்கம், பன்றி, மான், குரங்கு, கீரி, ஒட்டகம், கரடி முதலியவற்றின் முகங்களைப் பெற்றிருப்போரும், மேலும் மனிதர்களுக்குப் பொருந்தாத முகமுடையோரும் ஒரு பல்லம் ஆயுளைப் பெற்று இரண்டாயிரம் வில் உயரமுடையோராய் பழங்களையும், மண்ணையும் தின்று மலைக் குகைகளிலும், மரங்களிலும் சேர்ந்து வசிப்பர்.

1230. இமையம் மால்இமையமும் நிடதம் நீலியும்
சிமைய நல் உருக்கியும் சிகரியா மலை
தமை நடு உடைய ஏழ்நாடு இவற்றினுள்
சமையம் ஆறு உடையதாம் பரதம் ரேவதம்

இமவான், மகா இமவான், நிடதம், நீலி அழகிய சிகரங்களையுடைய ருக்மி, சிகரி ஆகிய ஆறுகுல மலைகளை நடுவிலே உடைத்தாகிய நாடுகள் பலவும், பரதம் முதல் ஏழாகும். இவற்றில் தெற்கேயுள்ள பரதமும் வடக்கேயுள்ள ஐராவதமும், ஆறு கால பேதங்களையுடையன.

1231. நன்மையும் நன்மையும் நன்மையாயதும்
நன்மையில் தீமையும் தீமைநன்மையும்
திண்ணிய தீமையும், தீமைதீமை என்று
எண்ணிய காலம் ஏற்று இழிவை ஆக்குமே.

நன்னற் காலமும், நற்காலமும், நற்றீக்காலமும், தீநற்காலமும், தீக்காலமும், தீத்தீக்காலமும் என எண்ணப்பட்ட காலங்கள் ஏற்ற இறக்கத்தை உண்டாக்கும்.

1232. ஒருமுழம் பதினையாண்டு உந்திஉந்திமேல்
வருசிலை ஆறாயிரம் பல்லம் மூன்று எய்திப்
பெருகிய பரிசினால் பின்சுருங்கி வந்து
ஒருமுழம் பதினையாண்டாம் ஓர்கற்பகம்

வளரும் காலத்தே (உத்சர்ப்பிணியில் மக்கள் உயரம் ஒருமுழம், ஆயுள் பதினைந்து ஆண்டுகள். இந்நிலை கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து இறுதியில் உயரம் ஆறாயிரம் வில்லளவும், ஆயுள் மூன்று பல்லமாகவும் அமையும், பிறகு இறங்குகாலமாகிய அவசர்ப்பிணியில் முறையாகக் குறையத் தொடங்கி இறுதியில் ஒழுமுழம் உயரம், பதினைந்து ஆண்டு ஆயுளை எய்துவர். இந்த இருநிலைகளும் சேர்ந்தது ஒரு கல்பமாகும்.

1233. ஆழிகள் கோடா கோடி ஐயிரண்டினில்
நாலு, மூன்று, இரண்டு ஒன்றா நாலுகாலங்கள் ஈற்று
ஆழியில் ஆண்டு நாற்பத்து ஈராயிரம்
மேலவை இரண்டிற்கும் விதிக்கப்பட்டதே.

இறங்குகாலத்தின் மொத்த அளவாகிய பத்துகோடா கோடி கடற்காலத்தில் முதற்காலம் நான்கு கோடா கோடியும், இரண்டாம் காலம் மூன்று கோடா கோடியும், மூன்றாம் காலம் இரண்டு கோடா கோடிகளும் எஞ்சிய ஒரு கோடா கோடி கடற்காலத்தில் நாற்பத்திரண்டாயிரம் வருடங்கள் குறைவாக நான்காம் காலம் அமையும். ஐந்து ஆறாம் காலங்கள் முறையே, இருபத்தோராயிரம் ஆண்டுகள் பெறும்.

1234. கருமமும் போகமும் இருமையும் உடன்
மரிய முன்னிலங்களுள் பரதம் ரேவதம்
இருமைய முதல் முக்காலம் போகத்தின்
மருவிய கருத்தை மற்றை மூன்றுமே.

முன்பு சொல்லப்பட்ட ஏழு நாடுகளில் பரதமும், ஐராவதமும் கரும பூமியாகவும், போக பூமியாகவும் இருவிதமாக மாற்றம் பெறும். முதல் மூன்று காலங்களில் போகபூமியாக இருக்கும், அடுத்த மூன்று காலங்களும் கரும பூமியாக இருக்கும்.

1235. நன்மையுள் தீமையுள் தீமைநன்மையுள்
பன்னரும் பிரமரும் பரம தீர்த்தரும்
மன்னரும் பலவரும் வாசுதேவரும்
தன்னுரு பகைவரும் சரமர் தாமும்ஆம்.

இறங்கு காலத்தின் மூன்றாம் பிரிவாகிய நற்றீக்காலத்தின் பிற்பகுதியிலும், நான்காம் காலமாகிய, தீநற்காலத்திலும் கூறுதற்கரிய மனுக்களும், உன்னதமான தீர்த்தங்கரர்களும், சக்ரவர்த்திகளும் பலதேவர்களும், வாசுதேவர்களும் அவர்தம் பகைவர்களான பிரதி வாசுதேவர்களும் மேலும், பல சரம தேக தாரிகளும் தோன்றுவர்.

1236. உத்தர தெக்கண குரவம் உத்தமம்
மத்திமம் அரிவருடம் இரம்மியம்
அத்தகம் ஐவதம் ஐரண்யம் இவை
நித்தமாய் போகங்கள் நின்ற பூமியே.

உத்தரகுரு, தட்சிணகுரு இவை உத்தமபோக பூமிகளாய், அரிவருடம், இரம்மியம் இவை மத்திம போக பூமிகளாய், ஹைமவதம், ஐரண்ணியம் இவை கடைநிலையாகிய ஜகன்னிய போகபூமிகளாக நிலை பெற்றிருப்பவை.

1237. மூன்றிரண்டு ஒருபலம் முறையுள் ஆயுகம்
ஆன்றவில் ஆயிரம் ஆறு நாலிரண்டு
ஊன்றிய ஒக்கம் மூன்றிரண்டு ஓர்நாள்விடா
தோன்றிய பசிகெட அமுதம் உண்பரே.

உத்தமபோக பூமியில் உள்ளோர் ஆயுள் மூன்று பல்லம், மத்திம போக பூமி மனிதர்களின் ஆயுள் இரண்டு பல்லம், ஜகன்னிய போக பூமியர் ஆயுள் ஒரு பல்லம் - அடுத்து முறையே அவர்கள் உயரம் ஆறாயிரம் வில்லும், நான்காயிரமும், இரண்டாயிரம் வில்லுமாகும் - அவ்வாறே அவர்கள் முறையே மூன்று நாள்களும், இரண்டு நாள்களும், ஒரு நாளும் இடைவிட்டு தங்கள் பசி நீங்க அமுதம் உண்பர்.

1238. உரைத்த முக்காலம் மூன்றாதியுள்ளுமாம்
நிரைத்த ஐஞ்ஞூறு வில் புவ்வ கோடியும்
அரத்தி ஏழு இரண்டு நூற்றிரு பத்தைம்பதும்
உரைத்திலா மூன்றில் ஆதிக்கும் ஒக்கநாள்

முன்பு உரைத்த பரதம், ஐராவதம் ஆகியவற்றில் தோன்றும் கால பேதத்தின் முதல் மூன்று காலங்களின் தன்மைகள், மூன்று வகையான போக பூமிகளுக்கும் உரியதாகும். (அதாவது மூன்று காலங்களின் முதலில் உள்ள மக்களின் உயரம், ஆயுள் இவை உத்தம, மத்திம, ஜகன்னிய போக பூமியில் உள்ளதற்குச் சமமாகும்.) இனி இதுவரை கூறாத இறுதி மூன்று காலங்களில் தீநற்காலத்தில் உயரம் ஐநூறு வில்லும், ஆயுள் பூர்வ கோடி ஆண்டுகளும் தீக்காலத்தில் உயரம் ஏழு முழமும், ஆயுள் நூற்றி இருபது ஆண்டுகளும், தீத்தீக்காலத்தில் உயரம் இரண்டு முழமும், ஆயுள் ஐம்பது ஆண்டுகளும் உயர்ந்தபட்ச அளவுகளாகும்.

1239. கருமத்த கச்சை நல்சுகச்சை காமிகம்
மருவிய மாகச்சை கச்சகா வதி
அருமையில் ஆவதை இலங்கலாவதை
பொருவிலா பொக்கலை பொக்கலாவதி

கச்சா, சுகச்சா, அழகார்ந்த மகாகச்சா, கச்சகாவதி, ஆவர்த்தா, லாங்கலாவர்த்தா ஒப்பற்ற புஷ்கலா, புஷ்கலாவதி ஆகிய நாடுகள் நிலையான கர்ம பூமியைச் சேர்ந்தவை ஆகும்.

1240. மன்னு தென்கரை வச்சை நற்சுவச்சை மா
துன்னும் மாவச்சை வச்சகாவதி
சொன்ன நல் இரமையே சுரமை தோமிலா
மன்னர் மன் ரமணிய மங்கலாவதி.

சீதாநதியின் தென்கரையில் வத்சாவும், சுவத்சாவும், பெருமைக்குரிய மாவச்சையும், வச்சகாவதியும், நன்மைமிகு ரம்மியாவும், சுரம்மியாவும், குறைவற்ற மன்னர்கள் சேர்ந்த ரமணீயாவும், மங்கலாவதியும் ஆகிய நாடுகள் அமைந்துள்ளன.

1241. பரவரும் பதுமை நல்பதுமை மாபதம்
மருவும் அப்பதுமையே பதுமகாவதி
திரிவில்நல்சங்கையே நளினை சீதுதைக்
கரைய தென் குமுதையே சரிதை காண்வரில்

நோக்குமிடத்து சீதோதா நதியின் தென் கரையில் உள்ள நாடுகள் கூறுதற்கரிய பத்மா, சுபத்மா, மாபத்மா, பத்மகாவதி, கேடற்ற நன்மைமிகு சங்கா, நளினா, குமுதா, சரிதா என்பவையாகும்.

1242. வடதடத்தின் வப்பை நல்வப்பையும்
இடரிலா மாவப்பை வப்பகாவதி
சுடரிடைக் கந்தையே சுகந்தை தோமிலாக்
கடலுடைக் கந்திலை கந்தமாலினி.

சீதோதா நதியின் வடகரையில் வப்ரா, சுவப்ரா துன்பமற்ற மாவப்ரா, வப்ரகாவதி, ஒளிமிக்க கந்தா, சுகந்தா குற்றமிலா கடலைப் பெற்ற கந்திலா, கந்தமாலினி ஆகிய நாடுகள் உள்ளன.

1243. நாலுமுன்னதியிலும் நாலுநால் வரையினும்
நாலு நாலிரட்டியாய் விதேகநாடு நின்றவே.

பன்னிரு விபங்க நதிகளாலும், பதினாறு வட்சார மலைகளாலும், முப்பத்திரண்டு விதேக நாடுகள் அமைந்திருந்தன.

1244. சீதையின் வடகரை ஆதியாய் வலம்முறை
ஓதிய அந்நாடுகள் நீதியோடு நின்றவே.

கூறப்பட்ட கச்சா முதலிய முப்பதிரண்டு நாடுகளும், சீதா நதியின் வடகரையிலிருந்து வலமாக வரிசையாக அமைந்திருந்தன.

1245. சொல்லிய அந்நாடுகள் வெள்ளியம் மலையினும்
சுல்லை ஆறு இரண்டினும் நல்ல கண்டம் ஆறுமாம்

அதே கச்சா முதலிய நாடுகள், ஒவ்வொரு வெள்ளியம் மலையாலும், இரண்டு சுல்லக நதிகளாலும் நன்மைமிகு கண்டங்கள் ஆறாக ஒவ்வொரு நாடும் பிரிந்திருந்தன.

1246. செவ்வில் ஐந்து நூறுயர்ந்து புவ்வகோடி ஆயுகம்
இவ்வகைய நாட்டுள் என்றும் வெவ்வினைகள் தீர்ப்பரே.

இவ்வாறு இந்த முப்பத்திரண்டு நாடுகளிலும், மக்கள் ஐநூறு வில் உயரமும், பூர்வகோடி ஆயுளும் பெற்று கால வேறுபாடின்றி எப்போதும் வினைகளைக் கெடுத்து வீடுபேற்றையும் எய்துவர்.

1247. சுல்லை மேரு நான்குடைய நல்லநாடு நான்கினும்
இல்லை வேறுபாடு இவண் சொன்ன சொன்ன யாவையும்

சுல்லக மேருபர்வதங்கள் நான்கினையுடைய தாதகி, புட்கரார்த்தம் ஆகியவற்றிலுள்ள நான்கு விதேக க்ஷேத்திரங்களிலும் இங்கே சொல்லப்பட்ட யாவும் வேறுபாடின்றி இதேபோல் இருக்கின்றன.

1248. ஒன்றின்ஒன்று இரட்டியாய்ச் சென்ற தீபம் சாகரம்
மன்றன மலைப்புறத்து நின்ற வாறு இயம்புவாம்.

மானுடோத்தர பர்வதத்திற்கு அப்பால் வெளிப்புரத்தே ஒன்றைக்காட்டிலும் மற்றையது இரண்டு பங்கு பரப்பினை உடையதாக ஒன்றை ஒன்று சூழ்ந்து அடுத்தடுத்து அமைந்து நின்ற கணக்கிலடங்காத தீவுகளைப் பற்றியும், கணக்கற்ற கடல்களைக் குறித்தும் இனிச் சொல்லுவோம்.

1249. இருபத்தைந்து கோடா கோடியாம் உத்தார பல்லங்கட்கு
உரியரோமம் எண்ணவாம் தெரியும் தீபம் சாகரம்

அங்கே விளங்கும் கணக்கற்ற தீவுகள் மற்றும் கடல்கள் இவற்றின் எண்ணிக்கை இருபத்தைந்து கோடா கோடி உத்தார பல்லங்கட்கு உரிய மயிர்களின் எண்ணிக்கை எவ்வளவோ அந்த அளவினதாகும்.

1250. உவரி தண்ணீர் தேன் சுரைந்து இவருபால் நெய் இக்குவின்
சுவைய நீரின் வாரிகள் அவையும் ஏழதாகுமே.

உப்புநீர், தூயநீர், தேன் சுவை போன்ற நீர், கள் போன்ற நீர்; கருப்பஞ்சாறு போன்ற நீர் ஆகிய ஏழுவிதமான சுவைகளையுடைய கடல்களும் மற்றும் எண்ணற்ற கடல்கள் கருப்பஞ்சாறு போன்ற நீரைப் பெற்றும் நிறைந்திருந்தன.

1251. சாகரம் சலசரங்கட்கு ஆகரங்கள் அல்லவாம்
நாகமாதி பாதகால் போகபூமி தீவெலாம்.

கணக்கிலடங்கா இந்தச் சமுத்திரங்களில், நீர் வாழ் பிராணிகள் வசிப்பதில்லை. எண்ணற்ற தீவுகளில் யானை முதலிய நாற்கால் பிராணிகள் வசிக்கும் விலங்கு போக பூமிகளாகும்.

1252. முடிந்த தீபம் சாகரத்து அடைந்தவை விலங்கும் இவ்
இடங்கள் எண்ணிறந்தன முடிந்திடா உரைக்கவே.

கடைசியில் இருக்கும் சுயம்பு ரமணத் தீவிலும், அதே பெயருடைய சமுத்திரத்திலும் இந்த இரண்டரை தீபத்திலுள்ள இரண்டு, மூன்று, நான்கு இந்திரிய மாறுபட்ட விலங்குகளும், ஐந்து பொறிகளையுடைய விலங்குகளும் கணக்கற்று வசிக்கின்றன. இவைகளின் அளவை அளந்தறிய வொண்ணாது.

1253. ஏழுசாகரத்தின் எட்டதாய்ச்
சூழ்கிடந்த நந்தீச்சுரதீவதில்
ஊழி ஊழி வானோர் வந்து இறைவனைத்
தாழும் மற்றதன் பெற்றியைச் சாற்று வாம்.

ஜம்பூத்தீவிலிருந்து ஏழு தீபங்கள், ஏழு சமுத்திரங்கள் இவற்றிற்கப்பால் எட்டாவதாக உள்ள தீபமாகவும், ஏழுகடல்களையும் சூழ்ந்துள்ளதுமான நந்தீஸ்வர தீபத்தில் அனாதிகாலமாய் நான்கு வகை தேவர்களும் அங்கு வந்து அங்கு இயல்பாய் அமைந்திருக்கும் ஆலயங்களில் உள்ள ஜினேந்திரப் பிரதிமைகளை வணங்கி பூஜிக்கும் சிறப்பினை இனி கூறுகின்றேன்.

1254. அறுபத்து மூன்றினோடு ஆய நூற்றினால்
எறியப்பட்டிருந்தன கோடி யோசனை
செறிவுற்ற இலக்கம் எண்பத்து நான்கொடு
மறுவற்ற தீவத்துள் அகலமாகுமே.

குற்றமற்ற அந்த நந்தீஸ்வர தீபத்தின் உள் அகலம் நூற்று அறுபத்து மூன்று கோடியே எண்பத்து நான்கு லட்சம் யோசனைகளாகும்.

1255. நிலங்கள் பொன் மணிகளால் நிறைந்திருந்தன
விலங்கலும் கயங்களும் வீதராகரைப்
புலங்களால் வெல்வன போகபூமியோடு
இலங்கு வானவர் இடம் தன்னை ஏசுமே.

நந்தீஸ்வர தீபத்தின் பூமிகள் எங்கும் பொன்னும் மணியும் நிறைந்திருந்தன. அங்குள்ள மலைகளும், தடாகங்களும் எப்படிப்பட்ட ஆசையற்றவர்களையும் தம்பால் ஈர்க்கும் அழகுடையன. அதனால் போக பூமியையும், ஒளிமிக்க தேவர் உலகங்களையும் தனது எழிலாலும் வளத்தாலும் எள்ளி ஏசச் செய்யும்.

1256. கண்ணையும் மனத்தையும் கவர்ந்து கொள்வன
வண்ண மேகலையினார் வடிவுபோலவே
விண்ணவர்க்கு இறைவரும் விடாத வேட்கைய
எண்ணிலா இடங்களால் இயன்றிருந்ததே.

காண்பார் கண்களையும் உள்ளத்தையும் தன்பால் கவர்ந்து கொள்ளும் வண்ணமிகு மேகலை யணிந்த மங்கையர் வடிவத்தைப் போன்று, தேவர்களின் தலைவர்களும் நீங்கா ஆசைகொள்ளுமாறு, எழில்மிகு இடங்கள் எண்ணற்றதாய் விளங்கின.

1257. இலதை வல்லிகள் மணியாலியன்று தன்
சலதிசூழ் போயது தரணி மூன்றுடை
உலகினுக்கு இறைவன் ஆலயங்களால் இம்மூ
உலகினுக்கு இறைமை கொண்டு ஓங்குகின்றதே.

மேலும் இந்த நந்தீஸ்வர தீபமானது பல்வேறு கொடிகளும் இரத்தினங்களால் சமைந்து, நந்தீஸ்வரக் கடல், தன்னைச் சூழ்ந்திருக்க மூவேறுவகையான உலகத்துக்கு இறைவனாகிய அருகபெருமானின் ஆலயங்களின் சிறப்பால், இந்த மூன்று உலகத்துக்கும் மேலான தலைமை கொண்டு ஓங்கி உயர்ந்து நின்றது.

1258. பண்சிறைக் கிடந்த சொல் பாவைமாருடன்
விண்சிறைக் களமென விடடு வீரனை
வண்சிறப்போடு வந்து அடைந்த வானவர்
கண் சிறைப்படுவது காமர் பூமியால்

இசை கலந்திருக்கும் மொழி பேசும் பாவை போன்ற, தேவ மாதர்களுடன் தேவலோகம் சிறை போன்றது என நீங்கி, வளம்மிக்க பூஜைப் பொருள்களுடன் இங்கே வந்து அருகபெருமான் பிரதிமையை அடைந்த நால்வகை தேவர்களின் கண்கள், அழகிய அந்த இடத்தால் ஈர்க்கப்படுவதாகும்.

1259. அஞ்சன மலைகள் நான்காகும் ஆங்கு அதன்
மஞ்சிலா மாதிசை நடுவண் நின்றன
அஞ்சனம் மூலமாய் அகன்று உயர்ந்தன
எஞ்சலில் ஆயிரம் புகை நான் கொடுஎண்பதே.

குற்றமற்ற அந்த நந்தீஸ்வர தீபத்தின் பெருமை மிக்க திக்குகள் நான்கின் மத்தியில் அஞ்சனம் என்னும் பெயருடைய நான்கு பர்வதங்கள் நின்றன. குறைவற்ற அவை ஒவ்வொன்றும் எண்பத்து நான்காயிரம் யோசனை அகலமும், அதே அளவு உயரமும் உடையனவாகும்.

1260. மற்றிந்த மலையின் மாதிக்கின் வாவிகள்
பெற்றியால் கிடந்தன பெரிய சாலவும்
முற்றும் நீர் சூழ்தலால் ததிமுகங்கள் என்று
உற்றபேர் மலைகள் அத்தடத்தின் உள்ளவே.

அடுத்து இந்த அஞ்சன மலைகளைச் சூழ்ந்து நான்கு திசைகளிலும் திசைக்கு ஒன்றாக நான்கு தடாகங்கள் ஒவ்வொரு மலைக்கும் அமைந்து கிடந்தன. அத்தடாகங்கள் ஒவ்வொன்றின் மத்தியிலும் ஒவ்வொரு மலைகள் நீரால் சூழப்பட்டு நின்ற அதனால் அவற்றின் பெயர் ததிமுகம் என்பதாயிற்று.

1261. ஆயிரம் புகைபத்தை அகன்று உயர்ந்தன
வாய்மையால் நீரின்மேல் வரைகள் வாவியின்
சூழுந்தான் கிடந்ததால் வனங்கள் தம்பெயர்
ஏழிலை செண்பகம் தேமா அசோகமே.

நீரினிடையே நின்ற அந்தத் ததிமுக பர்வதங்களானவை பதினாயிரம் யோசனைகள் அகன்றும் உயர்ந்தும் இருந்தன. அவற்றைச் சூழ்ந்து நான்கு புறங்களிலும் கிடந்த வனங்கள் நான்கு வனங்களாகும். அவ்வனங்களின் பெயர்கள், ஏழிலைப் பாலைவனம் சண்பகவனம், மாவனம், அசோகவனம் என்பன.

1262. வனத்திடை புறம்படி வாவி கோணத்தின்
மனத்தினுக்கு இரதிசெய் மலைகள் நின்றன
தனக்கு உயர் அகலம் ஆயிரங்கள் யோசனை
எனைப்பல இடங்களால் இரதிசெய்யுமே.

அந்த வனங்களின் வெளிப்புற பூமியில் இரண்டு மூலைகளிலும் காண்போர் மனம்கவரும் வண்ணம், ரதிகரம் என்னும் பெயருடைய மலைகள் நிலை பெற்றிருந்தன. அவற்றின் அகல உயரங்கள் ஆயிரம் யோசனைகளாகும். அந்த நந்தீஸ்வரதீபத்தின் பல்வேறு வகையான மற்ற இடங்களும், பார்ப்பவரை மயங்கச் செய்யும் அழகார்ந்தவைகளாகும்.

1263. மலை நல மணி பொனின் மயமதாகிய
பலவடி வுடையன பரமன் கோயில்கள்
நிலவிய மகுடமாய் இலங்கும் பாரிலும்
மலையிதும் ஆயிரம் புகைகள் ஆழ்ந்தவே.

அங்குள்ள அஞ்சந, ததிமுக, ரதிகர பர்வதங்களின்மீது நலம் மிக்க இரத்தினம், பொன் இவற்றால் அமைந்த பல்வேறு வடிவங்களுடைய ஜினேந்திரனுடைய ஆலயங்கள் ஒளிமிக்க கிரீடங்களைப்போல் விளங்கும், இம்மலைகள் பூமிக்கு அடியிலும் ஆயிரம் யோசனை அளவுக்கு ஆழ்ந்திருந்தன.

1264. வனங்களும் தடங்களும் மலையின் மாமணித்
தலங்கள் மேல் நிரைந்தன தமனியத்தி யன்று
இலங்கு தோரணமுடைவேதி சூழ்ந்து நல்
அலங்கல் ஆர்ந்து அருமணியால் இயன்றவே.

அங்குள்ள வனங்கள், தடாகங்கள், மலைகள் ஆகிய அனைத்தும் பெருமைமிக்க இரத்தின பூமிகளின் மேல் நின்று விளங்கின. மேலும் அங்கிருந்த ஆலயங்கள் பொன் தோரணங்களைப் பெற்று, வழிகளையுடைய மதில்களால் சூழப்பட்டு நல்ல மாலைகள் நிறைந்து, அரிய மணிகளால் சமைந்திருந்தன.

1265. மஞ்சன அஞ்சன மலையும் நான்குள
எஞ்சிடா ததிமுகத்து ஈரெட்டாகுமே
வஞ்சிபோல் இரதிகரத்து எண்ணான்குள
மஞ்சிலாதன நல் வாமன் கோயிலே

கருத்த மேகம் போன்ற அஞ்சன பர்வதங்கள் நான்காகும். குறைவற்ற ததிமுக பர்வதங்கள் பதினாறாகும். கொடிகள் போல் சூழ்ந்து நின்ற இரதிகர பர்வதங்கள் முப்பத்திரண்டாகும். இந்த மலைகள் அனைத்தின்மீதும் குற்றமற்ற நலமார்ந்த ஜினபகவான் ஆலயங்கள் அமைந்திருந்தன.

1266. ஆயதம் ஐம்பதிற்றிரட்டி யோசனை
ஆயதம் கால்குறைந்தல்லது ஒக்கமாம்
ஆயதம் தன்னரை அகலமாயின
வாயில் மூன்றுடைய முன் மண்டபங்களாம்

அந்த ஆலயங்களின் மொத்த நீளமானது, நூறு யோசனைகளாகும். உயரம் எழுபத்தைந்து யோசனைகளாகும். அகலம் ஐம்பது யோசனைகளாகும், இந்த ஆலயங்களின் முகப்பு மண்டபங்கள் மூன்று வாயில்களையுடையன. இவையே கந்தகுடி மண்டபங்களை உடைய பிரதம மண்டபங்கள் (அ) பீடிகா மண்டபங்களாகும்.

1267. மாலையும் சாலங்கள் வாசமார்ந்தவும்
சாலவும் தாழ்ந்துள வாசலின் புடைப்
பாலிகை முதல் பரிசசந்தங்கள் நூற்றெட்டு
மாலை வேய்ந்தன பல மலிந்திருந்தவே.

அந்த கந்தகுடி மண்டப வாயில்களின் இருபக்கங்களிலும் மணம்மிக்க மாலைகள் தாழ்ந்து சன்னல்கள் போல் விளங்கின. மேலும் அவற்றைச் சூழ்ந்து பாலிகை முதலிய நூற்றிஎட்டு மங்கலக் கருவிகள் ஒழுங்காக அணிபெற அமைக்கப்பட்டிருந்தன. இன்னும் பலவித பொருள்களும் மலிந்திருந்தன.

1268. ஆலயத்து அளவதாய் அமைந்து கோயில்முன்
பாலிருந்தன பல பல்லவாதியாம்
ஆடலும் பாடலும் அமர்ந்து காண்பவர்
ஊடுசென்றன வல உழைக்கலத்தவே.

அந்த இயற்கை ஆலயங்களின் முன்பக்கத்திலே, கந்துகுடி உள்ள ஆலயத்தின் அளவில் பல்வேறு அரங்கங்களைப் பெற்றுள்ள வலிமைமிக்க உழைக்கல மண்டபங்கள் இருந்தன. அரங்கங்களில் பலர் கண்டுகளிக்குமாறு ஆடலும் பாடலும் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

1269. இஞ்சிகள் அம்பொனால் இயன்ற கோபுரம்
முன்சொன அளவினால் முடிந்த மாதிசை
அஞ்சொலார் முகமென இருந்த அத்தொடு
வஞ்சி மேகலை என வந்து சூழ்ந்ததே.

அந்த ஆலயங்களின் சுற்று மதில்களானவை, பசும் பொன்னால் அமையப்பெற்று, முன்பு சொல்லப்பட்ட நீள அகலங்கள் உடையதாய், மங்கையர் மேகலாபரணம் போல் சூழ்ந்திருந்தன. மையத்தில் விளங்கிய கோபுரங்கள் அழகிய மகளிர்தம் முகங்களைப் போல் பொலிந்தன.

1270. உகப்புடை பெயர்ச்சி ஈற்றினும் முதல் மனிதர் ஓக்கம்
யுகத்தினுக்கு இறைவர் தோற்றம் உள் இடமலாத தேசம்
சகத்து வடிவு தீப சாகரம் தனகிடக்கை
நகத்தவர் நாகர் மக்கள் விலங்குறை ஞாலம் காட்டும்.

உழைக்கல மண்டபங்களின் உட்புறமெங்கும் கொஞ்சமும் வெற்றிடம் இல்லாதவாறு, வளர்ந்து (ஏறுகாலம்) குறையும் (இறங்கு) காலங்களின் முதலிலும் முடிவிலும், வாழும் மனிதர்களின் உரயங்களையும், அக்காலத்து தீர்த்தங்கரர்கள் தோற்றமும், உலகின் வடிவமும், எண்ணற்ற கடல்களும், அவற்றின் இயற்கைத் தன்மைகளும், விஞ்சையர், தேவர், மக்கள் இவர்தம் இயல்புகளும், விலங்குகளின் தன்மைகளும் அனைவரது வாழிடங்களும் பூமிகளின் மற்ற விவரங்களும் விளங்குமாறு சித்திரங்களாக அமைந்திருந்தன.

1271. துறக்கத்தும் வீட்டினுள் தோன்றினார் எய்தும்
சிறப்பது விகற்பமும் தீய நல் வினைளில்
பிறப்பதும் கதிகளில் பெயரும் பெற்றியும்
குறித்தன புராணத்தால் கூறுகின்றவே.

அங்கே தேவ உலகிலும், வீட்டுலகிலும் சென்றோர் எய்தும் பெருமை மிக்க வேறுபட்ட தன்மைகளையும், தத்தம் பாப புண்ணியங்களினால் நாற்கதிகளில் பிறக்கும் விதத்தினையும் இத்தகு பிறப்புக்களிலிருந்து நீங்கி வீடுபேறடையும் பெருமையினையும், ஆகமங்களில் விளக்கப்பட்டிருப்பதுபோல் சித்தரிக்கப்பட்டிருந்தன.

1272. கண்டவர் காட்சியைத் தூப்பம் செய்துடன்
பண்டு செய்தீவினை பரப்பைத் தீர்ப்பன
வண்டுறை பிண்டிநல் வாமன் சேவடி
கண்டவர் செயும் சிறப்பு ஐந்தும் காட்டுமே.

அந்த உழைக்கல மண்டபத்தில் அமைந்துள்ள இக்காட்சிகள், அவற்றைக் கண்டவர்களின் நற்காட்சியைத் துலங்கச் செய்து அப்பொழுதே அவர்கள் முற்பிறவியில் செய்த தீவினைகளின் தொகுதியைத் தீர்த்து வைக்கும் –

1273. உழைக்கல மண்டபம் முன்பு தூபையாம்
தழைத்து எழு சேதியத் தருமுன்னின்றது
அழைப்பதில் ஆடும் வைசயந்தை ஆம்கொடி
வழக்கின் மானத்தம்பம் எய்தவந்ததே.

உழைக்கல மண்டபம் கந்தகுடி மண்டபங்கள் உள்ள மண்டபங்களின் முன்புறம் உள்ளதாகும், அதற்கு முன்பக்கம் தூபையும், அதற்கு முன்புறம் தளிர்கள் நிறைந்த சேதிய தருக்களும், எதிரில் வருகின்றவர்களை வரவேற்பது போல் அசையும் வைஜயந்தை என்னும் கொடியும், வரிசையாக அமைந்து மானத்தம்பம் வரை இந்த அமைப்பு முறை தொடர்ந்து இருந்தது.

1274. கோபுரத்தின்புறம் குணக்கதாம் திசை
வாபிமா நந்தையாம் மாசிலாத நீர்
பூவினால் நிறைந்து பொன் மணியின் ஆயதோர்
சோபனம் சூழ்ந்த வேதிகைத்து ஆகுமே.

மதில் கோபுரத்திற்கு வெளியே, நேர் கிழக்கு திசையில் நந்தை என்னும் தடாகமானது, மாசற்ற நீர், மலர்களால் நிறைந்து பொன் மணிகளால் ஆய படிகளைப் பெற்று சுற்று மதில் மண்டபங்களால் சூழ்ந்து விளங்கியது.

1275. கந்தகுடி மண்டபங்கள் நூற்றெட்டு அவைகாணில்
பந்தி ஒரு மூன்று நிரையாகி வைடூரியத்
தம்பமிசை இருந்த தலம் மூன்றுடையதாமும்
அந்தரங்கள் தம்மிடை அனேகம் சிலையாமே.

இந்த இயல்பாய் அமைந்த ஆலயங்களுக்குள் இருந்த கந்தகுடி மண்டபங்களின் எண்ணிக்கை நூற்றி எட்டாகும். அவை ஒரு வரிசைக்கு முப்பத்தாறு கொண்ட மூன்று வரிசைகளில், வைடூரியத்தாலாகிய நான்கு கம்பங்களின்மேல் மூன்று நிலைகளையும், தூபியும், சிகரமும் உடையதாய் இருந்தன. அந்த கந்த குடிகள் ஒவ்வொன்றும் பலவிற்கள் இடைவெளிகளின் அமைந்திருந்தன.

1276. செம்மணி மண்டபத்தினிடைச் சீயவணை மீது
அம்மலையின் மிசையிருந்த அருக்கனவன் போல
வெம்மை வினையும் கெட இருந்த திருஉருவம்
தம்அளவு ஐஞ்னூறு தனுவாகி உயர்ந்தனவே.

செம்மைமிக்க மணிகளால் சமைந்த அந்தக்கந்த குடி மண்டபங்களின் மத்தியில், அரியணையின்மேல் கொடிய வினைகளெல்லாம் ஒழியுமாறு – மலைமேல் விளங்கும் கதிரவன்போல் விளங்கிய ஜின பிம்பங்களின் உயரம் ஐந்நூறு வில்லளவாகும். அவை கிழக்குமுகமாக பல்லியங்காசனமாக இருந்தன.

1277. இருமருங்கும் சாமரைகள் இயக்கரொடு இயக்க
மருவிய மண்டலமும் மலர்ப் பிண்டியும் முக்குடையும்
விரைமலர்கள் சொரிந்து அமரர் ஏத்தவினை நீங்க
பரவுகணம் பன்னிரண்டும் சூழ்ந்திருந்த ஆங்கே.

அந்த ஜினபகவான் பிரதிமைகளின் இருபுறங்களிலும், வெண் கவரிகளை இயக்கர் படிமைகள் வீசுவதுபோல் அமைந்திருக்க, ஒளிவட்டம், மலர் நிறைந்த அசோகு, முக்குடை முதலியன சேர்ந்திருந்தன. அமரர்கள் மண மலர்களைப் பொழிந்து ஏத்தி வணங்கவும், பாவங்கள் நீங்கத் துதிக்கும் பன்னிரு கணங்களும் சூழ்ந்திருந்தன.

1278. ஞாலம் ஓர் மூன்றுடையானது மைமையின்
மேல் எழும் காதல் தேவர் விரும்பியும்
காலமனாதி பரம்பரையின் கண்
ஆலயம் அக்கணம் மேவுதலாலும்.

அனாதி காலமாக தேவ பரம்பரையானது மூவுலக நாதனது படிமங்களைப் பூசிப்பதில், மிகவும் பக்தியும், விருப்பமும் கொண்டு அந்த நந்தீஸ்வர தீபத்திலுள்ள ஆலயங்கட்கு, பருவந்தோறும் அடைகின்ற நோக்கில்,

1279. சோதமனாதி சுரேந்திரர் மைமைகட்கு
ஓதிய பெற்றியின் முற்றும் உழைக்கலம்
மாதர்கள் ஏந்திய வாச்சிய கோடணை
ஓதஎழுந்து உடன் யாவரும் வந்தார்.

ஜினபூஜைக்காக கூறப்பட்ட அனைத்துப் பொருள்களையும், பெருமையோடு ஏந்திய தேவமாதர்கள் சௌதர்மேந்திரன் முதலிய தேவேந்திரர்கள் அனைவரும் தேவவாத்தியங்கள் மிகுதியாக இசைக்க, ஒருங்குசேர்ந்து வந்தார்கள்.

1280. சங்குமுரன்ற தாரைகள் பேர்சொல
எங்கும் முழங்கின பேரியம் அவ்வொலி
பொங்கியவாதம் அடித்துழி மால்கடல்
அங்கெழு ஓசையை வென்றன அன்றே

சங்குகள் முழங்கின, தாரைகள் ஒலித்தன, எல்லா இடங்களிலும் பேரிகள் சப்தித்தன, இவற்றின் முழக்கம் பெருங்காற்று வீசும்போது கடலில் எழும் ஓசையையும் வென்றது.

1281. துகிற்கொடி வெண்குடை தொக்கு நிரைத்தன
மகத்தவர் மங்கலம் பாடவர் ஓசை
புக திசைவிம்ம ஒலித்த மனத்தின்
மிகைத்தெழும் ஆனந்தராகி இருந்தார்

கொடிகளும் வெண் குடைகளும் நெருங்கி இருக்க இறைவனைப் பாடும் மங்கலபாடகர் ஓசை, திக்கெங்கும் சென்று பரவுமாறு ஒலித்தது. அனைவரும் மகிழ்ச்சி பொங்க இருந்தனர்.

1282. பரந்த அரம்பையர் பாடலோடு ஆட
நிரந்த யாழ் குழல் கின்னர கீதம்
துரங்கமும் மாவொடு மானமும் ஏறி
விரும்பிய வண்ணம் அணிந்து வியந்தார்.

தேவமாதர்தம் ஆடலும், பாடலும் எங்கும் நிகழ்ந்தன. யாழ்களும், குழல்களும், நெருங்கி இசைத்தன. அமரர்கள் குதிரை, யானை, விமானம் முதலிய ஊர்திகளில் இவர்ந்து வந்து தங்கள் விருப்பப்படி அணிகலன் பூண்டு வியந்து மகிழ்ந்தனர்.

1283. விக்கிரியைப் பல எட்டும் அடுத்தவர்
அக்கிரியைக்கண் அழித்தவர் தம்மொடு
பொக்கம் உரைத்த நடித்துடனே சிலர்
நக்கனர் தக்கவர் நாணம் ஒழிந்தே.

பல்வேறு வகையான விகுர்வணை உருவங்கள், எட்டு வகையான ரித்திகள் பெற்றவர்களின் விகுர்வணைச் செயல்களை நீக்கி நகைத்துப்பேசி, ஆடி மகிழும் ஒருசிலருடன் மிக்க தகுதி வாய்ந்தவர்களும் நாணம் நீங்கி நகைத்தனர்.

1284. வந்திகள் வந்தனை செய்து இறைவன் புகழ்
அந்தமிலாதன கொண்டு அடிதாழ்ந்தனர்
கந்திற மோதிய காளம் பதாகையின்

வந்தனர் தாம் பலராகிய வானோர்

மங்கல பாடகர் மிக்க வணக்கத்துடன் இறைவனுடைய புகழ் ஆர்ந்த துதிபாடல்களைப் பாடி அடிபணிந்தனர். காற்றினால் கம்பத்தில் மோதும் கொடிகளையும் காள வாத்தியங்களையும் உடைய அமரர் பலர் வந்தனர்.

1285. எழுச்சி முழாவொலி எங்கும் இயம்பப்
பழிச்சி எழுந்தனர் பண்ணவர் கோனை
வழக்கினில் வந்துலகம் நடு மைமைத்
தொழிற்கு இறை சோகமன் ஏவலினாலே

இவ்விதமாக அமரர்கள் திரண்டெழுந்து எவ்விடத்தும் முழவொலி பரவிட, தேவர்களின் தலைவனாகிய இறைவனைத் தொழுது புறப்பட்டனர். தொன்றுதொட்ட முறைப்படி உலகின் மையத்தேயுள்ள நந்தீஸ்வர தீபத்தை வந்தடைந்தனர் சௌதர்மேந்திரன் உத்திரவுக்கிணங்க,

1286. கத்திகை பங்குனி ஆடிய காசறு
சுக்கிலபக்க நல்லட்டமி தன்னில்
ஒத்தஓர் பாதியில் வந்து நந்தீச்சரம்
புக்கவர் மைமை தொடங்கினர் அன்றே

கார்த்திகை, பங்குனி, ஆடி மாதங்களில் குற்றமற்ற வளர்பிறையில் அட்டமி முதல் எட்டு நாள்களுக்கு அந்த நந்தீஸ்வர தீபத்தில் தங்கியிருந்து பூஜையைத் தொடங்கினர்.

1287. அக்கணம்மிக்க அரம்பையர் ஆடுநர்
பக்கம் எழுந்த யாழ்குழல் பண்ணொலி
தொக்கு முரன்ற வலம்புரி துந்துபி
நக்கன வான முழக்கினை மாதோ.

அப்பூஜை செய்யும் காலத்தே அரம்பையர் ஆடினர், வீணை, குழல்களின் இசை எங்கும் எழுந்தது இவற்றுடன் வலம்புரிச்சங்கு, துந்துபி முழக்கமும் சேர்ந்து வானத்தின் முழக்கினை எள்ளி நகைப்பது போல் ஒலித்தன.

1288. சல்லரி தண்ணுமை பேரிமுழா வொலி
எல்லை தமக்கிலை என்ன எழுந்தன
சொல்லினர் தம் எதிர் சொல்லினர் தம்மொலி
ஒல்லெனும் மாக்கடல் ஓசையின் ஒன்றே

சல்லரி, தண்ணுமை, பேரிகை, முழவு ஆகியவற்றின் பேரொலி எல்லை கடந்து பரவியது. ஒருவருக்கொருவர் பதிலுரைத்துப் பேசும் பேச்சொலியானது பெருங்கடலோசைக்குச் சமமாக இருந்தது.

1289. தும்புரு நாரதர் தொக்கு உடன் மிக்கவர்
எங்கும் யாழிசையோடு ஒலிதொட்டனர்
தங்கிய கின்னரர் தம் மிதுனங்களை
தங்கிய கீதமோடு ஆயினர் தாமே.

தும்புரு நாரதர் என்னும் தேவரிஷிகள் வீணையை மீட்டுவதில் வல்லவர்களாய் எல்லா இடங்களிலும், குழுக்களாகக்கூடி இசைத்தனர், மேலும் கின்னர தேவ தம்பதியர் இனிய இசைசேர்ந்த பாடலைப் பாடினார்கள்.

1290. சக்கரன்முதல் தேவர்கள் தாம்செய்த
மிக்க செல்வத்தை யாவர் விளம்புவார்
அக்கணம் முச்சகத்து உள்ளவர் ஆலையம்
தொக்கவே தொடங்கிச் சிறப்போடுமே.

சௌதர்மேந்திரன் முதலிய தேவர்கள் அமைத்த செல்வ மிகுதியைக் கூற யாரால் இயலும்? அப்போது மூவுலகத்திலுமுள்ள இயல்பால ஆலயங்களில் ஒரே சமயத்தில் இறைவன் பூஜையானது தொடங்கி நடைபெற்றது.

1291. சக்கரன் சமரன் ஈசன் வைரன்ஆம் தேவராசர்
தொக்க வானவரை நான்கு பாகமாய்த் தொகுத்துக் கொண்டு
மிக்க அத்திக்கை மேவி விரகுளி சிறப்பு அயர்ந்த
பக்கத்து எண்ணாலும் செய்வர் பதினை நாழிகை ஒர்பாலே.

சௌதர்மேந்திரன், சமரன் என்னும் பவணேந்திரனாகிய அசுரேந்திரன், ஈசான கல்பத்து இந்திரன், வைரோசனன் ஆகிய நான்கு தேவர் தலைவர்களும் அங்கு குழுமியுள்ள அமரர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு நந்தீஸ்வர தீபத்தின் நான்கு திக்குளிலும் உள்ள ஆலயங்களைச் சேர்ந்து, முறைப்படி சிறப்புப் பூஜை செய்வதை வளர்பிறை அட்டமி முதல் எட்டு நாள்களும் குழுவிற்குப் பதினைந்து நாழிகையாக முறையிட்டு இடைவிடாது செய்வார்கள்.

1292. அக்கணத்தது பஞ்சமந்திரத்து ஆலயத்துள்
புக்கு சாரணரின் மிக்கார் இறைவனைப் பொற்றி சைப்பர்
திக்குஎட்டில் இறைவன்பாதம் செறிந்து உலகாந்திதேவர்
தக்க அச்சிறப்பை எல்லாம் தாம் சிந்தித்து இருப்பர் அன்றே.

பூஜா காலமாகிய அஷ்டமி முதல் பௌர்ணமி வரையில், ஐந்து நந்தீஸ்வர மாமேரு மலைகளில் உள்ள இயல்பான ஆலயங்களுக்கு வந்து மிகச்சிறந்த சாரண பரமேட்டியராகிய முனிபுங்கவர்கள் துதிப்பார்கள், மேலும் பிரம்ம கல்பத்தின் எண்திசைகளிலும் உள்ள உலகாந்திக தேவர்கள் அங்கிருந்தவாறே, நந்தீஸ்வர பூஜா சிறப்புக்களை எல்லாம் மனதால் சிந்தித்து தியானித்துக்கொண்டிருப்பார்கள்.

1293. நானவிதி முதல் விதிகள் அறிந்து மஞ்சனாங்கத்
தானமவை எய்தி மஞ்சனாங்கமவை வாங்கி
வானவர்கள் மணிக்குடத்து நந்தை எனும் வாவி
பானந்தனை முகந்து முகம் பதுமமலர் சூட்டி

அமரர்கள் பகவான் படிமைக்குச் செய்யும் அபிஷேக விதிமுறைகளை நன்கறிந்து, திருமஞ்சனங்கள் இருக்கும் இடங்களை அடைந்து, திருமஞ்சனப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு ரத்தினக குடங்களிலே நந்தை என்னும் தடாக நீரினை முகந்து குடங்களின் வாயினை கமல மலர்களால் அணிந்து மூடி,

1294. அஞ்சலியினோடு இறைவன் ஆலயத்தை வலமாய்
வந்தவர்கள் நின்றிடத்தில் மணிக்கதவம் திறப்ப
அந்தமில் நல்லறிவு இறைவன் திருவுருவம் காணா
வந்து எழுந்த ஆனந்தத்தின் மயங்கி மிகத்துதிப்பார்.

அவர்கள், மிக்க வணக்கத்துடன் இறைவன் ஆலயத்தை வலமாக வந்து நின்றபோது, ஆலயத்தின் மணிக்கதவுகள் திறக்கவும், முடிவற்ற வாலறிவினையுடைய இறைவனின் திருஉருவத்தைக் கண்டு உள்ளத்தே எழுந்த ஆனந்த பக்தியினால் மிகவும், ஈடுபாட்டுடன் துதித்தார்கள்.

1295. அனந்த அறிவால் அனந்த வீரியனும் ஆனாய்
அனந்த தெரிசியன் அனந்த இன்பமுடையோயை
மனம் செயலின் வணங்கியவர் பணிந்து உலகம் ஏத்த
நினைந்தபடி எய்தி வினை நீத்து உயர்வர் அன்றே.

இறைவனே, கடையிலா ஞானத்தால், கடையிலா வீரியத்தை எய்தினாய், கடையிலா காட்சியால், கடையிலா இன்பமெய்தினாய், உன்னை மனம், மொழி, செயல்கள் ஒன்றி வணங்கின்றவர்கள் தாங்கள் எண்ணியதை எய்தி இறுதியில் வினைகளை வென்று பவ்யர்கள் வணங்குமாறு மேல்நிலை எய்துவர்.

1296. என்று நின்று துதித்து இறைவன் ஆலயத்தின் உள்ளால்
அன்றுசென்று புக்கு அமரர் அரசரவர் தாங்கள்
வென்றவர் தம் இறைவன் திருவுருவதனுக்கு ஏற்ப
நின்றவர்கள் செய்த சிறப்பு எவர்க்கும் நினைப்பரிதே.

இவ்வாறு புகழ்ந்து துதிசெய்து தேவர்களும் தேவேந்திரர்களும் இறைவனது ஆலயத்தின் உள்ளே அடைந்து வினை அனைத்தையும் வென்ற ஜினபகவான் திருவுருவத்திற்குப் பக்கங்களில் முறைப்படி நின்று செய்த சிறப்பானது மற்ற எவராலும் எண்ணவும் இயலாததாகும்.

1297. தோள்கள் ஆயிரத்து அழுத்தினர் மணிக்குடம் சோதமன் முதலானோர்
வீழும் மேருவின் அருவியின் வீழ்த்தினர் வென்றவர் தம்மேனி
ஊழிஊழி தோறாய தீவினையவை தீர்ந்த மூவுலகத்தோர்
தாழும் அப்பெயர்த் தாண்டகம் ஆயிரம் முகத்துடன் படித்தாரே.

சௌதர்மேந்திரன் முதலிய தேவர்கள் ஆயிரம் தோள்களைப் படைத்துக்கொண்டு ரத்தினத்தினால் ஆகிய பூரண குடங்களைச் சுமந்துகொண்டு. வினைகளை வென்ற இறைவனின் படிமைகளின்மீது, மேரு மலையிலிருந்து சொரியும அருவிபோல் சொரிந்தார்கள். மேலும் ஆயிரம் முகங்களைப் படைத்துக்கொண்டு, மூவுலகத்தோரும் வழிபடும் ஜினபகவானின் ஆயிரத்தெட்டு திருநாமங்களைக் கொண்ட தண்டகத்துதியை அபிடேகம் முடிந்து சொல்லித் துதித்தார்கள், ஊழி ஊழியாய் சேர்ந்த தீவினைகள் எல்லாம் தீர்ந்தன.

1298. கண்கள் ஆயிரம் உடைய அச்சக்கரன் காதியைக் கடிந்தோர்தம்
பண்பெலாம் உடன்இருந்த அப்படிமத்தைப் பலமுறை பார்த்து ஆரா
வண்கையால் தொழுது இறைவன்தன் சரணத்தை வாழ்த்தொடும் அருச்சித்தான்
பெண்களில் பிறப்பில்ல இந்திராணிப் பெருஞ்சிறப்பு உடன்செய்தாள்.

ஆயிரம் கண்களையுடைய அத்தேவேந்திரன் காதி கர்மங்களை வென்ற இறைவனது பண்பெல்லாம் ஒருபடித்தாக அமைந்த அப்பிரதிமைகளைப் பலமுறை நோக்கி, அவர் தம் அடிகளைப் பொருந்தி, தனது வண்கையால் வணங்கித் துதித்து அர்ச்சனையும் செய்தான். தேவமாதர்களின் மேலும் அதிக பிறவியின்றி அடுத்த சில பிறவிகளில் முக்தி எய்தும் பேறுபெற்ற இந்திராணியானவள், இந்தப் பெருஞ் சிறப்பினை இந்திரனுடன் இருந்து இயற்றி முடித்தாள்.

1299. கந்தமும் கடிமாலையும் சுண்ணமும் காரகில் இடுதூபம்
நந்தையின் நலவாரியும் தீபமும் நலபல சருவாலும்
அந்தமில்ல நல்லுவகையின் நடம்பல தொடங்கி நின்று அருச்சித்தார்
சந்திராதி கீழ்முத்தேவரும் இந்திரர் சோதமன் முதலானோர்

கீழ் முத்தேவர்களும் சந்திர சூரியர் முதலாகிய இந்திரர்களும் சௌதர்மேந்திரன் முதலாகிய கல்பவாசி தேவேந்திரர்களும் முடிவில்லா மகிழ்ச்சிப் பெருக்குடன் பல்வேறு ஆனந்த நடனங்களைப் புரிந்து சந்தனம், மணம் மிக்க மலர் மாலைகள், நறுமணப்பொடிகள் , கார் அகில் தூபம், நந்தை தடாகத்தின் தூய நீர், தீபம் நலம் மிக்க பலவகைச் சருக்கள் ஆகிய இவைகளைக் கொண்டு அர்ச்சனை செய்தார்கள்.

1300. மற்ற இந்திரர் தம்மொடும் படிந்திரர் மைமைகண் மும்மைக்கண்
உற்று நற்சிறப்பு உழைக்கலம் தாங்கினர் தேவியர் தம்மோடும்
பெற்றியல் பிறப்பு அறுக்கும் நல்சிறப்பினைச் செய்து சக்கரன் பின்னைக்
குற்றமில் நல் அறிவுடை இறைவன் தன் குணத்துதி சொல்லுற்றான்.

மற்ற இந்திரர்களுடன் பிரதி இந்திரர்களும் பூசை முதலியவற்றில் மனம், மொழி, செயல்கள் ஒன்றியவர்களாய் நலமார்ந்த பூஜைக்குரிய பொருள்களைத் தேவிமார்களுடன் ஏந்தினர், சௌதர்மேந்திரன் பிறப்பினை அறுக்கும் நலம்மிக்க இந்த நந்தீஸ்வர பூஜையைச் செய்தபின் குற்றமற்ற நலமார்ந்த வாலறிவினைப் பெற்ற இறைவனின் குணப்பெருமைகளைக்கூறி துதிக்கலுற்றான்.

1301. அருகன்நீ நல்ல பூசைக்கு அருகனாய்ப்
பெருமை ஆயினை பெண்ணசை இன்மையால்
ஒருவன் ஆயினை ஒப்பவர் இன்மையால்
துருவம் ஆயினை தோற்றமது இன்மையால்

பான்மையாளர்கள் பக்தியுடன் இயற்றும் நலம்மிக்க பூஜைக்கு உரியவனாகி அருகன் என்னும் பெயரினை எய்தினாய். பெண்ணாசை இன்மையால் பெரியோன் ஆனாய், ஒப்பார் இன்மையால் தனி ஒருவனாக விளங்கினாய். இனிப் பிறப்பின்மையால் என்றும் நிலைத்தவன் ஆனாய்.

1302. எரியும் போல்வை நீ எண்வினைக் காளிதம்
உருகச் சுட்டு உயிர் தூப்பத்தைச் செய்தலால்
தருவும் நீழலும் போல்வை நீ சார்ந்தவர்
பெரிய துன்பம் பிறப்பினை நீத்தலால்

எண்வகை வினைகளாகிய அழுக்கினை உருகச் சுட்டு உயிரைத் தூய்மை செய்ததால் நீ அக்னிக்கு நிகராவாய். உன்னை அடைந்தவர்களின் பெரிய துன்பமாகிய பிறப்புக்களை நீக்குவதினாலே மரமும் அதன் நீழலும் போல் விளங்குகின்றாய்.

1303. அறிவன் நீ அறியாப் பொருள் இன்மையால்
முறையு நீயிலை முற்ற வுணர்ச்சியால்
கறுவு நீயிலை காய்வது ஒன்றின்மையால்
இறைவன்நீ உலகுயாவும் இறைஞ்சலால்

நீ அறியாத பொருள் எதுவுமில்லாததால், அறிவனாகின்றாய், அனைத்தையும் ஒரே சமயத்தில் அறிவதால் முறைவேண்டாதவன் நீ சிறிதும் சினம் இல்லாமையால் செற்றம் இல்லாதவனாயினாய், பான்மை உயிர்கள் வணங்குவதால் நீயே மூவுலக நாதனாகின்றாய்.

1304. முழுதும்நீ முழுதுக்கும் இறைவன்நீ
முழுது தன் வடிவினை முழுதாகி நீ
முழுதும் கண்டுணர்ந்தாய் இன்பம்முன்று நீ
முழுதும் விரித்து நான்முகன் ஆகிநீ.

உலகனைத்தும் காணும் கடையிலா காட்சியால் அனைத்துக்கும் நீயே இறைவன், லோகம் முழுதுக்கும் இறைவன் நீயே! முழுமைத் தன்மையாகிய கடையிலா ஞானத்தால் எல்லாவற்றையும் கண்டறிந்து நிறை இன்பத்தை எய்தியவன் நீ. உயிர் முதலாகிய எல்லா பொருள்களின் தன்மைகளையும் விரித்துரைத்து நான்கு ஆகமங்களாக அருளியதால் நீயே நான்முகனாவாய்.

1305. உண்மைதான் இன்மை உண்மை இன்மையாம்
திண்ணிய தன்னோடு அவாச்சியம் செப்பிடில்
பண்ணு பங்கங்கள் ஏழ் பொருட்கு இல்லையேல்
உண்மைதான் பொருட்கு இல்லை என்று ஓதினாய்

நித்தியம், அநித்தியம், நித்திய அநித்தியம் பொருந்திய இம்மூன்றுடன் அவாச்சியம், இத்துடன் முதல் மூன்றையும் சேர்த்து, நித்திய அவாச்சியம், அநித்திய அவாச்சியம், நித்திய அநித்திய அவாச்சியம் ஆகிய இந்த ஏழு பங்கங்களும் அதாவது நியாங்களும், உயிர் முதலிய பொருள்களுக்கு இல்லையேல் அவைகள் இருப்பது உறுதியில்லை என்று கூறினாய்.

1306. சுற்றம் நீ எவர்க்கும் துன்பம் நீக்கலால்
பற்று நீ இலை பற்றவை தீர்த்தலான்
முற்று நீ உணர்ந்தாய் மூவுலகத்தின்
பெற்றி தன்னை நீ யாவர்க்கும் பேசலால்

உன்னை அடைந்த அனைவரின் துன்பங்களையும் நீக்கியதால் நீயே உயர்ந்த உறவாகின்றாய், அனைத்துப் பற்றுகளையும் நீக்குகின்ற காரணத்தால் விருப்பு வெறுப்பற்றவன் நீயே. மூவுலகங்களின் தன்மைகளை கணதரர் முதலியோர்க்கு எடுத்துரைத்த தன்மையால் அனைத்தையும் அறிந்தவனும் நீயேயாகின்றாய்.

1307. அருவன் நீ அகதிக்கண் இருத்தலால்
உருவன் நீ உடம்போடு செல் நாளெலாம்
மருவி வானவர் வாழ்த்தி இவ்வாற்றினால்
பொருவிலாப் புண்ணியத்தொடும் போயினார்

பிறத்தலில்லாத முக்தியுலகில் நிலைத்திருத்தலால் உருவமற்றவனும் நீயே. வீடு பெறும் முன் உடலுடன் கூடி ஸ்ரீவிஹாரம் செய்த காரணத்தால் உருவத்தை உடையவனும் நீயே, இவ்வாறு பலவிதமாக நால்வகைத் தேவர்களும், இறைவனை வாழ்த்தி வணங்கி ஒப்பற்ற புண்ணிய பலத்துடன் தத்தம் உலகமடைந்தனர்.

1308. இமையவர் போல இச்சிறப்பினைச் செய்தவர்
இமையவர் உலகத்தை எய்தி இங்கு வந்து
இமையவர் செயும் சிறப்பு ஐந்தும் எய்திப்போய்
இமையவர் தொழச் சித்தியகத்து இருப்பரே.

தேவர்களைப்போல இந்த நந்தீஸ்வர பூஜையைச் செய்த பவ்விய மாந்தர்கள், மறு பிறவியில் தேவர்களாய்ப் பிறந்து உயர்ந்து மீண்டும் மண்ணுலகில் தீர்த்தங்கரர்களாகத் தோன்றி - தேவர்கள் இயற்றும் ஐஞ்சிறப்புக்களை எய்தி, வினைகள் அனைத்தையும் கெடுத்து அமரர்கள் ணங்கி நிற்க முக்தி உலகில் நிலைத்திருப்பர்.

1309. எண்வகை வியந்திரர்க்கு இடம் இதாகவும்
பண்ணவர் பணித்தனர் பல்லம் ஆயுகம்
முன்னிலத்து எங்கணும் உறைவர் ஒக்கமும்
பண்ணுறு சிலைகள் பத்தாகும் என்பவே.

எட்டுவகைப்பட்ட வியந்திர தேவர்களின் வாழிடம் இந்த மத்திய உலகமே என இறைவனால் கூறப்பட்டது. மேலும் அவர்கள் ஆயுள் ஒரு பல்லமாகும். முன்பே கூறிய கணக்கற்ற தீவுகளும் பெருங்கடல்களும் அவர்கள் உறைவிடங்களாகும். அவர்தம் உயரம் பத்து வில்லளவாகும்.

1310. ஆயிரம் யோசனை ஆழ்ந்தது ஓங்கியது
ஆயிரம் இலாத நூறாயிரம் புகை
ஆயிரம் பத்தடி அகலமாயது
மேய நால் வனத்தது மேரு என்பவே.

மாமேரு பர்வதமானது பூமிக்குள் ஆயிரம் யோசனை அளவு ஆழ்ந்தும், பூமிக்குமேல் தொண்ணூறொன்பது ஆயிரம் யோசனை உயர்ந்தும் அடிப்பகுதி பத்தாயிரம் யோசனை அகன்றும் நான்கு வனங்களால் சூழப்பட்டும் உள்ளதாகும். அந்த வனங்கள், பத்திரசாலம், நந்தனம், சௌமனசம், பாண்டுகம் என்பதாம்.

1311. துகள் நிலம் மீது பத்திலாத எண்ணு{றுநல்
புகைமிசை நூற்றொ பத்து வான்புகை
இகழ்விலாச் சோதிடர் ஒருகயிற்று எல்லை
அகணிலத்து இயங்குவர் புறத்து நிற்பரே.

சித்ரா பூமிக்குமேலே எழுநூற்றித் தொண்ணூறு யோசனை உயரத்திற்குமேல் இகழ்வற்ற சோதிஷ்க தேவர்கள் மத்திய உலகத்தின் எல்லையாகிய ஒருகயிறு அளவு வரையில் இரண்டரை தீபங்களிலும் இரண்டு சமுத்திரங்களிலும், விண்ணகத்து இயக்கம் பெறுவர், மானுடோத்தர மலைக்கு வெளிப்புறங்களிலே இயக்கமின்றி நிலையாக நிற்பார்கள்.

1312. இரவி பத்தின் மிசை எண்பதின் மிசை
அரவிந்தப் பகைவனாம் மீன்கள் நான்மிசை
உரைசெய்த புதற்குயர் நான்கு மூன்றின்மேல்
விரகினால் வெள்ளி வியாழன் செவ்வாய் சனி

முன்புகூறிய சித்ராபூமிக்குமேல் எண்ணூறு யோசனைக்குமேல் சூர்ய விமானமும், எண்ணூற்றி எண்பதில் சந்திரனும், எண்ணூற்றி எண்பத்து நான்கு யோசனையில் இருபத்தேழு நட்சத்திரங்களும் உள்ளதாகவும், அதற்குமேல் நான்கு யோசனையில் புதனும், எண்ணூற்றி தொண்ணூற்று ஒன்றில் வெள்ளியும், மேலும் மூன்று யோசனையில் வியாழனும், தொண்ணூற்றேழில் செவ்வாயும், தொளாயிரம் யோசனை உயரத்தில் சனியும் உள்ளன.

1313. கீழவாம் தாரகை கேட்கின் மேலுமாம்
ஏழுவான் சிலை உயர்ந்து ஏகபல்லமாம்
வாழுநாள் சோதிடர்க்கு அன்றிமூவரும்
கீழ ஆயுகம் ஈராயிரங்கள் அஞ்சரே.

தாரகைக் கூட்டங்கள் சந்திர சூரியர்க்கு கீழும், மேலும் உள்ளன. ஏழுவில் உயரமுடைய சோதிர் தேவர்களின் ஆயுள் ஒரு பல்லமாகும் அடுத்து, பவண, வியந்த சோதிர் ஆகிய மூவருடைய குறைந்த ஆயுள் பதினாயிரம் ஆண்டுகளாகும்.

1314. இரண்டு நான்கு முன்னான்கும் ஏழும் ஆறும் மற்று
இரண்டினோடு எழுபதாம் இந்து அருக்கனும்
திரண்ட நூற்றுமுப்பத் திரண்டும் செலும்
இரண்டு இரண்டரைச் சாகரத் தீவினே.

மத்திய உலகின் பகுதியாகிய இரண்டரைத் தீபம் இரண்டு சமுத்திரங்களில் உள்ள சந்திர சூரியர்கள் விவரம், ஜம்பூத்தீபத்தில் இரண்டு சந்திரன் இரண்டு சூரியன்களும், லவண சமுத்திரத்தில் நான்கு நான்கும், தாதகி தீபத்தில் பன்னிரண்டு பன்னிரண்டும், காளோதக சமுத்திரத்தில் நாற்பத்திரண்டு நாற்பத்திரண்டும், புஷ்கரவர தீபத்தில் எழுபத்திரண்டு எழுபத்திரண்டுமாக, நூற்றி முப்பத்திரண்டு சந்திரர்களும் அதே அளவுடைய சூரியர்களும் இயங்குகின்றனர்.

1315. துறக்கத்தின் இயற்கை சொல்லில் சொல்லிய படலந்தோறும்
இறப்ப இந்திரகம் சேணி பந்தம் கிண்ணகமும் ஆகும்
திறத்துளி சேணி பந்தம் இருது நாற்றிசையும் சென்ற
அறக்கதிர் ஆழிவேந்தன் அறுபதோடு இரண்டு என்றானே.

இனி, சொர்க்க லோகத்தின் இயல்பினைச் சொல்லப்புகின் முன்பே கூறிய படலங்களில், படலந்தோறும் மிகுதியான இந்த்ரகங்களும், சேணி பந்தங்களும், புஷ்ப பிரகீர்ணங்களும் எனப்படும் மூன்றுவிதமான விமானங்கள் அமைந்துள்ளன. இவைகள் அமரர்கள் வாழிடங்களான விமானங்களாகும். வரிசைகளாக அமைந்த சேணி பந்தங்கள், சௌதர்ம கல்பத்தில், இருது விமானம் என்னும் இந்த வகையை மையமாகக் கொண்டு, நான்கு திசைகளிலும், வரிசையாக அமைந்துள்ளன. அவற்றின் எண்ணிக்கை அறுபத்திரண்டு என அறவாழிவேந்தனாகிய அருக பரமனால் அருளப்பட்டது.

1316. சொல்லிய படலந்தோறும் ஒரோஒன்று சுருங்கிச்சென்று
நல்லிசை அணுதிசைக்கண் திசைதொறும் ஒரோஒன்றாகும்
வில்உமிழ்ந்து இலங்கும் செம்பொன் விமானத்தின் கணனை வேண்டின்
சொல்லுதும் கேட்கச் சோதம் ஈசானத் தொடக்கமாக.

சௌதர்ம கல்பத்தில் திக்குகளில் அறுபத்திரண்டாகக் கூறப்பட்ட சேணிபந்தங்களானவை, மேல் படலந்தோறும் திக்குக்கு ஒன்றாகக் குறைந்துகொண்டே போய் புகழ் பொருந்திய நவாணு திசை அகமிந்திர உலகில், திசைக்கு ஒன்றாக இருக்கும், ஒளிக்கதிர்களைச் சொரிந்து சிவந்த பொன்னாலாகி விளங்கும் இந்த்ரகம், சேணிபந்தம், பிரகீர்ணம் ஆகியவற்றின் தேவ விமானங்களின் எண்ணிக்கைகளை அறிய வேண்டுமென்றால் சௌதர்ம ஈசான கல்பம் முதல் முறையாகச் சொல்லுகின்றோம் கேட்பீராக.

1317. இலக்கம் எண்ணான்கு எழுநான்கும் முந்நான்கும் எட்டும்
இலக்கம் நான்கு இரண்டிற்காகும் மேலிரண்டு இரண்டிற்கு இவ்வாறு
இலக்கத்தின் பாதி எண்ணஞ்சாயிரம் ஆறுமாகி
விலக்கிலா விமானம் நான்கு நூறுமுந்நூறும் ஆமே.

நீக்குதல் இல்லாத தேவவிமானங்கள் சௌதர்ம கல்பத்தில் முப்பத்திரண்டு லட்சமாகும், ஈசான கல்பத்தில் இருபத்தெட்டு லட்சம், சனத்குமார கல்பத்தில் பன்னிரண்டு லட்சம், மாகேந்திரத்தில் எட்டு லட்சம் பிரம்ம பிரம்மோத்தரத்தில் நான்கு லட்சங்களாகும், அதற்கு மேல் இரண்டிரண்டு கல்பங்களில் இவ்வாறு பாதிஅளவு அதாவது லாந்தவ காபிட்ட கல்பங்களில் ஐம்பதினாயிரமும், சதார சகஸ்ராரங்களில் ஆறாயிரமும் ஆனத பிராணத கல்பங்களில் நானூறும், ஆரண அச்சுதங்களில் மூன்னூறும் ஆகும்.

1318. நூற்றினோடு ஒருபத்தொன்றாம் ஏட்டிம திரயத்தின் கண்
நூற்றினோடு ஏழுமாகும் மத்திமமும்மையில் தொண்
ணூற்றினோடு ஒன்றுமாகும் உபரிமமும்மையின் கண்
ஆற்றவும் ஒன்பத்தைந்தாம் அணுதிசாணுத்தரத்தே.

ஹேஷ்டிமந்திரயத்தில் நூற்றிப்பதினோரு விமானங்களும், மத்திமத்திரயத்தில் நூற்றியேழும் மூன்று உபரிம கல்பத்தில், தொண்ணூற்றி ஒன்றும் உள்ளன. மிகமேலான நவாணு திசையில் ஒன்பது விமானங்களும் பஞ்சாணுத்தரத்தில் ஐந்தே விமானங்களும் ஆகும்.

1319. இந்திரர் சாமானிகர் தாயத்திங்கர் பாரிடதர்
கந்தபாலர் காப்பர் ஆனிகர் கீணர் கில்விழியர்
இந்திராதிகளில் பத்தும் அரசர்கள் குரவர் அன்றி
மந்திரர் சூழ்ந்திருப்பர் காஞ்சுகியாதி போல்வார்

இந்திரர்களும், சாதாரண தேவர்களும், தாயத்திங்கரும் (த்ராயத்ரிம்சரும்), பிரதி இந்திரர்களும், உலக பால தேவர்களும், தண்டநாயகர்களும், ஆனீக தேவர்களும், பிரகீர்ணக தேவர்களும், கில்விழியர்களும் ஆகிய இந்திரர்களில் பத்து விதங்களும், பூவுலக அரசர்களும், பெரியோர்களும் இவையன்றி மந்திரிகளும் மேற்சட்டை முதலியவை போலச் சூழந்திருப்பர்.

1320. நடுவண் எண்புகைக் கொழுப்பாய் நந்தி ஈச்சிறகொத்து ஈற்றில்
குடைமலர்ந்து இந்ததே போன்று இரண்டரைத் தீவோடு ஒத்து
கடையிலா அறிவு காட்சி உடையவர் கழுமி நின்ற
இடமது உலகத்து உச்சி ஏத்தருந் திறத்ததாமே.

கடையிலா அறிவையும், கடையிலா காட்சியையுமுடைய சித்தபரமேட்டிகள் பொருந்தி நிற்கும், சித்த உலகமானது, உலகத்தின் சிகரமாகி மத்தியில் எட்டு யோசனை பாகுல்யத்தைப் பெற்று நிறைவெய்தி, ஈற்றில் ஈயின் இறகு அளவாகக்குறுகி குடையானது விரிந்திருப்பதைப் போல விளங்கி, இரண்டரை தீபத்தின் விஸ்தீர்ணமாகிய நாற்பத்தைந்து லட்சம் யோசனை பெற்று, பான்மையரால் துதித்தற்குரிய மேன்மையுடையதாகும்.

1321. மதிசுதம் அவதி மாண்ட மனப்பச்சம் கேவலமாம்
விதியவாம் பமாணம் வேண்டின் விகற்பங்கள் யாவுமாகும்
மதிசுதம் பரேக்கமாகும் மற்ற பச்சக்கமாகும்
விதியிவை விகலம் தூலம் சகல நிச்சயமும் ஆமே.

மதிக்ஞானம், சுருதஞானம், அவதிக் ஞானம் என்னும் மாண்புமிக்க மனப்பரிய ஞானமென்றும், வாலறிவென்றும் (கேவலஞானமென்னும்) ஐந்து விதமான முக்கியப் பிரிவுகளாகும், இவற்றின் அளவுகளைத் தனித்தனியே நோக்குவோ மாயின் பற்பல பிதமாக விரியும், மதியும், சுருதியும் பரோட்ச ஞானங்களாகும், மற்றவை மூன்றும் பிரத்யட்ச ஞானங்களாகும். இந்த முறையில் அமைந்த இம்மூன்றில் அவதிக் ஞானம் விகலப்ரத்யட்சமும் மனப்பரியம் தூல ப்ரத்யட்சமும் கேவல ஞானம் நிச்சயப் பிரத்யட்சமும் ஆகும்.

1322. மதியினும் கருத்து கண்கூடு இரண்டுமாம் விசேடம் பத்தாம்
விதியது கண் கூடாகும் விசாரணை நீக்கம் தேற்றம்
மதி சுருதி சன்னா சிந்தை மற்றிவை பரோக்கம் ஆகும்
சுதமதன் முன்பு செல்லும் மதியும் நல் பரோக்கமாகும்.

மதிக்ஞானம், கருத்து - கண்கூடு என இரண்டு விதமாகும், இதில் கண்கூடு பத்து விதமாகும். ஈகை, ஆவாயம், தாணை என்னம் மூன்றாம் ஆறு இந்திரியங்களுடன் தனித்தனியே சேர பதினெட்டாகும். பிறகு இந்த ஞான வகைகள் மதி, சுருதி, சஞ்ஞை, சிந்தை என்றும் பரோட்ச ஞானமாகும் - அந்த மதிக்ஞானம் காரணமாக உண்டாகும் சுருதக்ஞானமும் பரோட்ச ஞானமாகும்.

1323. வைப்பு நயன் அளவை வாயில் மார்க்கணை குணசீவன்கள்
செப்பிய சுதத்தில் சென்று விகற்பமாம் சதாதியோடு
மெய்ப்பட உணர்வை தோற்றின் வினைகளைக் கெடுக்கும் என்று
பொய்ப்பறு பமாணமாகப் புண்ணியக்கிழவன் சொன்னான்.

நான்கு நிக்ஷேபமும் ஆறு நயங்களும், பிரமாணமும் இவை காரணமான பதினான்கு மார்க்கணா ஸ்தானமாகும். பதினான்கு வகை குணத் தானங்களும், பதினான்கு வகை ஜீவஸ்தானங்களும், ஆகிய இவை இறைவன் திவ்யத் தொனியால் சொல்லப்பட்டன. இவை பிறகு கணதரர்களால் பன்னிரு பரமாகமங்களாகச் சொல்லப்பட்டன. சதாதியோடு (ப்ரரூபணா பாவனையோடு) உண்மையாக பாவ சுருத ஞானமானது தோன்றுமேயானால் கர்மங்களைக் கெடுத்து, ஆன்மன் பரமாத்ம நிலை எய்துமென்றும் குற்றமற்ற ஏதுக்களுடன் தீர்த்தங்கர பகவான் திவ்ய தொனிமூலம் கணதராதியர்க்கு பகவான் திவ்ய தொனிமூலம் கணதராதியர்க்கு அருளினான்.

1324. அங்க புவ்வாதி நூல்கள் ஆகமம் பமாண மாகும்
சிங்கிய மதி சுதங்கள் விபங்கமும் தீயஞானம்
அங்கவை மூடம் சந்தேயம் விபரீதமாகும்
தங்கிய சன்னிக்கு அப்பால் தானெலாம் மூடமாமே.

கணதரர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு பிரிவுகளையுடைய ஆகம நூல்கள் (பன்னிரண்டு அங்கம், பதினான்கு பூர்வம்) சுருத ஞானப் பிரமாண மாகும். வினைகளால் வேறுபட்ட தீய அறிவும் தீய சுருதங்களும், தீயதை அறியும் ஒதியும் மித்யா ஞானங்களாகும். அவை மூடம், ஐயம், விபரீதம் என மூன்றாகும். சஞ்சி (மனமுடைய) பஞ்சேந்திரிய உயிர்கள் தவிர மற்ற உயிர்கள் எல்லாம் தீய ஞானத்தையே பெற்றுள்ளன.

1325. அருத்தத்தில் காமத்தின்கண் அவ்விரண்டு அகத்தும் சென்று
விருத்தத்தைத் தெளிவிலாமை விசதமாம் மூடமாகும்
ஒறுத்துழிச் செறிதலின்றி உலாவல் சந்தேகமாகும்
விருத்தமாய் உணர்தல் சொல்லல் விபரீத நயமதாமே

நிறைவெய்திய ஐம்பொறி உயிர்களும் பொருள் இன்பங்களில் பற்றுகொண்டு இவற்றினின்றும் வேறுபட்ட உயர் அறத்தைத் தெளியாமல் மயங்கிக் கிடப்பது மூடமாகும். உண்மை உணராது பலவிதமாகப் பொருள் கொள்வது ஐயமாகும். உண்மைக்கு நேர்மாறாக உணர்வதும், சொல்வதும் விபரீதநயமாகும்.

1326. அராகாதி மான்கள் ஆத்தர் அல்லவர் நல்லர் என்றும்
விராகதி அல்ல மார்க்கம் விகற்பத்தை விடுதல் என்றும்
உரோகாதி ஓம்பல் இன்றி உயிர்க்கொலை தருமம் என்றும்
வராகாதிப் பிறவியானே வையகத்துக்கு இறைவன் என்றும்

விருப்பு வெறுப்புடையவர்களைக் கடவுளர் என்றும், பாபகாரியங்கள் செய்வோரை நற்பண்புடையவர்கள் என்றும், பிறவியில் வைராக்கிய உணர்வில்லாத ஆசையை வளர்க்கும் நெறியே சம்சாரத்தை நீக்கக் கூடியதென்றும், உடல் நோய்களுக்கான மருத்துவ முறைகளை நாடாமல், உயிர்பலி செய்வதே அறமென்றும் காதி வினைகளுக்கு உட்பட்டு உழன்று கிடப்பவர்களை இவ்வுலகத்தின் இறைவர்களென்றும், மேலும்

1327. விகாரமில் ஒருவன் செய்கை உலகத்தில் விகாரமென்றும்
அவாவொடு மனையின் நீங்காதவரை மாதவர்கள் என்றும்
தகாதன யாவும் செய்ய வல்லவர் தலைவர் என்றும்
தொகை விரிபொருள்கள் இல்லை சூனிய மல்லது என்றும்

உலகத்தில் விகார தன்மைகள் இல்லாதவனுடைய நற்செயல்களைத் தீயவை என்றும், ஆசையோடு கூடி இல்லறவாழ்வை நீங்கி நந்நெறி பொருந்தாதாரை மாமுனிவர்களென்றும், தகாத கொடுஞ் செயல்கள் புரிவோரை தலைவர்கள் என்றும், விவகார நிச்சய நயங்கள் பொருந்திய உயிர் முதலிய பொருள்கள் எதுவும் உலகில் இல்லை எல்லாமே சூன்யம் என்றும், மேலும்

1328. தன்னைக் கொன்று உயிரை ஓம்பல் தக்கநல் கருணை என்றும்
பின்னைத்தான் ஊனை உண்கை பெருந்தவம் ஆவதென்றும்
உன்னில்தான் கணத்து யாவும் ஒட்டறக் கெடும் என்று ஓதிப்
பின்னைத் தான் நித்தம் முத்திக்கு உழக்கு எனப்பேசலாமே.

தன்னை வருத்திப் பிறஉயிர்களைக் காத்தல் நலம்மிக்க அருளாகும் என்றும், ஊன் உண்பது பெரியதவமாகும் என்றும், ஆராய்ந்து நோக்கினால் உயிரானது ஒரு கணத்திலே அடியோடு அழியக்கூடியது என்றும் இவ்வாறெல்லாம் கூறி பிறகு உயிரானது நிலையான வீட்டுலகத்திற்கு விரும்பிச் செல்லுமென்று பேசுவதும், மேலும்

1329. அறிவினே வீடாம் அன்றி ஆசாரத்து ஆகும் அன்றி
இறைவன் நற்காதலால் ஆம் இவ்விரண்டாலும் ஆகும்
நெறிமுத்திக்கு இல்லை நித்தம் முத்தனே சீவன் என்றும்
அறிவின்மை நன்றே என்றும் அழைத்தலாம் பிழைத்த நீதி

ஞானத்தினாலும் வீடுபெறலாம், சீலத்தினாலும் முக்தி எய்தலாம் கடவுள் பக்தியினாலும் மோட்சம் அடையலாம், அல்லது சீலம், பக்தி இவற்றினாலும் வீடு பெறலாம், இவற்றைத்தவிர முக்திக்கு வேறு வழிகள் இல்லை என்றும், உயிரானது எப்போதும் முக்திக்கு உரியவனே என்றும், அஞ்ஞானமே நல்லது என்றும், இவை போல் பிறவும் கூறுவது 'மித்யாத்வம்' என்னும் தவறான நெறியாகும்.

1330. இறைவ, மற்று என்கொல் ஏது வினைமன்னர் மிகுதற்கு என்று அங்கு
அறைகழல் அரசர் கேட்டார் அருந்தவர் உரைக்கலுற்று
நெறியினால் எட்டும் தத்தம் நிமித்தத்தை நிறையப் பெற்றுச்
செறிய மிக்க அல்லது ஈனமாம் அது செப்பக் கேண்மின்.

அப்போது கழலணிந்த அரசர்கள், இறைவனே, வினை மன்னர்கள், ஆத்மனிடத்திலே மிகுதியாக் கட்டுவதற்குக் காரணம் என்ன என வினவினர். அதற்கு மேரு மந்தரர்களாகிய கணதரர்கள் பதிலுரைத்தனர். ஞானாவரணீயம் முதலிய எண்வகை வினைகளும் அவை அவை வந்து சேருவதற்கான நிமித்தங்களை மிகுதியாகப் பெறும் போது உயிரில் வந்து சேர்வது ஊற்றாகும். அவை அதிகாஸ்வரம், ஈனாஸ்வரம் எனப்படும் ஊற்றுக்குப் பின் பந்தமாகும். இனி ஊற்றுக்கான நிமித்தங்களைக் கூறுகின்றேன், கேளுங்கள்.

1331. பரமன் நூல் பழித்தல் மாய்த்தல் இடையுறல் பிழைக்க ஓதல்
குரவர் மாறாதல் சுருதம் கொண்டுழி கரத்தல் தீநூல்
மருவுதல் துவர்கள் நான்கில் ஞானம் மாச்சரியம் முற்றும்
பெருகில் ஆவரண ஞானக் காட்சியைப் பிணிக்கும் மிக்கே.

அருகபெருமானால் அருளப்பட்ட பரமாகமங்களைப் பழித்துக்கூறுதலும், அவற்றை அழித்தலும் இடைச்செறுகல் செய்து கெடுத்தலும், அவற்றின் பொருளை மாறுபட உரைத்தலும், ஆசாரியர் உபாத்தியாயர் சவ்வசாதுக்கள் முதலிய சுருத குருக்களை வைதுரைப்பதும், பரமாகமங்களை மறைத்து விடுவதும், தீய நூல்களைப் போற்றி அதில் ஆர்வம் கொள்வதும், சினம், செருக்கு, ஆசை, வஞ்சனை முதலிய தீய பண்புகளுடன் நல்ஞானத்தின்மேல் வெறுப்படைவதும் ஆகிய இவைப் பெருகி வளருமேயானால் ஞானாவரணீயம், தர்சனா வரணீயம் முதலிய வினைகள் மிகுதியாக ஆன்மாவைப் பந்திக்கும்.

1332. தன்முதல் உயிரைக் கோறல் வருத்துதல் படைகள் ஏந்தி
பின்உயிர் நடுங்கச் செய்தல் எரியிடல் உறுப்பு அறுத்தல்
வில்முதல் ஈதல் உள்ளம் வருந்த வெந்துயரைச் செய்தல்
இன்னவை இடரை ஈனும் அசாதா வேத்தை ஈட்டும்.

தனது உயிருடன் மற்ற உயிர்களையும் கொலை செய்தலும் துன்புறுத்துதலும், கொடிய கருவிகள் கொண்டு மற்ற இன்னுயிர்கள் நடுங்குமாறு வேட்டையாடல், அவற்றைத் தீயிட்டு வாட்டுதல், உறுப்புக்களைத் துண்டித்தல், வில், அம்பு முதலியன கொடுத்து

கொலைக்குத் துணைபுரிதல், பிறஉயிர்கள் மனம் நடுங்குமாறு கொடுந்துயரைச் செய்தல், ஆகிய இது போன்ற கொடுமைகளால், இடர்தரும் அசாதா வேதனீயம் உயிரை பந்திக்கும்.

1333. உரைசெய்த குணங்கள் இன்றி கருணையை உள்ளிட்டு ஏழு
மருவிய மனத்தினார்கள் உயிர்களின் வருத்தம் ஓம்பித்
துரு நயத்தால் வந்து எய்தும் துன்பத்தைத் துணியநூறிப்
பெரிய இன்பத்தை ஆக்கும் சாதம் தான் பிணிக்கும் மிக்கே

மேலே கூறப்பட்ட கொடிய பண்புகள் இல்லாமல், உயிர்களிடம் அருள்கொண்டு ஏழுநற் பண்புகளைப் பெற்ற நல்ல மனம் படைத்தவர்கள் உயிர்கள் மாட்டுத் தோன்றும் துன்பங்களைப் போக்கி, அவற்றை உபசரித்து, அறியாமையால் வந்து சேரும் துன்பங்களை அடியோடு ஒழித்து நீக்கினால் மிகச் சிறந்த சுகங்களை அளிக்கும் சாதாவேதனீய வினையானது வந்து பந்திக்கும்.

1334. அருகன் ஆலயங்கள் நூல்கள் அறநெறி தமக்கு மாறாப்
பொருள்கள் தேறாது மாறாம் பொருள் உரைத்து அருகன் ஆதிப்
பெருமையைப் பெறாது குற்றம் பிறங்கினார் தமை இறைஞ்சல்
மருவும் மிச்சத்தமட்டி நெறி மயக்குறுகும் மிக்கே.

ஜினபகவானது ஆலயம், அவனால் அருளப்பட்ட ஆகமங்கள், அறநெறிகள் ஆகியவற்றிற்கு மாறுபட்டு உண்மைப் பொருளை அறிந்து தெளியாமல் மாறுபட்ட பொருள்களைப் படைத்துக்கூறி, அருக பெருமான் முதலியோரது பெருமைகளை மனம் பொறாது – ஆசை, சினம் முதலியன பெற்றுள்ளவர்களைக் கடவுளாக வணங்குவதும் ஆகியவை நந்நெறியை மயங்கச் செய்யும் மித்யாத்வம் என்னும் தரிசன மோகனீய கர்மத்தை ஆக்கி உயிருடன் பந்திக்கச் செய்யும்.

1335. ஒழுக்கத்தை அழித்தல் காயத்து ஊர்வன நிற்பதம்மை
அழித்திடல் கிளையில் சேர்தல் நீக்குதல் ஆதியாலும்
வழுக்கிலாச் செற்றம் ஆர்வம் மயக்கமாம் ஐ ஐந்தாலும்
ஒழுக்கத்தை அழிக்கும் மோகம் உடன்வந்து பிணிக்கும் மிக்கே.

நல்லொழுக்கத்தை அழிப்பது, உடலுடன் இயங்கும், நிற்கும் உயிரினங்களை துன்புறுத்துவது, அவைகளை தத்தம் கூட்டங்களிலிருந்து பிரிப்பது, ஆகிய தீச்செயல்களாலும் நீங்காத பகை, ஆசை, மயக்கம் ஆகிய இருபத்தைந்து விதமான துவர்ப்புக்களாலும் ஒழுக்கத்தை அழிக்கும் சாரித்திர மோகனீய வினைகள் மிகுதியாக உயிரினை பந்திக்கும்.

1336. மருள்செய்யும் வினைமுன் எட்டின் மாற்றொணா உதயத்தாலும்
பொருள் கொலை களவு பொய்யில் புரிந்தெழும் உவகையாலும்
திரிவிதத் தீயிலைச்சை முறுக்கிப் பேராரம்பத்து
மருவுமால் நிரையவாயு மாற்றொணா உதயத்தாலே.

அனாதிகாலமாக உயிர்ப்பண்பினை மயங்கச் செய்யும் எட்டுவித வினைகளின் நீக்கமுடியா உதயத்தாலும் பொருட்பற்றாலும் கொலை, களவு, பொய் ஆகியவற்றை விரும்பி மிக்க ஆசையுடன் மூவகைப் பட்ட மனநிலையினால் பலம் மிக்க தொழில் பற்றினாலும், நீக்கற்கியலா உதயத்தால் பெரும் துன்பத்தை ஆக்கும் நரகாயுள் கர்மமானது உயிரினைச் சேரும்.

1337. வஞ்சனை மனத்துவைத்து வாக்கொடு காயம் வேறாய்
நஞ்சென ஒழுக்கம்பற்றி நல்லொழுக்கு அழித்தலாலும்
எஞ்சிடா மூடமாதி மூன்று மிச்சுதயத்தாலும்
செஞ்செவ் வெவ்விலங்கில் உய்க்கும் ஆயுகம் செறிக்கும் மிக்கே

வஞ்சனை மனத்துடன் சொல்வேறு செயல் வேறுபட்டு, நஞ்சுபோன்ற கொடுந்தொழில்களை மேற்கொண்டு நல்ல ஒழுக்கங்களை அழிப்பதாலும், குறைவற்ற மும்மூடங்கள் முதலாகிய மித்யாத்துவ வினைகளின் உதயத்தாலும், குறைநிறை உயிர்களான விலங்கு கதியிலே தள்ளும்படியான ஆயுள் கர்மமானது, பலமாகப் பந்திக்கும்.

1338. மெய்ம்மையாம் தெளிவிலாகும் வென்றவர் குணத்துள் ஆர்வம்
செம்மை வான்கருணை மெய்ம்மை சிந்தையுள் கலக்கம் இன்மை
இம்மையாம் போகம் வேண்டா முனிவர்கட்கும் ஈதல் ஆதி
தம்மின் ஆம் போகபூமி மக்கள் ஆயுகங்கள் ஆமே.

பொருள்களின் உண்மைத் தன்மைகளை உணரக்கூடிய தூய நற்காட்சியினால், வினைகளை வென்ற இறைவனின் குணங்களான நிச்சய விவகார மும்மணிகளின் பால் மிக்க விருப்பமும், நடு நிலைமையும், மிக்க அருளும், உண்மைத் தன்மையும், மனம் கலங்கா தர்ம, சுக்ல தியான பாவனையும், இப்பிறவியில் இன்பம் தரும் இந்திரிய சுகத்தை விரும்பாத உறுதி படைத்த மாமுனிவர்களுக்கு நான்கு வகை தானங்களை அளிப்பதும் ஆகிய உயர் சீலங்களினால் போகபூமி மனிதர்களின் ஆயுள் வினைகள் பந்திக்கும்.

1339. உரைத்த இக்குணங்கள் மாயம் ஒன்றிடில் அந்தப்பூமி
திரிக்கய ஆயுவாகும் செப்பிய குணங்கள் மாயம்
பொருத்தம் இல்லாதபோது மந்தம் மத்திமங்களாகில்
வருத்தமில் கருமபூமி மக்கள் ஆயுகங்களாமே.

மேலே சொல்லப்பட்ட உயர்குணங்கள் வஞ்சனையாக அமையுமானால், அதே போக பூமியில் விலங்கு ஆயுளுக்குக் காரணமாகும். அக்குணங்களில் மாயமில்லாது குறைந்த நிலையும், இடைநிலையும் பொருந்துமாகில், கருமபூமி மக்களின் ஆயுள் வினைகள் பந்திக்கும்.

1340. அறத்து எழுவிருப்பினாலும் ஆன்ற நற்காட்சியாலும்
வெறுத்து எழு மனத்தினாலும் மிக்க நற் பொறையினாலும்
சிறப்புடைச் சமத்தினாலும் தேவரசு ஆக்கும் பூமி
பிறப்பினைச் சமைக்கும் மக்கள் ஆயுகம் பிணிக்கும் மிக்கே.

தர்மத்தியான ஆர்வத்தினாலும், உயர் நற்காட்சியினாலும், இல்லற சுகதுக்கத்தில் பற்றின்மையினாலும், நிறைந்த பொறையினாலும், சிறப்புமிக்க சமதா பாவனை நிலையாலும், தேவேந்திர பதவியைத் தரும். மேலும் தர்மகண்டங்களிலே வீடுபெறும் உயர்ந்த மக்கள் ஆயுவைத்தரும் வினையானது பந்திக்கும்.

1341. நெறியிவை பெறாதார் அந்த நிலத்துள விலங்குமாவார்
அறிவு ஒன்று முதல் விலங்கும் தெளிவிலா மனிதராகும்
மறுவில் ஆம் தெளிவினாலே வாயு தேயுக்கள் சென்று
செறியும் ஐம்பொறிவிலங்கில் சிறியதோர் கருணையாலே.

இதுகாறும் கூறிய உயர்நெறிகளைப் பொருந்தாதார், மிகக்குறைந்த அருட்தன்மையால், அந்தக் கர்ம பூமியில் விலங்கு ஆயுளைப் பெறுவார்கள். ஒன்று முதல் நான்கு பொறிகள் அமைந்த உயிரினங்கள் குறைகள் நிறைந்த தன்மைகளால் தாழ்நிலை மனிதர்களின் ஆயுள் வினையை அடைவர். அந்த ஒரு பொறி உயிர்களிலும் வாயு நெருப்புயிர்கள் பஞ்சேந்திரிய அசஞ்சி விலங்காயுளைப் பெறும்.

1342. விரதம் இல்காட்சி தீமை விரவிய ஒழுக்கம் ஆர்வம்
மருவிய சரிதம் குத்தி சமிதை பன்னிரண்டு சிந்தை
தருமமும் தவமும் தேவர் ஆயுகம் தன்னை ஆக்கும்
விரதசீலங்கள் மிச்சம் விரவினதாலும் ஆமே.

விரதமில்லாத நற்காட்சி, தீமைகலந்த ஞானமற்ற ஒழுக்கம், புலன் இன்பங்களில் ஆர்வம் கொண்டு அவற்றை அடையும் நோக்கில் மேற்கொள்ளும் பூஜை, தபம், விரதம் முதலியவை, அதே நிலையுடைய மனம், சொல், செயல், அடக்கங்கள், ஐவகை சமிதிகள், பன்னிரு சிந்தனைகள், அதே நோக்கில் பத்துவகை தர்மங்கள், தபங்கள் ஆகியவை உயர்ந்த, இடைப்பட்ட, தாழ்ந்த தேவ ஆயுள் வினையை பந்திக்கச் செய்யும், இவை தவிர நற்காட்சி இல்லாத மித்யாத்துவம் கூடிய விரத ஒழுக்கங்களாலும் மேலே கூறிய ஆயுள் வினை பந்திக்கும்.

1343. நற்குணம் பொறாமை தீய கதைகளை நவிலல் நல்ல
சொற்களை உறழ்தல் தூய ஒழுக்கின்மை துயரம் எய்தல்
குற்றத்தால் மனோவாக்கு காயம் கோட்டம் பொல்லாச் சிரிப்பும்
மற்றிவை பழித்தல் நாமம் பிணித்தலுக்கு ஏதுவாமே.

பான்மைமிக்க உயர் பண்புகளைப் பொறுக்காது, தீய கதைகளைக் கூறுவதும், நல்ல கருத்துக்களை விட்டொழிப்பதும், தீய ஒழுக்கங்களைக் கொள்வதும், துயரமடைதலும், விருப்பு வெறுப்பினால் மனம், சொல், செயல் மாறுபடுவதும், தீமை பயக்கும் சிரிப்பும் ஆகிய ஒழுக்கத்தன்மைகள் அசுப நாம கர்மம் பந்திக்கக் காரணங்களாகும்.

1344. தூயகாட்சியும் சுருக்கமில் விநயமும் இறப்பிலா வதம், சீலம்
ஆயநல் உபயோகமும் வேகம் ஆற்றிய தவம் தியாகம்
சாயறிந்து செய்சமாதி வையாவச்சம் ஆவச்சம் தாழ்வின்மை
மாயமில் நெறி விளக்கலும் துளக்கின்றி அறத்து வச்சளத் தாழும்

தூய்மையாகிய நற்காட்சியும், குறைவற்ற விநயமும் அதிசாரங்கள் இல்லாத சீலவிரங்களும் நலமிக்க ஞான உபயோகமும், சம்வேகமும், ஆற்றலுக்கேற்ப தவம், தியாகங்களும், நந்நெறியறிந்து செய்யும் சாது சமாதியும், வையாவிருத்தியும், ஆவச்சமும் ஆகிய இவற்றைத் தளராது செய்யும் பண்பும், வஞ்சனை கலவாத அறப்பிரசாரமும், அறத்தின்பால் தளராத ஆர்வமும்,

1345. அறிவன் ஆகமம் ஆசரியன் பல சுருதிவலாரன் அன்பும்
செறிய நின்றிடும் தீர்த்தகரத்தவம் செய்யும் நற்றிருநாமம்
மருவில் இக்குணம் நல்லநற் குணத்தினில் வையகத்து உயிர்தம்மைக்
குறுகும் நாமங்கள் நல்லவை சாலவும் குணநல்ல வைகளாலே.

அருகபக்தி, பிரவசனபக்தி, ஆசாரியபக்தி, பகுசுருத பக்தி ஆகிய இந்த பதினாறு பாவனைகளால் தீர்த்தங்கர நாம மகா புண்ணிய கர்மம் பந்தமாகும். இப்போது கூறிய குணங்களில் நற்குணங்களினாலே நற்குண பாவனைகளாலே இவ்வுலக உயிர்களுக்கு சுபநாம கர்மங்கள் உயிர்களிடத்தே சேரும்.

1346. பிறர்களைப் பழித்துத்தன்னைப் புகழ்ந்து உடன் பிறர்கண் நின்ற
மறுவிலா குணத்தை மாய்த்துத் தீக்குணம் பரப்பி மாறாய்
நிறைவிலா நீசமாய ஒழுக்கத்தைப் புகழ்ந்து நல்லோர்
நிறையுலா ஒழுக்கம் காய்ந்தார் நீசகோத்திரமதாகும்.

மற்றவர்களைப் பழித்துத் தன்னைப் புகழ்வதும், மற்றவரிடத்துள்ள நல்ல குணங்களைக் கெடுத்து மாறான தீய தன்மைகளைப்பெருக்கி வேறுபட்ட நலம் பயவா கெட்ட ஒழுக்கங்களைப் போற்றிப் புகழ்வதும், பெரியோர்களையும் அவர்தம் நல்லொழுக்கங்களையும் வெறுத்து நிற்பதும் ஆகிய இவை நீசகோத்திர வினைகள் பந்திக்கக் காரணங்களாகும்.

1347. அறைந்த இக்குணத்தின் மாறாய் அறிவனை உள்ளிட்டாரை
இறைஞ்சி நின்றுஒழுகல் தன்னை இழித்தல் பார்த்துண்டல் நல்ல
அறம்புகழ்ந்திடுதல் தன்னைப் பொக்கம் செய்யாமை தம்மால்
பிறந்து உலகு இறைஞ்ச நிற்கும் கோத்திரம் செறியும் என்றான்

கூறப்பட்ட தீயதன்மைகளினின்றும் வேறுபட்டு, அரகந்த சித்தர்களையும், அவர்களைத் தியானிக்கின்ற ஆசாரியர் முதலியோர்களை வணங்கி வழிபட்டு ஒழுகுவதும், தன்னைப் புகழாமலும் மாமுனிவர்கள் ஆகாரத்திற்கு வருவதை எதிர்நோக்கி நின்று, அக்காலம் கடந்தபின் உண்பதும், கொல்லாமை முதலிய அறங்களைப் போற்றுவதும், தன்னை மிகவும் அழகுபடுத்திக்கொள்ள விரும்பாமையும் ஆகிய உயர் ஒழுக்க நெறிகளால் உலகம் வணங்கற்குரிய உயர்ந்த கோத்திர வினையானது பந்திக்கும் என்றான்.

1348. கொலையைக் கோபித்துச் செய்யாக் கொடையினை இடைவிலக்கா
இலையெனில் உவந்து நன்றுஎன்று ஈந்துழிக் காய்ந்து நெஞ்சில்
புலைசுதேன் கள்ளு மேவிப் பிறன் செல்வம் பொறாது வவ்வ
அலைசெய்ய அந்தராயம் ஐந்தும் வந்துஅடையும் என்றான்.

எப்போதும் சினம் பொங்கியவனாய் கொலை முதலிய கொடுமைகளைச் செய்தும், மற்றவர்கள் புரியும் தான தருமங்களைத் தடுத்து நிறுத்தியும் தனது சொல்லைக் கேட்டு மற்றவர்களுக்கு இல்லை என்று ஒருவர் கூறினால், அதுபற்றி மகிழ்ந்தும், மீறி ஒருவன் ஈவானாகில் மிகவும் வெகுண்டும், ஊன், தேன், மது முதலியவற்றை விரும்பி உண்டும், பிறருடைய ஆக்கம் கண்டு பொறாது அதனை அபகரிக்கவும், துன்புறுத்தலும் ஆகிய இவற்றால் ஐவகைப்பட்ட அந்தராயகர்மங்களும் உயிரை பந்திக்கும் என்றான்.

1349. சொன்ன காரணங்கள் பாவ யோகத்தின் படியிற் சொல்லின்
உன்னலாம் படியவல்ல உரைக்கினும் சொற்களாற்றா
என்ன முந்தாற்கணத்துள் யாவரும் இறைஞ்சி ஏத்தித்
துன்னிய வினையை வெல்லத் தொடங்கினார் பலருமன்றே.

சொல்லப்பட்ட இந்தச் சேதனா மனோபாவங்கள் மனம் சொல், செயல்களால் உயிரிடத்துச் சேரும் தன்மைகளை மனத்தினால் நினைத்தலும் இயலா, சொல்லவும் சொற்கள் போதா என்று மேருமந்தர கணதரர்கள் கூறவும், கேட்டுக்கொண்டிருந்த பன்னிரு கணத்தவர்களும், அவர்களை வணங்கித் துதித்து பெரும்போலாரே தங்களைச் சேர்ந்த வினைகளை வெல்லும் முயற்சியை மேற்கொண்டனர்.

1350. ஆயுவும் கரணமும் பொறியும் அக்கதி
வாயுவும் கெடுதலால் மரணம் மற்றவை
போயுழிப் பெறுதலாம் பிறவி போமிடத்து
ஏயும் ஒன்று இரண்டு மூன்றாம் கணங்களே.

அந்ததந்த கதிகளுக்கான ஆயுளும் செயல், சொல், மனமும் மற்ற பொறிகளும் மூச்சும் ஆகிய பிராணன்கள் அழிவது மரணம் எனப்படும். அடுத்து அவை வினையுடன் கூடி உயிருடன் சென்றவிடத்து மீண்டும் தத்தம் நிலைகளைப் பெறுவது பிறப்பு எனப்படும். மரணத்திற்கும் மீண்டும் பிறத்தற்கும் எடுத்துக்கொள்ளப்படும் நேரம் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று சமயங்களாகும்.

1351. உரைத்த இப்பிறப்பு உபபாதம் மூர்ச்சனை
கருப்பமும் ஆம் மும்மை தேவர் நாரகர்க்கு
உரைத்த வற்று உபபாதம் சராயுகம்
கருப்பம் மானவர்க்கு ஆவதாமே.

மேலே கூறிய இப்பிறப்பானது உபபாதம் சம்மூர்ச்சனை, கர்ப்பம் என மூன்று வகைப்படும். இதில் தேவர்கள் நரகர்கள் இவர்களுக்கு உபபாத பிறப்பும், சராயு படலத்துடன் கூடிய கர்ப்பம் மனிதர்களுக்கும் அமையும்.

1352. நம்மில் நுண்ணியவர் நாலறிவு காறுளார்
சம்மூச்சப் பிறவியர் விலங்கில் ஐம்பொறி
விம்மினார் சம்முச்சம் கர்பத்து ஆவதாம்
தம்மிலும் சராயுகம் அண்டம் போதமாம்.

நமது மனிதருள் ஐம்பொறி நிறைவெய்தியரும், ஒன்று முதல் நான்கு பொறி உயிர்களும் சம்மூர்ச்சனா பிறப்பினராவர். விலங்குகளிலும் ஐந்து பொறியின் சிலவும் சம்மூர்ச்சனா பிறப்பினவாகும். மற்றும் சில கர்ப்பங்களில் தோன்றும் அந்த விலங்கு கதிகள் சராயு படலத்துடன் பிறப்பதும், முட்டைகளில் பிறப்பதும், குட்டிகளாகப் பிறப்பதும் அமையும்.

1353. யாவையும் தோல்செவி உடைய சன்னியாம்
தாவரும் துளைச்செவி சன்னி அசன்னியாம்
மேவரும் திருவறம் மேவும் சன்னிகள்
ஓவிலாப் பிறப்பு இவற்றின் யோனி ஒன்பதாம்.

இடையறாது பிறக்கும் இந்த உயிர்களின் பிறப்பிடங்கள் அதாவது யோனி ஸ்தானங்கள் ஒன்பது வகையாகும். இந்த உயிர்களில் தோல் செவியுடையவைகள் அனைத்தும் மனம் உடைய (உபதேசம் ஏற்கும்) உயிர்களாகும். நீக்கற்கரிய துளைக்காதுகளையுடைய உயிர்கள் சில நிறையுயிர்கள் (மனம் உடைய, உபதேசத்தை ஏற்பவை), சில குறை உயிர்களாகும். சஞ்சி ஜீவன்கள் நல்லறத்தை மேற்கொள்ளும் தகுதியுடையவை (பெறாமலும் போகும்).

1354. வினையுயிர் தத்தமில் விடுதல் வீடது
தனகுணம் நீங்கலும் தவியம் சூனியம்
முனையவர் உடனுறல் முதல்வன் அன்றுதான்
அனகனாய்க் குணங்களும் அனந்தம் ஆகுமே.

உயிர்கள் தம்மிடமுள்ள வினைகட்டுகளை நீக்குதல் வீடாகும். இதுகாறும் வினைகள் சேருதற்குக் காரணமான தனது வேறுபட்ட விபாவகுணங்களிலிருந்து நீங்குதலும், அவை மீண்டும் தன்னைச் சேராமல் அவற்றைச் சூனியமாக்கி, தனது தூய தன்மைகளுடன், சித்த நிலை எய்தல் உயிரினுடைய முதன்மையான இயல் குணமாகும். அப்பொழுது தூய உயிரானது தனது முடிவற்ற சுத்த குணங்களுடன் நிலைத்ததாகும்.

1355. ஐம்பத்தைங் கணதரர்க்கு ஆதியாம் கணத்து
ஐம்பத்தைந்து இரட்டி பத்தாம் புவ்வதர்
ஐம்பதின் இரட்டி நாற்பத்தெட்டு ஓதியர்
ஐம்பதின் இரட்டி ஒன்பான் விகுவ்வணர்.

அந்த விமல தீர்த்தங்கரர் தம் கணங்களில் முதன்மையான கணதரர்கள், ஐம்பத்தைந்து பேர். பூர்வதரர் ஆயிரத்து நூறுபேர். அவதிக் ஞானிகள் நான்காயிரத்து எண்ணூறு பேர். விக்கிரியாரித்தியர் தொளாயிரம் பேர் விளங்கினர்.

1356. விலக்கில் சையதர் அறுபத்தெண்ணாயிரம்
இலக்கம் மூன்று எட்டு எட்டாயிரங்கள் சாதவர்
இலக்கம் ஒன்று ஆயிரம் மூன்று காந்தியர்
இலக்கம் நான்கிரண்டு சாவகிய சாவகியர்.

பூரண பான்மையர் அறுபத்தெட்டாயிரம் பேர்களும், மூன்று லட்சத்து அறுபத்து நான்காயிரம் நவசம்யதர்களும், லட்சத்து மூவாயிரம் ஆர்யாங்கனைகளும் சிராவகிகள் நான்கு லட்சமும், இரண்டு லட்சம் சிராவகர்களும் இருந்தனர்.

1357. இனையவாம் விமலனார் கணத்து நாதராய்
வினையெலாம் அறஎறி வேத நான்கினை
மனை துறவாணருக்கு ஓதி மற்றவர்
வினைகள் மேல் நினைவுறீஇ விவித்தம் மேவினார்

விமலதீர்த்தங்கரருக்கு இவ்வாறு அமைந்த பன்னிரு கணங்களில், மேருமந்தரர் முதன்மை பெற்று முக்கியமானவர்களாய் வினைகளையெல்லாம் ஒழித்தற்குரிய நான்கு அனுயோகங்களாய் அமைந்த ஆகமங்களைப் பான்மையாளர்களுக்கும் துறவிகளுக்கும் உபதேசித்து பிறகு தங்களது வினைகளை அடியோடு நீக்க மனங்கொண்டு பன்னிரு கணங்களை விட்டுப் பிரிந்து தனியான இடத்தை அடைந்தனர்.

1358. இனத்திடை பிரிந்து போம் ஏறு இரண்டுபோல்
கணத்திடை பிரிந்துபோய் கானம் மேவிய
வனத்திடைப் பெருவரை உச்சி மன்னினார்
நினைப்பினைத் தன்கணே நிறுத்தி நின்றரோ.

தனது கூட்டத்தை விட்டுப் பிரிந்து செல்லும் இரண்டு எருதுகளைப் போல், பன்னிரு கணங்களை விட்டு நீங்கிச் சென்று ஒரு அடர் வனத்தில் தனது ஆத்மனிடத்தே தியானத்தைப் பொருந்தி நின்று பிறகு மிகஉயர்ந்த ஒரு மலை உச்சியை அடைந்தனர்.

1359. வரைப்பினும் குளிர்ப்பைச் செய் மரத்தின் நீழலும்
அரைப்பினும் சீதமாம் சந்தம் போலவும்
நிரைத்து நின்று இனாத செய்தவர்க்கும் இன்பமாம்
உரைக்கண் நின்று உத்தமப் பொறை யோடு ஓம்பினார்

தன்னை அறுப்பவனுக்கும் குளிர்நிழலைத் தரும் மரத்தைப் போலவும், தேய்த்து அரைத்த போதும் குளிர்ந்த குழம்பைத் தரும் சந்தனக் கட்டை போலவும், தொடர்ந்து துன்பங்களைச் செய்பவர்களுக்கும் அவர்கள் பயனடையுமாறு அறமுரைக்கும் தன்மையுடன் உத்தமப்பொறை என்னும் தருமத்தை ஏற்று அதற்குக்குறை நேராது போற்றினர்.

1360. மார்த்தவத்தால் வளைந்து ஆருயிர்க்கெலாம்
பார்த்து அறம் பகர்ந்து உளம் பஞ்சின் மெல்லியர்
ஆர்ச்சவத்து அகம் புறம் மணி விளக்கது ஒத்து
ஊர்த்தமாய் ஒருவகை ஒழுகு நீரரே.

உத்தம அமைதித் தன்மையும், பணிவுமுடையவர்களாய் உலக உயிர்கள் அனைத்தையும் சமமாக மதித்து, பான்மையாளர்களுக்கு நல்லறம் அருளி, பஞ்சைக்காட்டிலும் மென்மையான மனமுடையவர்களாய் உள்ளும், புறமும் ரத்தின விளக்கைப் போல் விளங்கி, கபடமற்ற மேன்மைத் தன்மையுடன் ஒழுகும் பண்புடையராயினர்.

1361. ஆர்வமும் செற்றமும் மயக்கம் இன்மையால்
ஆருயிர்க்கு உறுதி அல்லாத சொல் இலார்
ஓர்விடத்து ஒருவிய புலத்தின்மீட்டு உளம்
சோர்விடத்தும் செலர் தூயராயினர்.

பற்று, பகை, மயக்கம் ஆகியவை இவர்கட்கு இன்மையால் நிறைந்த பான்மையாளர்களுக்கு உறுதி தராத எந்த ஒரு சொல்லையும் உரையாத சத்திய தர்மத்தைப் பொருந்தி, ஒதுக்கப்பட்ட பயனற்ற புலன் இன்பங்களின்பால் சோர்வு நேர்ந்த காலத்தும் மனம் செல்லாத உறுதித் தன்மையான உத்தமத்தூய்மை என்னும் தர்மத்தைப் பொருந்தி நின்றார்கள்.

1362. அறுவகைப் பொறிவழி படர்ச்சி நீங்கியும்
அறுவகைக் காயத்தை அருளின் ஓம்பியும்
செறிதவம் பன்னிரண்டில் செலாப் பினைத்
துறவுமெய்த் தியாகமும் துன்னினார்களே.

மனம் உள்ளிட்ட அறுவகைப் பொறி நுகர்ச்சிகளில் ஈடுபாட்டினைத் தடுத்து நீக்கியும், அறுவகைப் பிறப்புயிர்களை அருளுடன் உபசரித்தும், தாம் மேற்கொண்டுள்ள அகப்புறத்தவங்கள் பன்னிரண்டையும் இறப்பின்றி ஏற்றும், எதிலும் பற்றின்றி துறந்து நிற்கும் உத்தம ஆகிஞ்சன்யம் என்னும் தர்மத்தில் பொருந்தியும் பான்மையாளர்களுக்குப் பரமாகமங்களை விளக்கியருளும் சாஸ்திர தானமாகிய உத்தமத் தியாகத்தையும் பொருந்தினார்கள்.

1363. மாதரைப் புகழ்தல் பார்த்தல் மற்றுஅவர் அட்டதென்றால்
ஆதரித்து உண்டல் புக்கவவ்வகத் துறைதல் அஞ்சொல்
மேதகக் கேட்டல் மேவிச் சிரித்திடல் விழைவு நோக்கல்
ஏதமின்று இவற்றின் நீங்கி இலங்கும் உள்ளத்தரானார்.

பெண்களை விருப்புடன் நோக்கிப் புகழ்தலும், அவர்கள் சமைத்தது என்றால் ஆர்வத்துடன் உண்பதும், அவர்கள் இருக்கும் இல்லத்தில் தங்கியிருத்தலும், அவர்தம் இனிய பேச்சினை விரும்பிக் கேட்பதும், அவர்களுடன் நகைச்சுவையாக உரையாடலும், அவர்கள் விருப்பத்தை மனம் செலுத்தாது ஒதுங்கி குற்றமற்று விளங்கும் உத்தம பிரம்மசரிய தர்மத்தை உறுதியாக மேற்கொண்டார்.

1364. முன் நுகத்தளவு நோக்கி முன்புபின் பிரியச் செல்லார்
இன் சொலும் பிறர்தமக்கு மிதத்தன அன்றிச் சொல்லார்
அன்பு நீத்து உயிரை ஓம்பி அளவு அமைந்து உண்பர் யார்க்கும்
துன்புறக் கோடல் வைத்தல் மலங்களைத் துறத்தல் செய்யார்

அவர்கள் செல்லுங்கால் முன்னும் பின்னும் நுகத்தளவு கூர்ந்து நோக்கி எத்தகைய உயிர்களும் துன்புறுமாறு செல்லமாட்டார்கள். இனிய மொழிகளையும் அளவோடு குறைத்தே பேசுவர். அனைத்து உயிர்களிடத்தும் விருப்பு வெறுப்பின்றி ஓம்புவர். மிகக் குறைந்த உணவையே ஏற்பர். தங்களுடைய மிகக்குறைந்த பொருள்களையும் மற்றவர்க்கு ஊறுநேராவண்ணம் வைத்து எடுப்பர். சிறுநீர் மலம் கழிப்பதிலும் கவனமாக இருப்பர். (பஞ்ச சமிதனைப் பொருந்தினர்)

1365. இருத்தலே கிடத்தல் நிற்றல் இயங்குதல் முடக்கல் நீட்டல்
திருத்தி எவ்வுயிர்க்கும் தீமை செறிந்திடாது ஒழுக்கம் ஓம்பி
உரைத்த உயிர்க்கு உறுதிமார்க்கம் ஓம்புவ கொடுப்பிற்
பரித்தக பாவைமாரைப் பற்று அறத்துறத்திட்டாரே.

உட்காரும் போதும், படுக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், கைகால்களை மடக்கி நீட்டும் நேரங்களிலும் மற்ற எந்த ஒரு உயிர்க்கும் தொல்லை நேராது கவனித்துப் போற்றுவர் (காயகுப்தி), பான்மையாளர்க்கு உறுதி தரும் உயர் நெறியை உரைப்பதன்றி வேறு பேசார் (வாக்குப்தி), தனது உயிர் ஒழுக்கத்துக்குத் துணையாக மேலோர் அளிக்கும் ஆகாரத்தை ஏற்பர். இருபத்திரண்டு விரமான 'தொல்லைகள்' என்னும் பாவைமார்களை வெறுத்து நீக்கினார்கள் (மனகுப்தி).

1366. நன்மை தீமைக்கண் ஒத்து நாதன் தன் பாதம் ஓம்பித்
தன்மைக்கண், நின்றார் தம்மைத் தம்பிழைப்பின் மீண்டு
பின்னைத்தம்பால் வந்து எய்தும் பிழைப்பைமுன் மறுத்துக்காயம்
தன்னைத் தாம்விட்டு நின்றார் தடவரைச் சூளி ஒத்தார்.

நன்மை தீமைகளைச் சமமாக எண்ணியும் மூவுலக நாதனாகிய இறைவனின் திருவடிகளைப் போற்றியும், உள்ளும் புறமும் ஒத்து ஒழுகும் பஞ்சபரமேட்டிகளை வணங்கியும், தங்களுடைய சிறு பிழைகளினின்று நீங்கியும் அது போன்ற பிழைகள் நேராமலும் விதிவயத்தால் நேரின் அதற்கான பிராயசித்தம் புரிந்தும் தங்களது உடம்பும் விடத்தக்கதே என்று சிந்தித்தும் ஒழுகிய அவர்கள் மிகப்பெரிய மலைச்சிகரங்களுக்கு ஒப்பாகி ஒழுகினார்கள்.

1367. ஆதப யோகம் தாங்கி அருந்தவர் நின்ற போழ்தில்
பாதவம் போது கொண்டு பணிந்தன பனியைச் சேரச்
சீதபங்கயங்கள் கூம்ப விரிந்த செங்கமலம் சிந்தை
மாதவர் மரத்தைச் சேர மகிழ்ந்து வான்பொழிந்தவன்றே.

ஆதப யோகத்தை மேற்கொண்ட அவர்கள் கோடை காலத்தே மலைமேல் நின்றபோது மரங்கள் தங்கள் மலர்களைத் தூவி வணங்கின. பனி பொழியும் காலத்தில் கடற்கரையோரத்தில் நின்றபோது தாமரை மலர்களில் கூம்பிக்கிடக்க இவர்தம் மனமாகிய செந்தாமரை மலர்கள் மலர்ந்தன. மாமுனிவர்களாகிய இவர்கள் மழைகாலத்தே மரத்தடியில் சேர்ந்து தவத்தில் நிற்க அதற்கு மகிழ்ந்த வானம் மழையைப் பொழிந்து அபிஷேகம் செய்தது. (இவ்வாறு முக்காலத்தும் தளரா யோகத்தில் நின்றனர்.)

1368. கூகை பேய் கவந்தம் ஓரி டாகினி குலவும் காடு
நாக மாநாகம் சீயம் உழுவை சேர் மலை முழஞ்சு
ஏகமாய் வேகமேவி இராசமா சீயம் போல
யோகமே போகமாக உவந்து அவர் உறைந்து சென்றார்.

கோட்டான்கள், பேய்கள், தலையற்ற முண்டங்கள், நரிகள், பூதங்கள், பரந்து கிடக்கும் சுடுகாடுகளிலும் நாகங்களும், பெரும் பாம்புகளும், சிங்கங்களும், புலிகளும் வசிக்கும் மலைக்குகைகளிலும் தனித்திருந்து தளரா சிந்தையுடன் ஆத்ம தியானத்தில் பொருந்தி இருத்தலே உவப்பானது என்ற சிந்தையுடன் ஒப்பற்ற அரியேறுபோல மிக்க மகிழ்ச்சியுடன் நலமாக உயர்நெறியில் சென்றார்கள்.

1369. இருது நல்அயனம் ஆண்டை எல்லை செய்து இருந்து நின்று
மரீஇய முக்கால யோகம் வழங்கு மார்க்கத்தை விட்டுத்
திரிவித கரணம் தம்மைச் செறிய வைத்து அறிவை ஊன்றிப்
பொருவிலார் சிந்தை யோகம் தன்னையே பொருந்தினாரே.

இரண்டு மாதங்கள், நலமிக்க ஆறுமாதங்கள் ஒரு ஆண்டு எனகாலவரையறை செய்து தளராது யோகத்தில் உறுதியாக நின்று, கோடை, மழை, பனி என்னும் மூன்று கால யோகத்தை விட்டு நீங்கி, மன, வசன, காயங்களை ஆன்ம தியானத்தில் ஒருமுகப்படுத்தி, நிச்சய காட்சியை உறுதிப்படுத்தி ஒப்பற்ற பான்மையில் உயர்ந்து நின்ற இருவரும் அந்தக் கரணங்களை (மனம், வசனம், காயம்) ஒன்றுபடுத்தி நிறுத்தலைப் பொருந்தினார்கள்.

1370. உடம்பு உயிர் உறைவாள் நேர் என்று உடம்பை விட்டு உயிரைப்பார்த்து அங்கு
கடுந்துயர் வினைகள் அவ்வாள் உருக்கொடு நெருப்பு உயிர்கட்கு
கெடும் பரியாயம் அவ்வாள் கிட்டமாம் என்றவற்றைக்
கடந்த தம் வடிவைக் காளம் கழன்ற பொன் போலக் கண்டார்.

உடலும், உயிரும் உறையும் வாளும் போல் வேறு வேறானவை என்று உடலின் தன்மைகளை யுணர்ந்து அது பற்றிய சிந்தனையை ஒழித்து, உயிரின் குணங்களைப் பற்றியே சிந்தித்து உயிருக்குத் துன்பந்தரும் உடல் முதலாகிய வினைகளின் வேறுபாட்டினை உயிராகிய வாளிடத்தே பற்றிக் கிடக்கும் உருவமாகிய களிம்பாகும், அதே உயிரிடத்தே உதிக்கும் சுக்கில தியானமென்னும் நெருப்பினால் அக்களிம்பு நீங்கிவிடும் என்று தியானித்து வினைகளை நீக்கி, அவ்வாறு நீக்கியபின் தூய நிலை பெற்ற உயிரினை மாசு மறுவற்ற பொன்னைப் போல தமது தூய காட்சியால் கண்டனர்.

1371. மதிசுதம் அவதியாம் ஆவரணத்தில் அறிவு மற்ற
விதியறக்கெட ஒன்றாகி அனந்தமாய் விரியும் காட்சி
பொதுவினால் அறிவின்முன்பு புலத்தைக் கொண்டு அனேகமாய்த்தன்
விதியறக் கெட ஒன்றாகி விரியுமாறு உன்னினாரே.

மதி, சுருதி, அவதி ஆகிய ஞானங்களின் மறைப்பினாலும் மற்றும் மனப்பரிய கேவல ஞானங்களின் மறைப்பினாலும் கட்டிய வினைகள் அனைத்தும் ஒருங்கே ஒழிந்தவுடன் இணையற்றதும் முடிவற்றதுமாக விரியும் மிகப்பரந்த காட்சியானது பொதுவாக ஞான குணத்துக்கு முன்னே, பொறியின்பங்களினால் பல்வேறு காட்சிகளை மறைத்திருந்த தர்சனா வரணீயங்கள் முழுதும் கெடவும், இணையற்ற கடையிலா காட்சி ஞானபலத்தினால் ஆன்ம இன்பத்திலே பொருந்தினர்.

1372. சுகதுக்க மோகமாகிச் சுழலும் சேதன சுகத்தைத்
தகைவைச் செய் அந்தராயம் தம்மொடு மோகம் நீங்க
முகைவிட்ட நாற்றம் போல முழுதும் வந்து எழுந்து அனந்த
சுகமற்றது ஆகும் என்று துளக்கற நினைந்து நின்றார்.

பொறிகள் தொடர்பற்ற தூய ஆன்ம ஞானமயமான இன்பத்தை நிலையற்ற பொறி இன்பமும் துயரமும், மயக்கமும் சேர்ந்து தடுத்து தடைசெய்யும் ஐவகைப்பட்ட அந்தராய வினைகளுடன் பல்வேறுபட்ட தரிசன, சாரித்திரத்திற்கு எதிரான மோகனீய வினைகளும் நீங்க, அவிழும் அரும்பிலிருந்து வெளிவரும் நறுமணம் போல் ஆன்மாவின் இயல்புத்தன்மைகள் அனைத்தும் வெளிப்பட்டு கடையிலா இன்பம் அமையுமென்று சற்றும் சலனமின்றி நின்றார்கள்.

1373. வீரிய அந்தராயம் நீங்க விகலத்தின் நீங்கி வீரம்
காரியம் கடையிலாது கணத்திலே முடித்து அளந்து
மூரிமூவுலகம் தன்னை ஏந்தலும் ஆகும் ஆற்றல்
வீரியம் ஆகும் என்று இவ்விதஉளி நினைந்திட்டாரே.

பிறகு, வீரிய அந்தராய வினையானது விலகியதும் குறையின்றி ஒருகணத்திலே பலமிக்க மூவுலகத்தையும் அளந்தறியும் தன்மைபெற்ற கடையிலா வீரியம் அமையும் என்று, அதற்கான முறையினையும் பொருந்தினார்கள்.

1374. உருவமும் ஒலியும் ஊறும் நாற்றமும் சுவையும் இன்றாய்த்
தெருவரு நுண்மைத்தாகி நொற்பமும் சிறப்பும் இன்றாய்
மருவிய வினைகள் எட்டும் மாய்ந்த அக்கணத்துச் சென்று
திரிதர உலகத்துச்சி நிற்றலும் சிந்தித்தாரே.

அநாதி காலமாக உயிரிடத்திலே பொருந்திக் கிடந்த வினைகள் எட்டும் அடியோடு ஒழிந்த அக்கணமே, உருவம், ஒலி, ஊறு, மணம், சுவை இவை எதுவுமின்றி இந்திரியங்களால் அறிதற்கரிய மிக நுட்பமாகி பளுவற்று மேல் நோக்கி எழும் தன்மையினால் சென்று, மீண்டும் திரும்பி வராத உலகமாகிய சித்த உலகத்தில் நிலைத்து நிற்கின்ற தன்மையினையும் தியானித்தார்கள்.

1375. குண குணி நிலைமையும் குணங்கள் நிற்றலும்
மனமுடை மற்றவர் தத்தம் சிந்தியா
அணவரும் பமாதம் விட்டு அப்பமத்தராய்
இணையிலா சேணிமேல் ஏறினார்களே.

உயிர் முதலாகிய பொருள்களின் தன்மைகள், குணங்கள் ஒன்றுசேர்த்துள்ள திரவியங்கள் நிலையினையும், அவற்றின் பொது, சிறப்புத் தன்மைகளையும், நிச்சய விவகார நிலைகளையும், நிலைத் தன்மைகளையும் சுருத ஞான பலமுடைய அவ்விருவரும் நன்கு சிந்தித்து, நெருங்குதற்கரிய பதினைந்து வகைப் பிரமாதங்களை நீக்கி, அப்பிரமத்த குணநிலையிலே இருந்து 'சபக சிரேணி' என்னும் குணநிலை முறையிலே முறையாக முன்னேறினர்.

1376. வினைகள் ஏழ் விரகினால் வீழ்ந்த அக்கணம்
முனிவர் புவ்வாணி நன் முனிவர் ஆயினார்
வினையெலாம் நிலை தளர்ந்திட்டு உதிர்ச்சிகள்
தனை அடைந்திட்ட நால் வகையினால் பினை.

அந்த அப்பிரமத்த நிலையில் நின்று சபகசிரேணியில் ஏறிய அதே கணத்தில், காட்சிமயக்கு வினைகளாகிய ஏழு வினைகளும் ஒழிந்தன. அவர்களிருவரும் அபூர்வகரணம் என்னும் அடுத்த நிலையை அடைந்தனர். அந்நிலையில் எஞ்சிய வினைகள் தத்தம் கட்டு குலைந்து நால்வகை உதிர்ச்சி நிலையெய்தின, அதனை அடுத்து,

1377. நின்றுழி நிலாத சுக்கிலத் தியானத்தோடு
அன்று அவர் அணியாட்டி முனிவராயினார்
சென்றன சிலபல கணங்கள் சென்றபின்
வென்றனர் வினைகள் ஈறெட்டை வீரரே.

ஒருகணம்கூட ஒருநிலையில் நில்லாத வெவ்வேறு வளர்ச்சி எய்தும் சுக்கிலத் தியானத்துடன் கூடி, அம் மாமுனிவர்கள் இருவரும் 'அனியட்டகரணம்' அனிவ்ருத்திகரணம் என்னும் நிலையை அடைந்தனர். அடுத்த பல கணங்கள் சென்றன. அதன்பின் அந்த நிலையின் கடைசி சமயத்தில் பதினாறு வினைகளை வென்று ஒழித்தனர்.

1378. தீக்கதி இரண்டு அவற்று அப்புவிகள் நான்கு சாதி
யாக்கையின் நிற்றல் நுட்பம் பொது வெயில் விளக்கு இவற்றை
ஆக்கும் அந்நாமம் காட்சி யாவரணம் தியானத்தீட்டி
நீக்கரும் பசலை நித்தை ஆகும் ஈரெட்டை நீத்தார்.

அவர்கள் எவ்வாறு ஜெயித்தார்கள் எனின் நரககதி விலங்குகதி எனும் இரண்டு, நரககத்யானுபூர்வி, விலங்குகத்யானு பூர்வி என்னும் இரண்டு, ஒன்று முதல் நான்கு பொறி உயிர் ஆகிய நான்கு, தாவரம், நுட்பம், பொது உடம்பின் வெயில், விளக்கு இவைகளை உருவாக்கும் பதின்மூன்று நாமகர்மங்கள், மற்றும் ஸ்தான கிரந்தி, பிரசலா பிரசலை நத்ரா நித்திரை இவை சேர்ந்து பதினாறு வினைகளை வென்றனர்.

1379. வெகுளியே மானம் மாயம் உலோபமாம் மிக்க நான்கு
பகடி அப்பச்ச பச்சக் கணத்ததாம் எட்டை நீத்து
முகடுற எழுந்த சிந்தை முறுக்கிப் பின் உருகக்கழல் போல்
தொகையுடைப் பேடிவேதம் தன்னையும் உடைத்திட்டு இப்பால்

மிகக்குரோதம், மானம், மாயம், லோபம் என்னும் நான்கு வகை வினை மூலங்கள், அப்பிரத்தியாக்கியான, பிரத்தியாக்கியான கணத்தினால் ஆகும் எண்வகை வினைகளையும் நீக்கி, பெருமையுடன் எழுந்த முதல் சுக்கிலத்தியானத்தை மேலும் உறுதியாக்கி அடுத்த சில கணங்களில் கொல்லன் உலையில் இரும்பை உருக்கும் நெருப்பைப்போல் சேர்ந்திருக்கும் நபும்சக வேதம் என்னும் வினையையும் கெடுத்து அதன்பின்,

1380. முட்டைத்தீப் போல வெம்பும் மொய்குழலார் தம்வேதம்
கெட்டபின் இரதி ஆச்சம் பயம் உவர்ப்பு அரதி சோகம்
விட்ட அப்பொழுது வைத்தீப்போல் எழும் புங்க வேதம்
அட்டு அவர் வேதம் நீத்த அணியட்டி முனிவரானார்.

எருமுட்டையின் நெருப்பைப் போல் வெதும்புகின்ற ஸ்திரி வேதம் என்னும் வினையானது அழிந்தபின் இரதி, ஹாஸ்யம், பயம், உவர்ப்பு, அரதி, சோகம் என்னும் அறுவகை வினைகள் நீங்கின, அப்பொழுது வைக்கோல் நெருப்பைப் போல் எழும்புகின்ற புருடவேதம் என்னும் வினையையும் வென்று ஒன்பது வகையான நோகர்மங்களையும் வென்று அவ்விரு முனிவர்களும் 'அனிவிருத்திகரணம்' என்னும் குண நிலையை எய்தினர்.

1381. நல்லவாம் சலன கோதம் மானம் மாயம் உலோபம் தம்மை
சொல்லிய முறையின் மூன்று தானத்தில் துவக்கறுத்துப்
புல்லிதாம் உலோபம் தன்னை வீழ்ந்து அந்த மூழ்த்தத்தின்பின்
எல்லையில் சுத்தி பெற்றார் இருபத்தெண் மோகம் நீத்து.

அதை அடுத்து மிக மெல்லிய சஞ்சுவலன குரோதம், மானம், மாயம், உலோபம் என்னும் நான்கு வினைகளையும் வரிசை முறைப்படி ஒன்றன் பின் ஒன்றாக மூன்று கணத்தில் முதல் மூன்றினையும் ஒழித்து, அடுத்த குணநிலையாகிய சூட்சும சாம்பராயத்தில் அந்த முகூர்த்தத்தின் முடிவில் சஞ்சுவலன லோபமாகிய வினையை வென்று பின்பு இருபத்தெட்டு மோகனீய வினைகளையும் தீர்த்துக் கட்டி எல்லையற்ற தூய ஆன்ம பரிணாமத்தை எய்தினார்கள்.

1382. வெம்பிய வினைக்கு மூலமாகும் மோகத்தை வீழ்த்ததர்
அம்பரப்படிகம் செம்பஞ்சு அடுத்து விட்டு அதனை ஒத்தார்
உம்பர் ஒன்றாகும் சிந்தை உடனின்றோர் மூழ்த்தத்து ஈற்றின்
முன்பினாங் கணத்து நித்தை பசலைகள் முறியச் சென்றார்.

மிகக்கொடிய வினைகளுக்கெல்லாம் முதற்காரணமாக இருக்கும் பலவகைப்பட்ட மோகனீய கர்மங்களை ஒழித்தனர், விண்படிகத்தில் செம்பஞ்சு சேர்ந்திருந்தாற்போல் நிலையான தூய சிந்தனை உடையவர்களாய், ஏகத்துவ விதர்க்க வீசார மென்னும் இரண்டாம் சுக்கில த்யானத்துடன் க்ஷீண கஷாய குண நிலையில் நின்று ஒரு முகூர்த்தத்திற்குள் கடைசி இரண்டு கணங்களில், முதுல் கணத்தில் நித்திரை, பிரசலை என்னும் இரு வினைகள் ஒழிய நின்றனர்.

1383. ஒருகணம் கடந்தபோது ஒருநால்வர் கன்மர் கூடிப்
பொருகிற வேளை தன்னில் போதி ஆவரணம் ஐந்தும்
மருவிநின்று எதிர்த்த காலத்து அந்தராயம் தான் ஐந்தும்
திருகி ஈரெழுவர் அந்தக் கணத்திலே தீர்ந்தார் அன்றே.

அந்த க்ஷீணகஷாய குணத்தானத்தின் ஈற்றில் மேலே கூறிய ஒரு வினைகளும் வீழ்ந்தவுடன் கடைசி கணத்தில், சட்சு, அசட்சு, அவதி, கேவலம் என்னும் நான்கு தரிசனா வரணீய வினைகளும் ஒன்றுகூடி தாக்கும்போது அவற்றுடன் மதி, சுருதி, அவதி, மனப்பரியம், கேவலம் என்னும் ஐந்து ஞானாவரணீய வினைகளும் ஒன்று சேர்ந்து தாக்கவும், மேலும் அவற்றுடன் ஐந்து அந்தராய வினைகளும் கூடிப்பொருந்தின. ஆனால் அந்தப் பதினான்கு வினைகளும் க்ஷீணகஷாய குணத்தானத்தின் கடைசி கணத்தில் ஒருங்கே தீர்ந்து போனார்கள்.

1384. மாலைவாய் இருளை நீக்கி வையத்தைத் துயில் எழுப்பும்
காலைவாய் அருக்கன் போலக் காதிகள் நான்கும் நீங்க
மேலெலாம் உறங்கும் நான்மை விழித்து உலகனைத்தும் காண
மால்இலா மனத்துச் சிந்தை அருக்கன் அது உதித்தது அன்றே

இரவைப் போக்கி உலக உயிர்களை விழிப்புறச் செய்யும் காலைக்கதிரவனைப் போல், உயிரெங்கும் கலந்து நின்ற காதி வினைகள் நான்கும் அடியோடு ஒழிய அனந்த நான்மைகள் நான்கும் ஒளிவீச உலகம் முழுதும், முடிவற்ற காட்சியினால் காணுமாறு மயக்கமற்ற மாசற்ற மனத்தகத்தே சுக்கில தியானத்தினால் வாலறிவென்னும் கதிரவன் உதித்து ஒளி வீசினான்.

1385. உள் எழும் தீயினால் வெந்து ஒளிபெற்ற விளக்கைப்போல
வெள்ளை அத்தியானம் தன்னால் வெந்து எரிஉமிழும் மேனி
பள்ளிகொண்டிடுதல் மூத்தல் பசித்தல் நோய் வேட்கை இன்றிப்
பிள்ளை ஆதித்தன் போல பிறப்புஇருள் தீர்த்து இருந்தான்.

உள்ளே பற்றிப் பரந்த நெருப்பினால் வெந்து ஒளி வீசும் விறகைப்போல, சுக்கிலத் தியானம் என்னும் நெருப்பினால் வினைகள் வெந்து உயிர் ஒளிபெற்று விளங்க, உடலானது, படுத்தல், மூத்தல், பசித்தல் நோய்கள், ஆசை இவை எதுவும் இல்லாமல் இளஞ்சூரியன்போல் பிறவியாகிய இருளைப்போக்கி, குறையற்ற தூயர்களாய் நின்றனர்.

1386. பயம் பகை பணித்தல் ஆர்வம் செற்றமே கவர்ச்சி சோகம்
வியந்திடல் வெகுளி சோபம் வேர்த்திடல் விரும்பல் கேதம்
மயங்குதல் தெளிதல் சிந்தை வருந்துதல் களித்தல் மாயம்
இயம்பரும் திறத்த இன்ன யாவையும் எறிந்து இருத்தார்.

மேலும் அச்சம், பகை, ஏவுதல், அன்பு, செற்றம், ஈர்த்தல், அன்பு, சோர்வு, வியப்பு, சினம், அழகுபெறல், வியர்த்தல், விரும்புதல், துக்கம், கலக்கம், ஆய்தல், துயரம், மகிழ்ச்சி, வஞ்சம் இத்தகு உரைத்தற்கரிய அனைத்து மாறுபட்ட தன்மைகளையும் ஒழித்து நின்றார்கள்.

1387. ஆயிடை அமரர் தங்கள் முடியொடு ஆசனம் துளங்க
பாயநல் அவதிஎன்னும் பகுதியால் கண்டது எல்லாம்
ஆயிரம் கண்ணினானை அதிபதியாகச் சூழ்ந்து
மாயிரும் விசும்பும் மண்ணும் மறைய வானவர்கள் வந்தார்.

அதே சமயத்தில் நால்வகை தேவர்களின் முடிகளும், இருக்கைகளும் சலித்தன. உடனே தங்களுக்குள்ள அவதி ஞானம் என்னும் ஒளியால் அனைத்தையும் அறிந்தனர். அக்கணமே ஆயிரம் கண்களுடைய சௌதர்மேந்திரனைத் தலைவனாகக் கொண்டு திரண்டு சூழ்ந்து மிகப்பெரிய ஆகாயமும் மண்ணுலகும் மறையும் வண்ணம் இந்திராதி தேவர்கள் அனைவரும் வந்து சேர்ந்தனர்.

1388. முழங்கின முரசம் எங்கும் முரன்றன சங்கம் முன்னே
எழுந்தனர் ஏறுசீயம் யானை மாஏறி விண்ணோர்
விழுந்த பூமாரி விண்ணை விழுங்கின பதாகை வெள்ளம்
எழுந்த ஏத்தரவம் கீர்த்தி இயம்பின காளம் எங்கும்

அவர்கள் எவ்வாறு வந்தனரெனில், முரசுகள் எங்கும் முழங்கின, சங்குகளும் ஒலித்தன. அமரர்கள் தத்தமக்குரிய, எருது, சிங்கம், யானை, குதிரை, ஆகிய ஊர்திகளில் அமர்ந்து கிளம்பினர். மலர் மழை பொழிந்தது. பலவகைக் கொடிகளின் நெருக்கத்தால் விண்ணும் மறைந்தது. இறைவனைப் போற்றும் புகழொலி எங்கும் பரவியது. சிறு சின்னங்கள் இயம்பின.

1389. அரம்பையர் நடம் புரிந்தார் அம்பரம் அரங்கமாக
நரம்பொலி பொலிந்த எங்கும் நண்ணினால் மண்ணை விண்ணோர்
கரங்களும் குவிந்த கண்ணீர் பொழிந்தன காதி நான்மை
உரம் கடிந்து இருந்து வீரர் உறுதுணை அடி பணிந்தார்.

ஆகாயத்தையே மேடையாகக்கொண்டு தேவமாதர்கள் ஆடினர். வீணை முதலிய நரம்புக் கருவிகள் எங்கும் இசைத்தன. அமரர்கள் மண்ணுலகைச் சேர்ந்தார்கள். அவர்தம் கரங்கள் குவிந்தன. கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. நால்வகை காதி வினைகளின் வலிமையை ஒழித்து வென்ற அந்தக் கடையிலா வீரம் பெற்ற கேவலிகளின் பெருமைமிக்க அடிகளை வணங்கினார்கள்.

1390. பிண்டியும் குடையும் சீய அணையும் சாமரையும் மற்றும்
அண்டவர்க்கும் இறை அமைத்தான் அன்னவர்க்கு உரிய ஆற்றால்
உண்டு அற அமிர்தம் வந்து ஈங்கு உண்மின் என்று ஒலித்த ஊழி
கண்டவர் கழலை வாழ்த்திக் காமக் கோடணைகள் நின்ற

அசோக மரமும், ஒற்றை வெண்குடையும், அரியணையும், வெண்கவரிகளும் மற்றும் பூமழை, துந்துபி முதலியவைகளையும் அந்த அனகார கேவலிகளுக்கு ஏற்ற வகையில் அமரர்களின் அதிபதியாகிய சௌதர்மேந்திரன் இயற்றினான். அடுத்து இவ்விடத்திலே அற அமுதமானது இருக்கின்றது. பான்மையாளர்களே வந்து பயன்பெருங்கள் என திவ்யத் தொனி ஒலித்தது. அநாதி வினைகளை வென்று ஆன்மாவின் உண்மை ஸ்வரூபத்தைக் கண்டு கடையிலா அறிவு காட்சிகளையுடைய இவர்தம் அடிகளை வாழ்த்தி அழகிய ஜயகோஷம் இடையறாது எழுந்தது.

1391. மந்தரம் இரண்டைச் சூழ்ந்த தாதகி மலைகள் போல
இந்திரர் விஞ்சைவேந்தர் மண்ணவர் ஏனையோர்கள்
சுந்தர மலரும் சாந்தும் தூபமும் ஏந்தி மேரு
மந்தர நாமர் பாதம் பணிந்து வாழ்த்தோடு எழுந்தார்.

தாதகி கண்டத்தில் இருக்கும் இரண்டு மேருமலைகளைத் தனித்தனியே சூழ்ந்திருக்கும் குலமலைகளைப் போல, இந்திரர்களும், விஞ்சை வேந்தர்களும், மண்ணுலக மன்னர்களும் மற்றுமுள்ள பான்மையாளர்களும் அழகிய மலர்கள், சந்தனம், தூப தீபங்கள் முதலியவற்றை ஏந்தி மேருமந்தரர்களைச் சூழ்ந்து அவர்தம் அடிகளைப் பணிந்து வாழ்த்தி நின்றனர்.

1392. வெருவுறு துயரொடு விழவெழு துயரும்
கருவுறு துயரொடு கடைவரு துயரும்
மருவிய உயிர்வினை மறுவற அருளும்
பொருவரு திருவடி புகழ்தர அடைதும்

நின்ற அனைவரும் துதிக்கத் தொடங்கினர். இயல்பாகவே எப்போதும் அஞ்சத்தக்க பயத்தோடு கூடிய விலங்கு கதி துன்பம், இடையறாது எழும்பித் தலைகீழாக விழும் நரக கதி துன்பம், கர்ப்பத்தில் தோன்றும் மனித கதி துன்பம், இறுதி காலத்தில் எய்தும் மிகக் கடுமையான தேவகதி துன்பம் ஆகிய இந்நான்கு கதி துன்பங்களுக்கும் ஏதுவாகிய வினைகள் என்னும் களங்கம் அறவே நீங்கும் வண்ணம் திருமொழியால் அறவுரை செய்யும் உவமையற்ற உங்களுடைய அழகிய அடிகளை நாங்கள் புகழடையுமாறு அடைக்கலமாக அடைகின்றோம்.

1393. பருதியின் ஒளி வெல பகை பசி பிணிகெட
வருவன மலர்மிசை மதனனை நலிவன
உயிர் உறு தொடர் அற எறிவன உலகினில்
அரியன பெரிய நும் அடியினை அடைதும்

பகலவனின் ஒளியையும் வெல்லும் ஒளி பொருந்தியவை, எழுந்தருளிய இடத்தில் பகை, பசி, நோய் முதலியன நீங்கச் செய்பவை, செந்தாமரை மலர் மீது செல்லக்கூடியவை, காமனைக் கலங்கச் செய்வன, உயிர்கள் அநாதியாக அடைகின்ற பாவ, திரவிய, நோவினைகளை நீக்குவன, உலகத்தில் அடைதற்கரியன மிகப் பெருமை பொருந்தியவையுமான உங்கள் இணையடிகளைச் சேர்கின்றோம்.

1394. முறைபொறி மறை கெட முழுதும் ஓர் கணமதில்
அறியும் நல்லறிவுடை இறைவ நும் அடியினை
உறுதவர் மனமிசை உறைவன உயிர்உறு
பிறவியை அறஎறி பெருமைய சரணம்

முறையாக பொறிகளால் அடையும் ஞானமும், மறைப்பு வினைகளும் நீங்குமாறு மூவுலகப் பொருள்கள் அனைத்தையும் ஒருகணத்தில் அறியக்கூடிய நன்மை மிகு வாலறிவினையுடைய இறைவரே; உமது பாதங்கள் மாமுனிவர்களுடைய மனதில் தங்கக்கூடியவை. இல்லற உயிர்கள் எய்தும் பிறவிப் பிணியைக் கெடுக்கும் பெருமை வாய்ந்தவை எனவே சரணமடைகின்றோம்.

1395. குலிகமோடு இகலுவ குவிமுலை புணருநர்
தலைமையை நகுவன தவநெறி வருவன
உலகினை ஒருநொடி அகவையின் அளகுவ
மலைவில நிலைய நும் மலரடி அடைதும்

சாதிலங்கக் குழம்புடன் செஞ்சந்தனம் முதலியவைகளால் ஒப்பனைச் செய்யப்பட்டு அவற்றைத் தமது செந்நிறத்தால் தாழ்மைப் படுத்துபவை, திரண்ட முலைகளைச் சேரும் தன்மையோரின் இறைவனாம் தலைமையை இகழ்ந்து நகைக்கக்கூடியவை, உயர் தவநெறியால் கைவரப் பெற்று உலகனைத்தையும் ஒரு கணத்திற்குள் அளந்தறியத் தக்கவை, கெடுதலில்லாத வாலறிவு முதலிய குணநிலையினையுடையவை ஆகிய இத்தகு உமது மலரடிகளை அடைகின்றோம்.

1396. உயர்வற உயரிய உலகினின் உயிர்களின்
அயர்வற அறஅமுது அருளுவ அமரர்கள்
மயற்வற மணிமுடி அணிவன பணிவார்
துயர்வற எறியும் நும் துணையடி தொழுதும்

இவ்வுலகில் பான்மையாளர்களின் வருத்தங்கள் நீங்குமாறு அறஅமுதத்தை அருளும் தன்மையுடையவை, தேவர்களின் மாறுபட்ட மயக்கங்கள் நீங்குமாறு அவர்தம் அழகிய மணிமுடிகளை அணியக்கூடியவை, பணிவோர்தம் துயரமெல்லாம் ஒழியுமாறு வினைகளைக் கெடுப்பவை, இத்தகு பாதங்களைத் தொழுகின்றோம் (எனக்கூறி தொழுதார்கள்.)

1397. இனையன துதியினோடு இமையவர் இறைவரை
மனமலி உவகையின் வழிபடு முறைநாள்
வினைவழியாம் மும்மையோகு வியோகுசெய்
கனமலி ஊணில் அயோகிகள் ஆனார்.

இவ்வாறு பலவகை துதிகளுடன் அமரர்கள் இருகடவுளரையும், மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வணங்கிச் சென்றவுடன் வினைகளுக்கு வழிகளாய் அமைந்த மனம், சொல், உடல் என்னும் யோகங்களை நீக்குகின்ற, பிறபொருள் எதனையும் ஏற்றுக்கொள்ளாத மிக உயர்ந்த அயோகி கேவலத் தன்மையினை எய்தினர்.

1398. ஆயிடை ஐந்தினோடு எண்பது வெவ்வினை
மாய எழுந்து கணத்து உலகுச்சியை
மேயினர் விண்ணவர் மண்ணவர் மேனிகட்கு
ஆயசிறப்போடு வந்தனர் அங்கே.

அந்த அயோகி கேவலி குணநிலை முடிவில் கொடிய அகாதி வினைகள் எண்பத்தைந்தும் ஒழிந்தன. அக்கணமே மேலெழும் தன்மையால் உலகுச்சியை அடைந்தனர், அதாவது வீடு எய்தினர். அடுத்து அமரர்களும், மனிதர்களும் முக்தி எய்திய அவர்தம் உடல்களுக்கு செய்யவேண்டி, முறைப்படி பூஜா திரவியங்களுடன் அவ்விடத்தே பரிநிர்வாண பூஜைக்காகக் குழுமினர்.

1399. பொன்னரி மாலை சாந்தம் சுண்ணம் பூமாலை தூமம்
இன்னன பலவும் ஏந்தி இமையவர் இறைஞ்சும் எல்லை
மின்னென முனிவர் மேனி மறைந்தன வியந்து நோக்கிப்
பன்னரும் துதியராகி வானவர் பணிந்து போனார்.

ஒளிமிக்க பொன்மாலைகள், நறுமண சந்தனம், சுண்ணம், மலர் மாலைகள், அகில் தூபம் இன்னும் இது போன்ற பலவகைப் பொருள்களை ஏந்தியவர்களாய் அமரர்கள் அர்ச்சித்து பரிநிர்வாண பூஜையைச் செய்து வணங்கி நிற்கும் காலத்தே அவ்விரு முனிவர்களின் உடல்கள் மின்னலைப் போல் மறைந்தன. அக்காட்சியை வியந்து நோக்கிய தேவர்கள் கூறுதற்கரிய பலவகைத் துதிகளைச் செய்து வணங்கிச் சென்றனர்.

1400. முடிவிலாத் தடுமாற்றம் முதல்கிழிய மூவர்தம் முறையில் தோன்றி
இடையில் ஆம்வினை முதலாம் மோகம் ஏறிந்து ஆர்வம் இலா இயல்பில் தோன்றிக்
கடையிலாக் காதிகெடக் காட்சி வலி அறிவு இன்பம் கண்ணே தோன்றித்
தொடர்வெலாம் அறவெறிந்து தோன்றி நாற்குணத்தினும் நற்சுயம்பு வானார்

அநாதியாகிய சம்சாரத்திற்குக் காரணமான மித்யாத்துவம் என்னும், தரிசன மோகனீயமானது ஒழிய நற்காட்சி, நல் ஞானம், நல் ஒழுக்கமென்னும் மும்மணிகளாகிய அமுதங்கள் முறையாகத்தோன்றி உயிரிடத்து உண்டாகும் வினைக்கெல்லாம் காரணமாகிய சாரித்திர மோகனீயத்தை ஒழித்து விருப்பு, வெறுப்பற்ற இயல்பு நிலையில் முடிவிலா காதி வினைகள் கெட்டொழிய கடையிலாகாட்சி, கடையிலா வீரியம், கடையிலா ஞானம், கடையிலா இன்பம் தம்மிடத்தே தோன்றியபின் அகாதிவினைகளையும் ஒழித்து மற்ற நான்கு குணங்களுடன் நன்மைமிகு நிச்சய நிலை எய்தினர்.

1401. மணிமலிந்த ஒளி எனவும், மலர் நிறைந்த விரை எனவும் மல்குசந்திரன்
துணி உமிழ்ந்த தண்மையினும் தோன்றிய அப்பேரின்பத்து உள்ளே தோன்றி
இணை பிறிதும் இலராகி இமையவரும் மாதவரும் இறைஞ்சி ஏத்தப்
பணிவரிய சிவகதியின் அமர்ந்திருந்தார் அற அமிர்தம் உண்டார் அன்றே

அறமாகிய அமுதத்தைக் கேட்டுப் பயனடைந்த இவ்விருவரும், இரத்தின மணிகளில் நிறைந்த ஒளிபோலவும், மலர்களில் பரந்த நறுமணம் போலவும், மணம் மிக்க சந்தனக் கட்டையின் குளிர்ச்சி போலவும், உயிரிடத்து அதன் இயல்பாகத் தோன்றிய பேரின்பத்தில் விளங்கி உவமையற்றவர்களாய் தேவர்களும் மாமுனிவர்களும் வணங்கி ஏத்த தாழ்வற்ற வீட்டுலகில் பொருந்தி நின்றார்கள்.

1402. மதுரை நல் இராமை தேவன் மலையில் சீதரை காவிட்டத்து
அதிர்கழல் அமரன் பின்னும் அரதனமாலை வானோன்
விதியினால் அச்சுதைக்கண் வீதிபீதன் இலாந்தைக்கு
அதிபதி ஆதித்தாபன் மேரு நல் அகதி வேந்தன்

இவர்கள் இருவருள் மேருவானவர், முதலில் மதுரை பிறகு இராமதத்தை அடுத்து பாஸ்கர ப்ரபதேவன், அதன்பின் விஞ்சையர் உலகில் சீதரை என்னும் பெண், தொடர்ந்து காபிட்ட கல்பத்து தேவன், மேலும் அரதனமாலை பிறகு அச்சுத கல்பத்து தேவன் அப்புறம் வீதபயன் என்னும் பலதேவன், பின்பு லாந்தவ கல்பத்து ஆதித்யாபதேவன் இறுதியில் மேருவாகப் பிறந்து நன்மைமிகு வீடு பெற்று அகதிவேந்தனாகினான்.

1403. வாருணி பூரசந்தன் வானவன் மங்கை வானோன்
ஏரணி இரதனாயுதன் அச்சுதன் விபீடணன்
ஆரழல் நரகன் வேந்தன் அமரன்பின் சயந்தன் அம்பொன்
தாரணி தரணன் பைந்தார் மந்தரன் சிவகதிக்கோன்

அவருள் மந்தரன் – முதலில் வாருணி பிறகு பூரணச் சந்திரன், அடுத்து அமரன் தொடர்ந்து யசோதரை மீண்டும் தேவன் அப்புறம் இரத்தினாயுதன் பின்பு அச்சுதகல்பத்து தேவன், பிறகு விபீடணன் என்னும் வாசுதேவன், அடுத்து அழல்மிக்க நரகத்தில் நாரகன், பிறகு ஸ்ரீதாமா என்னும் அரசன், மறுபிறவியில் பிரம்ம கல்பத்து தேவன், அதன்பின் சயந்தன் என்னும் அரச குமாரன், அப்புறம் அழகிய தரணேந்திரன் தொடர்ந்து மந்தரன் என்னும் ராஜகுமாரனாய் பிறகு மூவுலகத்து வேந்தனாக முக்தி எய்தினான்.

1404. இனையது வெகுளியின் இயல்பு மாற்றியல்பு
இனையது வினைகளின் இயல்பு பற்றியல்பு
இனையது பொரிளினது இயல்பு வீட்டியல்பு
இனையது திருவறத்து இயல்பு தானுமே.

சினத்தின் விளைவு, பிறப்புக்களின் இயல்பு, வினைகளின் தன்மை, ஆசையின் விளைவு, உயிர் முதலிய பொருள்களின் இயல்பு, வீட்டுலகின் இயல்பு, நல்லறத்தின் இயல்பு ஆகியவை இப்புராணத்தில் கூறியவாறாகும்.

1405. அறமலது உறுதிசெய்வார்கள் தாம்இலை
மறமலாது இடர்செய வருவதும் இலை
நெறியிவை இரண்டையும் நினைந்து நித்தமும்
குறுகுமின் அறநெறி குற்றம் நீங்கவே.

நல்லறத்தைக் காட்டிலும் நன்மை செய்பவரில்லை. கொடிய தீயசெயலைக் காட்டிலும் தீமை தர வல்லதுமில்லை, இந்த இரண்டு நெறிகளையும் நன்கு சிந்தித்து நாள்தோறும் பாபகாரணங்களாகிய விருப்பு வெறுப்பாகிய குற்றங்கள் நீங்குமாறு அறநெறியினைச் சேருங்கள்.

1406. ஆக்குவது ஏதெனின் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனின் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனின் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனின் விரதம் காக்கவே.

ஆற்றவேண்டியது நல்லறம், நீக்கவேண்டியது சினம் ஆய்ந்துகொள்ள வேண்டியது உயர்ஞானம், வழுவாது காக்கவேண்டியது உயர் ஒழுக்கமாகும்.

ஆயிரத்து நானூற்றின் மேலும் இரு மூன்றாம்
பாயபுகழ் மேருக்கள் மந்தரர்பால் – தூய
தவராசராசன் குறுமுனிவன் தந்த
பவரோக மந்திரமாம் பாட்டு.

தூய தவத்தினை மேற்கொண்டு தவ அரசனாய் விளங்கிய வாமன முனிவரால், மேரு மந்தரர்கள் புராணமாகப் பாடப்பட்ட இந்த ஆயிரத்து நானூற்று ஆறு செய்யுட்களும், பிறப்பாகிய கொடிய நோயைப் போக்கும் மந்திரங்களாகும்.

மேரு மந்தர புராணத் தெளிவுரை முற்றும்.